Koviloor Digital Library

A. No. 4403

சுபம்.

சிதம்பரம்

இராமலிங்கப்பிள்ளை அவர்களால்

திருவாய்மலர்ந்தருளிய

திருஅருட்பா திருமுறையில்

ஆறுவது திருமுறையின்

மூலமும் — உரையும்

முதல் பாகம்.

கோவிலூர் ஆதீனம்

சி. வே. சின்னப்பநாயகர் கேட்டுக்கொண்டபடி

வாணியம்பாடி—கோவிந்தபுரம்,

ரு. அக்கீம். அப்துல்வஹ்ஹாப் சாயபு

கோவிலூர் - 630 307

அவர்களால்

மதிராஸ்

ஜரிவ்ஷ் அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1906.

[*Registered Copyright.*]

1522/148

Koviloor Digital Library

Koviloor Digital Library

சுபம்.

சிதம்பரம்

இராமலிங்கப்பிள்ளை அவர்களால்

திருவாய்மலர்ந்தருளிய

திருஅருட்பாத் திருமுறையில்

ஆறாவது திருமுறையின்

மூலமும் — உரையும்

முதல் பாகம்.

இதனை

சி. வே. சின்னப்பநாயகர் கேட்டுக்கொண்டபடி

வாணியம்பாடி—கோவிந்தபுரம்,

கு. அக்ரம். அப்துல்வஹ்ஹாப் சாயபு

அவர்களால்

மதிராஸ்

ஜர்ஷ் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1906.

[Registered Copyright.]

சுபம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

முகவுரை.

வெண்பா

சிகர மிசைகுடிகொண்ட சின்மயனே யுனது
நகரமிசை நானொருவனலனோ-அகரம்
முதலாய்கொண்டோனே முனிவர்களினின்போனே
முதலே இதற்குத் துணை.

அண்ட சராசரங்கள் யாவற்றையும் படைத்து காத்து அழிக்கும் வல்ல கடவுளின் செய்கைகளை ஓர் அணுப்பிரமாணமும் அறியாத என்போலொத்த மாந்தர்கள் கடவுளின் அநுக்கிரகம் பெறுவான் வேண்டி சிதம்பரம் இராமலிங்கப்பிள்ளை அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பாவென்னும் அரிய நூலை யாவருக்கும் பயன்படுமாறு ஆறுவது திருமுறையை நமது இஷ்டர்கள் பலராலும் எம்மை அர்த்தமிட்டு தரும்படியாய் கேட்டுக்கொண்டமையால் யானும் அதில் சிலவற்றை உலக உபகாரமாக என்னால்கூடியவாறு உரையிட்டு வெளிப்படுத்தானிற்கிறேன். இந்நூல் கையேந்தும் புனிதர்கள் யாதொரு வழுக்களை நோக்கியகாலத்து அவற்றை திருத்தி யெமக்கும் தெரியப்படுத்த கோரிக்கை.

இங்ஙனம்

கு. அ. அ. வ.

Koviloor Digital Library

உ

ஆண்டவன் துணை.

இராமலிங்கபிள்ளை அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருஅருட்பா திருமுறைகளில்

ஆறாவது திருமுறை.

முதலாவது ஆற்றாமை.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

எழுவினும்வலியமனத்தினேன்மலஞ்சா
ரீயினும்நாயினுமிழிந்தேன்
புழுவினுஞ்சிறியேன்பொய்விழைந்துழல்வேன்
புன்மையேன்புலைத்தொழிற்கடையேன்
வழுவினும்பெரியேன்மடத்தினும்பெரியேன்
மாண்பிலாவஞ்சகநெஞ்சக்
குழுவினும்பெரியேனம்பலக்கூத்தன்
குறிப்பினுக்கென்கடவேனே.

(இதன்பொருள்):—எழுவினும்=கெட்டியாகிய பாறாங்கற்களைத் துளைத்து தவிடுபொடியாக்கும்படியான எகுவாகிய உருக்கினிலும், வலிய=கெட்டிப்பட்ட அதாவது எகுவானது நெருப்பின்கண் உருகி தண்ணீராய் போகும் அப்படிப்பட்ட எகுவைக்காண உறுதியுள்ள, மனத்தினேன்=மனத்தையுடையவன். அதாவது உருகாத இரக்கமில்லாத தன்மையை

Koviloor Digital Library

யுடைய நெஞ்சுடையவன், மலஞ்சாரீயினும்=மலத்திலுண்டாயிருக்கும் தூர்வாசனைக்கும், அதை தின்பதற்கும் சேர்ந்திருக்கும்படியான வண்டாகிய ஈயினிலும், நாயினுமிழிந்தேன்=இன்னம் அந்த மலத்தின்கண்ஓடி தின்றுகளிக்க சேர்ந்திருக்கும்படியான சுணங்களிலும் அதிக இழிவானவன் அதாவது கேவலம் அதைவிட தாழ்ந்தவன்,—புழுவினும் சிறியேன்=உன்னுடைய படைப்புகளில் அற்பமாகிய மலத்தில் உற்பத்தியாகி அந்த மலத்தைத்தின்று அவ்விடம் சுத்தியாக்கி வைப்பதுபோல் யான் அந்த அற்பபிராணியின் உபகாரம்போலொத்தது செய்யாததினால் அந்த கிருமிகளிலும் சின்னவன்; பொய் விழைந்துழல்வேன்=பொய்யென்கிற அபத்தவார்த்தையையெந்நேரமும் சொல்லிக்கொண்டு உழன்றுதிரிகிறவனுயிருக்கிறேன், புன்மையேன்=இன்னம் யெவ்வஸ்துக்களிலும் அற்பமானவன், புலைத்தொழிற்கடையேன்=சண்டாளர்கள் செய்யாநின்றஈனத்துமான கொலை முதலிய தொழில்களில் இனி இல்லையென்று சொல்லும்படியான இழிவையுடைய வகைகளில் கடைசியானவன்,—வழுவினும் பெரியேன்=தவறுதல் செய்யும்படியான குற்றங்களில் மிகைத்தோன் அதாவது குற்றம் யாவற்றையும் செய்யும்படியாக கங்கணம்கட்டி அதிகமாகிய குற்றங்களை சம்பாதித்தவன், மடத்திலும் பெரியேன்=புத்தியில்லாத மூடர்களினும் பெரிய மூடனனவன், மாண்பிலா வஞ்சகநெஞ்சக்=மாட்சிமையென்னும் பொருமையில்லாத மனத்தினுள் ஒருவனுக்குக் கேடுசெய்யவேண்டுமென்கிற வஞ்சகத்தை குடியாக வைத்துக்கொண்டிராநின்ற,—குழுவினும் பெரியேன்=மேல்சொல்லியிராநின்றவர்களின் கூட்டத்திலும் நான் அதிகமாகிய கூட்டங்களின் கெட்டகுணங்களைமட்டிம் வைத்திருக்கும்படியான பெரியவன், இத்தியாதி குற்றங்களையுடைய நான்; அம்பலக்கூத்தன்=வெட்டவெளியில் கூத்தாடுகின்றவனுடைய, குறிப்பினுக்கு=அவனை பார்க்கும்படியாயிருக்கிற ஓர் அடையாளத்திற்கு, யென்கடவேனே!=யென்னமாய் பொருந்துவேன். (என்றவாறு).

Koviloor Digital Library

இப்படிப்பட்ட கெட்டகுணங்களையுடைய நான் அவனின்மேலாம் பரமான அருள்பெற முடியாதோ என்னமாய் என்னை ஆண்டுகொள்வான் யென்பது கருத்து. (க)

கற்றமேலவர்தமுறவினைக்கருதேன்
கலகர்தமுறவினிற்களித்தேன்
உற்றமேதகவோருவட்டுறவிருந்தே
னுலகியற்போகமேயுவந்தேன்
செற்றமேவிளையுஞ்சிறுநெறிபிடித்தேன்
தெய்வமொன்றெனுமறிவறியேன்
குற்றமேயுடையேனம்பலக்கூத்தன்
குறிப்பினுக்கென்கடவேனே.

(இ - ள்.) கற்றமேலவர் தமுறவினை=பரமார்த்தவழியினருளில் பழகியிரானின்ற மேலோர்களென்னும் பதவிபெற்றவர்களுடைய நேசத்தை, கருதேன்=ஒருநாளாவது அப்படிப்பட்டவர்களுடைய சேர்க்கையில் இருக்கவேண்டுமென வெண்ணாதவன், அதாவது அப்படிப்பட்ட யெண்ணம் என் மனதில் உதித்தது கிடையாது, கலகர்தமுறவினில்=சதாகாலமும் போர்செய்துக் கொண்டிராநின்றவர்களினுடைய சேர்க்கையில், களித்தேன் = அவர்களோடு சேர்ந்து அவர்கள் செய்யாநின்ற கலகத்தொழில்களைப்பார்த்துப்பார்த்து சந்தோஷமாய்செய்யட்டும்யென்று ஆனந்தமடைந்தவனாயிருந்தேன்,—உற்றமேதகவோர்=மனத்தின்கண்வஞ்சனை முதலியவைகளை வைத்திருப்போர்களாகியகபடமனத்தினர்களோடு,உவட்டுறவிருந்தேன்=அவர்கள் செய்யாநிற்கும் கபடமாகிய செய்கைகளைப் பொருந்தினவனாக அவர்களோடு கூடியிருந்தேன், உலகியற் போகமேயுவந்தேன்=இன்னம் உலக இயற்கையாகிய இன்பத்தை ஆசையாக பொருந்திக்கொண் டிருந்தேன்,—செற்றமேவிளையும் = பகைகள் யெக்காலமும் செய்யவேண்டும் என்று உண்டாக்கும்படியான, சிறு நெறி பிடித்தேன்=சிறியதொரு வழியைப் பிடித்திட்டேன், தெய்வமொன்றெனும்=

Koviloor Digital Library

கம்மை படைத்துக்காத்து அழிக்கும் வல்லகடவுள் ஒன்றுதான் யென்று சொல்லும்படியான, அறிவறியேன்=மெய்யாகிய புத்தியை நான் அறியவே இல்லை, குற்றமே யுடையேன்= இத்தியாதிகுற்றங்களையுடைய நான், அம்பலக்கூத்தன்=வெட்டவெளியில் கூத்தாடுகின்றவனுடைய, குறிப்பிறுக்கென் கடவேனே=அவன் யென்னை நல்ல அடியார்களின் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படியாக நல்ல அடையாளத்திற்கு நான் யென்னசெய்து யென்னமாய் கடைத்தேறுவேன். (எ - று.) (உ)

கடுமையேன்வஞ்சகக்கருத்தினேன்பொல்லாக்
கன்மனக்குரங்கனேன்கடையேன்
நெடுமையாண்பனைபோல்நின்றவெற்றுடம்பே
விசனேன்பாசமேயுடையேன்
நடுமையொன்றறியேன்கெடுமையிற்கிளைத்த
நச்சுமாமரமெனக்கிளைத்தேன்
கொடுமையேகுறித்தேனம்பலக்கூத்தன்
குறிப்பிறுக்கென்கடவேனே

(இ - ள்.) கடுமையேன்—குரூரம். கொடுமை, கோபம் முதலியவைகள் குடிகொண்ட மனதுடைய கண்டிப்பானவன், வஞ்சக்கருத்தினேன்=யெப்போதும் பிரத்தியார்க்கு வஞ்சகஞ்செய்யும்படியான நினைவையே நினைப்பாகக் கொண்டவன், பொல்லாக்கன்மனம்=கெட்ட இரக்கமில்லாத கடின நெஞ்சத்தையுடைய, குரங்கனேன்=குணங்கெட்ட செய்கையையுடைய, கடையேன்=யாவரிலும் தாழ்ந்தவன்,—நெடுமையாண் பனைபோல் நின்ற=யாருக்கும் பிரயோசனத்தைத் தராமல் நீட்டமாக நெடுகவளர்ந்து ஆண்பனை மரத்தைப் போல நிற்கின்ற வெற்றுடம்பேன்=ஒருவருக்கும் பிரயோசனத்தை தராமல் வளர்த்துவைக்கும் வெறுமையாகிய சரீரத்தையுடையவன். அதாவது; ஆண்பனைமரம் ஒருகாயும் தராத நெடுமையாய் வளர்ந்திருப்பதுபோல, நான் என்

Koviloor Digital Library

உடம்பில் நின்றும் அதாவது உடம்பாலும் உடம்பிலுள்ள அவயவங்களாலும் யாருக்கும் எந்த அற்ப பிரயோசனமும் செய்தவனல்லன், நீசனேன் = நீச்சமாகிய தொழில் செய்யப்பட்டவன், பாசமே உடையேன் = இந்த பிரபஞ்ச வாழ்க்கையில் பந்தத்தை யுடையவன், நடுமையொன்றறியேன் = இது நல்லவை இது தீயவை யென்று சொல்லும்படியானவற்றில் பிரித்து இதுதான் நலவுள்ளது யென நடுமையிலேயறியாதவன், கெடுமையில் கிளைத்த = கெட்டகுணங்களென்னும்யெருவால் வளர்ந்துகிற்கின்ற, நச்சுமாமரமென கிளைத்தேன் = நஞ்சுடைய வகைகளாகிய மரங்களில் பெரிய நஞ்சுள்ள மரமென வளர்ந்து தழைத்து இருக்கின்றேன்,—கொடுமையே குறித்தேன் = எக்காலமும் கொடுமையென்று சொல்லும்படியாகிய வஞ்சனைகளையே ஆதாரமாக யெடுத்துக்கொண்டிருக்கின்றேன் ஆதலால் இத்தியாதி குணங்களையுடைய நான்,அம்பலக்கூத்தன் = அம்பலத்தில் கூத்தாடுகின்ற கடவுளின் குறிப்பினுக்கென்கடவேனே = குறிப்பினுக்கு நான் என்னமாய் இவைகளைவிட்டு கடைத்தேறுவேன் (எ - று). (௩)

நிலத்திலும்பணத்தும் நீள்விழிமடவார்
நெருக்கிலும்பெருக்கிய நினைப்பேன்
புலத்திலும்புரைசேர்பொறியிலுமனத்தைப்
போக்கிவீண்போதுபோக்குறுவேன்
நலத்திலோரணுவுநண்ணிலேன்கடைய
நாயினுங்கடையனேனவையேன்
குலத்திலுங்கொடியேனம்பலக்கூத்தன்
குறிப்பினுக்கென்கடவேனே.

(இ - ள்.) நிலத்திலும் = அதாவது ஆசைகள் யாவற்றிலும் கெட்டதாகிய பூமியை சேகரிப்பது, சம்பாதிப்பது, முதலிய ஆசையிலும், பணத்தும் = இரண்டாவது ஆசையாகிய பொன்னசை யென்று சொல்லும்படியான நகைநட்டுகள் சம்பாதிக்கும்படியாகிய பண ஆசையிலும், நீள்விழிமடவார் =

Koviloor Digital Library

மூன்றாவது பெண்ணாசையென்பவனவற்றில் பிரகாசம் பொருந்திய கெண்டைபோன்று நீண்ட கண்களின் பெண்களானவர்கள், நெருக்கிலும்=அவர்களின் செந்தாமரை புஷ்பம்போலொத்த மெல்லிய கரங்களால் நெருக்குதல்யென்னும் ஆலிங்கனத்திலும், பெருக்கிய நினைப்பேன்=யெந்நேரமும் இம்மூவகையாகிய ஆசையிலும் எவ்வகையிலாவது ஒழியாது அதேநினைப்பாய் இருப்பவன்,—புலத்திலும்=யெந்நேரமும் கல்வியிலும், புரைசேர்=குற்றம்பொருந்திய, பொறியிலும்=காரணங்களிலும், மனத்தைப்போக்கி=நல்வழியான சத்கருமங்களில் மனதைச் செலுத்தாமல் மெய்ம்மையாகிய காரியங்களில் மனதைவிட்டு, வீண்போது போக்குறவேன்=நமக்குகிடைத்தநாள் ஒன்றின் அறுபதுநாழிகையையும் அவமேவீணாகக்கழிக்கின்றவனாயிருக்கின்றேன், நலத்திலோரணுவு=நமக்குநல்லமையாகிய காரியங்கள் செய்வதற்கு மலைமலையாக இருக்க அப்படிபட்ட நன்மைகளில் ஓர் அற்பஅளவும், நண்ணிலேன்=செய்வதற்கு நான் நினைக்கவேயில்லை, கடையநாயினுங்கடையேன்=நான் கடைசியாக சொல்லப்புகும்காலத்தில் நாய்க்கும் கீழானவனாயிருக்கின்றேன், அவையேன்=அப்படி பகர்வது யேனெனில் அந்த நாயானது முத்திபெற்றதாயிருக்கிறது, ஆதலால் இன்னம் அந்த நாயினுடைய,—குலத்திலும் கொடியேன்=வகைருக்களின் குலத்திலும் பெரிய கெட்டவனாயிருக்கிறேன், நாய் திருவருள்பெற்றிருப்பதாக இருப்பதினால் அந்த குலத்திலும் நான் கெட்டவன் யென்றார். இத்தியாதி குணங்களையுடைய நான், அம்பலக்கூத்தன்=என் மனமாகிய அம்பலத்தில் கூத்தாடிபிரானின்ற, குறிப்பினுக்கென்கடவேனே=அவனுடைய குறிப்புக்கு நான் வழிபட்டு யென்னமாய்விட்டு கடைத்தேறுவேன். (எ - று.) (௪)

செடிமுடிந்தலையுமனத்தினேன்றன்பச்
  செல்வினாலரிப்புண்டசிறியேன்
அடிமுடியறியுமாசைசற்றறியே
  னறிந்தவர்தக்கலையடையேன்

Koviloor Digital Library

படிமுடிவழித் தூக்கடிகொளுங்கடையர்
பணத்திலுங்கொடியனேன்வஞ்சக்
கொடிமுடிந்திடுவேனம்பலக்கூத்தன்
குறிப்பினுக்கென்கடவேனே.

(இ - ள்.) செடிமுடிந்தலையும்=பாவங்களையே கட்டி மூட்டையாகத் தோள்மேலும் தலைமேலும் தூக்கிக்கொண்டு தெருக்கள் தோறுமலைந்து திரியாநின்ற, மனத்தினேன்துன்ப=வருத்தங்களினாலுண்டாகும் விசனங்களானது எந்நேரம் வருந்திக்கொண்டிராநின்ற மனதையுடையவன், செல்லினலரிப்புண்டசிறியேன்=இன்னம் என்னுடைய மனமானது பாசாதனங்களின்மேல் பற்றில்லாதபடி இகத்தின் பலனை மாந்துவதில் உண்டாகும்படியான விசனசாகரம் யென்னும் கரையான்களானவை தின்று சல்லடைக்கண்போலான மனத்தையுடைய சிரியவன்,— அடிமுடியறியும்= உன்னுடைய ஆதிஅந்தங்களை அதாவது; வல்ல கடவுளின் சிருஷ்டிகளினாலும், மற்றக் காண்பனவற்றாலும், துவக்கம் முடிவு வகைகளை அறியும்படியான, ஆசை சற்றறியேன்=ஆசையென்னும் இன்பத்தை சற்றாவது மனதில் நினைத்தவனுமல்லன், அறிந்தவர்தங்களை அடையேன்=அப்படிப்பட்ட கடவுளின் துவக்கம், முடிவு, நடுவு, நிலைமை, அறிந்திருக்கும்படியான பெரியோர்களின் இருப்பிடத்தில் சென்று அவர்களால் இம்மாதிரி யென அறியும்படியானவகையை பெற்றுக்கொள்ளவுமில்லை,— படிமுடி வழித்து=தலையை நல்லவார்த்தைகளால் அதாவது நயவஞ்சகம் பேசி தலையைதடவி, பணம்பெறும்படியானவைகளில், கடிகொளும் கடையர்=சந்தோஷங் கொள்ளும்படியான கீழ்மக்கள்களின், பணத்திலும்=அவர்கள் பறித்திருக்கும்படியான பொருளிலும், கொடியேன்=தீய்மையானவன், வஞ்சக் கொடி முடிந்திடுவேன் = வஞ்சகம் செய்யும்படியானவர்களுக்கெல்லாம் நானே முதன்மையாக வஞ்சகமென்னும் கொடியைபிடித்து உயர்த்திக்கொண்டு முன்னடப்பவனாயிருக்கும், அதாவது; வஞ்சகம் செய்யும்படியாக தூண்டுகிற

Koviloor Digital Library

வனுயிருக்கிறேன், இத்தியாதி குணங்களையுடைய நான், அம்பலக்கூத்தன் = வெட்டவெளியில் கூத்தாடுகின்ற, குறிப்பினுக்கென்கடவேனே – அவன் நோட்டத்திற்கு நான் நன்மையானவன் யென்று யெவ்வாறு புலப்படுவேன். (எ-று.) (ரு)

அரங்கினிற்படைகொண்டுயிர்க்கொலைபுரியு
    மறக்கடையவரினுங் கடையேன்
இரங்கிலோர்சிறிது மிரக்கமுற்றறியே
    னியலுறுநாசியுட்கிளைத்த
சிரங்கினிற்கொடியேன் சிவநெறிபிடியேன்
    சிறுநெறிச்சழக்கையேசிலுகுக்
குரங்கெனப்பிடித்தேனம்பலக்கூத்தன்
    குறிப்பினுக்கென்கடவேனே.

(இ - ள்.) அரங்கினில்படைகொண்டு = போர்க்களத்தில் ஆயுதங்களைக்கையினிற்பிடித்துக்கொண்டு, உயிர்க்கொலைபுரியும் = ஜனங்களின் அதாவது சேனைகளின் உயிர் போகும்படியாக பதைக்கத்துடிக்கவெட்டும்படியாகிய, அறக்கடையவரினுங்கடையேன் = பாவங்களைச்செய்து கீழ்மக்களாயிருக்கின்றவர்களிலும் கீழானவன், – இரங்கிலோர் சிறிது = இரக்கம்செய்யும்படியானவைகளில் ஒருவகையில் கொஞ்சமாவது, இரக்கமுற்றறியேன் = இரக்கம இம்மாதிரி யென்றாவது அறியாமலும், ஏழைகளின்பேரில் இரக்கம் செய்வது இன்னதுயென்று அறியமாட்டேன். அதாவது; இரக்கம் இன்னதன்மையிலிருக்கிறதென்று நான் ஒருபோதும் அறிந்தவனில்லை, இயலுறு நாசியுட்கிளைத்த = வாசனைகளை கிறகிக்கும்படியான தன்மையை கொண்டிராநின்ற மூக்கினுள் கிளைகளைவிட்டு படர்ந்திராநின்ற, – சிரங்கினிற் கொடியேன் = ஓர் புண்ணினும் கெட்டவன், அதாவது மூக்கிற்குள் உண்டாகும் பீநசம் யென்னும் வியாதியானது பலவகையானவலிகளையும் துர்வாசனைகளையும் மூக்கிலிருந்து சளி நீர்முதலியவை ஒழுக்குகளும் நல்வாசனையை கிறகிக்கும் தன்மையில்லாததினால் அப்படிப்பட்ட

Koviloor Digital Library

சிறங்கேகெட்டது யென்றும் நான் அப்படிப்பட்ட சிறங்கைக் காண கொடியவன் யென்றும் சொன்னார், சிவநெறிபிடியேன் = கடவுளின் வழிவகையருக்களை அறியும்படியான வழியை பிடிக்கவேஇல்லை, 'சிறுநெறி சழக்கையேசிலுகும்= அறியாமையாகிய தப்பிதங்களுள்ள துன்பங்கள் யாவும் அடங்கி இராநின்ற சிறிய வழியையே,—குரங்கெனப்பிடித்தேன்= இப்படிப்பட்ட குணங்கெட்டதையே சன்மார்க்கமென பிடித்து அதில் ஆழ்ந்தவனாயிருக்கின்றேன்,ஆதலால் இத்யாதிகுணத்தையுடைய நான், அம்பலக்கூத்தன் = வெட்டவெளியில் கூத்துகளை நடத்திபார்த்து அளித்திருக்கும்படியாகிய ஜீவன் முக்தனுடைய, "குறிப்பினுக்கெனக்-கேவேனே=ஞானமார்க்கத்தையுடையும்படியாகிய ஓர் அடையாளத்தை அறியநான் யென்னமாய் கண்டுபிடிப்பேன். (எ - று.) (கூ)

வாட்டமேயுடையார் தங்களைக்காணின்
மனஞ்சிறிதிரக்கமுற்றறியேன்
கோட்டமேயுடையேன்கொலையனேன்புலையேன்
கூற்றினும்கொடியனேன்மாயை
யாட்டமேபுரிந்தேனறத்தொழில்புரியே
னச்சமுமவலமுமியற்றுங்
கூட்டமேவிழைந்தேனம்பலக்கூத்தன்
குறிப்பினுக்கென்கடவேனே.

(இ - ள்) வாட்டமேயுடையார்=மனமானது பலவழிகளில் துன்பபப்பட்டு முகவாட்டம்; அதாவது; சோம்பின முகமுடையோர். தங்களைக்காணின்=வாட்டமுடையவர்களாகிய அடியார்களைக்காணுங்காலத்தில், மனஞ்சிறிதிரக்கமுற்றறியேன்=யென்னுடைய நெஞ்சமானது அப்படி வாட்டமடைந்தவர்களைப் பார்த்து கொஞ்சமாவது இரக்கங் கொண்டதை எந்த காலத்திலாவது நான் அறிந்ததேஇல்லை,—கோட்டமேயுடையேன்=அநியாயம் செய்வதை என் மனத்தில் யெப்போதும் குடிகொள்ளும்படியாய் இருத்தியவன், கொலைய

Koviloor Digital Library

னேன்புலையனேன் = கொலைசெய்யும்படியாகிய சண்டாளனு னவன், கூற்றினுங்கொடியனேன் = கொல்லவரும்படியாகிய கொடிய சத்துருவினும் கெட்டவனாயிருக்கிறேன், யாவை = அழிந்துபோகும்படியான அதாவது அழிந்துபோகும்படியான வகைகளை மகுதமாகச்செய்தவன், ஆட்டமேபுரிந்தேன் = பிரபஞ்சத்தில் கூத்தைபோலுள்ள அறத்தொழில்புரியேன் = யெந்நாளும் நிலைநிற்கும்படியான தர்மதொழிலை செய்தலே மிடையாது, அச்சமுமவலமும் இயற்றும் = மனத்தின்கண் பயந்தரும்படியானதும் வீணானதும் ஆகியவற்றைச்செய்யும், கூட்டமே விழைந்தேன் = மேலே சொல்லியிருக்கும்படியான வகைகளை செய்யும்படியான கூட்டத்திலேயே சேர்ந்து இருப்பதுந்தவிர அப்படிப்பட்ட ஆசையையே வகித்தவன் ஆகையால் இத்தியாதிகுணங்களை வகித்தயான், அம்பலக்கூத்தன் = அம்பலத்தில் நடனமாடுகின்ற, குறிப்பினுக்கு = அவனைக் காணும்படியாகிய ஒரு அடையாளத்திற்கு, யென்கடவேனே = என்னமாதிரி உய்வேன் (எ - று.) (எ)

கலைத்தொழிலறியேன்கள்ளுணுங்கொடியேன்
கறிக்குழல்நாயினுங்கடையேன்
விலைத்தொழிலுடையேன்மெய்யெலாம்வாயாய்
விளம்புறும்வீணனேனசுத்தப்
புலைத்தொழில்புரிவேன் பொய்யனேன்சிற்றம்
பொக்கியமனத்தினேன்பொல்லாக்
கொலைத்தொழில்புரிவேனம்பலக்கூத்தன்
குறிப்பினுக்கென்கடவேனே.

(இ - ள்) கலைத்தொழிலறியேன் = கல்வியாகிய வித்தையைக்கற்று அதினால் நல்வழியறியும்படியான தொழில் எதுவும் தெரியாதவன், கள்ளுணுங் கொடியேன் = கள்குடிப்பதோ பெரிய பாவம் அப்படிப்பட்ட கள்ளை சாப்பிடும் கெட்டகுணத்

Koviloor Digital Library

தையுடையவன், கறிக்குழல் நாயினுங் கடையேன் = கடிக்கும் படியான வாயையுடைய நாயினும் கீழ்மையானவன், — விலைத் தொழிலுடையேன் = இன்று ஒரு தேவதைக்கு தொண்டுசெய்வது நாளை ஒரு தேவதைக்கு தொண்டுசெய்வது இம்மாதிரியாக கண்ணில்கண்ட காதில்கேட்ட பலமாதிரியான தேவதைகளுக்கும் தொண்டுசெய்தது அதாவது; இப்படிபட்ட தேவதைகளுக்கு என் சரீரத்தையும் மனத்தை விலைபடுத்தியவன், கடவுளுடைய தொண்டுக்கு மனதைச் செலுத்தாமல் மேல்காட்டியவைகளுக்கு விலைபடுத்தும் தொழிலை கைக்கொண்டவன், மெய்யெலாம் வாயாய் = என்னுடைய உடம்பெல்லாம் பொய்யினால் நிறைந்திருக்கும்படியான வாயை யுடையவனென்று, விளம்புறும் வீணனேன் = யெல்லோரும் சொல்லும்படியாகிய வீணாகிய ஒன்றுக்கும் பிறயோசனமில்லாதவன், அசுத்தப்புலைத்தொழில்புரிவேன் = சுத்தமின்மையாகிய சண்டாளத் தொழில்களைச் செய்பவன். பொய்யனேன் = இன்னம் பொய்யையே ஒருருவாகக்கொண்டவன், சீற்றம் = கோபம், பொங்கிய மனத்தினேன் = கொதித்து கிளர்ந்திருக்கும்படியாகிய மனத்தையுடையவன், பொல்லாக் கொலைதொழில்புரிவேன் = யாவரும்செய்வதற்கு அரிதாகிய கெட்டபாதகமாகிய கொலைத் தொழிலை யெந்நேரமும் செய்பவன், இத்தியாதி குணங்களை யுடைய யான், அம்பலக்கூத்தன் வெட்டவெளியில் நடனம் புரிகின்ற கூத்தனுடைய, குறிப்பினுக் கென்கடவேனே = அவன் போட்ட ஒரு அடியார் யென்னும் அடையாளத்திற்கு நான் சமமாய் இருப்பது யெப்படி (எ - று) (அ)

பணமிலார்க்கிடுக்கண்புரிந்துணுஞ்சோற்றுப்
பணம்பறித்துழல்கின்றபடிறேன்
எணமிலாதடுத்தார்க்குறுபெருந்தீமை
யியற்றுவேனெட்டியேயனையேன்

Koviloor Digital Library

மணமிலாமலரிற்பூத்தனனிருகான்
மாடெனத்திரிந்துழல்கின்றேன்
குணமிலாக்கொடியேனம்பலக்கூத்தன்
குறிப்பினுக்கென்கடவேனே.

(இ - ள்.) பணமிலார்க்கிடுக்கண் = பணமில்லாத ஏழைகளுக்கு யெந்நேரமும் வருத்தமென்னும் சக்கடத்தையே, புரிந்துணுஞ்சோற்று = அவர்களுக்குச் செய்து அவர்கள் சாப்பிடுகிறதற்கு வைத்திருக்கும்படியாகிய சாப்பாட்டையும், பணம்பறித்துழல்கின்றபடிறேன் = இன்னம் அவர்கள் வைத்திருக்கும்படியான பொருளையும் பிடுங்கிக்கொண்டு திரியாநின்றநினைவையுடையவன், — எணமிலாதடுத்தார்க்கு = அடைக்கலம்புகுதவேறு இடமில்லாது என்னை நம்பி என்னிடம் வந்தடுத்தவர்களுக்கு, உறுபெருந்தீமை = உள்ளனவாகிய பெரிய கெட்டத்தீமைச்செயல்களை, இயற்றுவேன் = தினந்தோறும் செய்து வரும்படியான மனதையுடையவன், யெட்டியேயனையேன் = யெட்டிமரத்தைப்போன்று கசப்புதரும்படியான குணத்தினையுடையவன், மணமிலாமலரில்பூத்தனன் = வாசனையில்லாது பூவுமில்லாது யான் இரண்டுமற்ற கொம்பைப்போல் இருக்கின்றேன், தவிற — இருகால்மாடெனத் திரிந்துழல்கின்றேன் = நான் இரண்டுகாலால் நடக்கப்பட்ட மாட்டுக்கொப்பாக கண்டவிடமெல்லாம் திரிந்து உழன்றுக்கொண்டிருக்கிறேன் தவிற, குணமிலாக்கொடியேன் - கொஞ்சமாவது நற்குணமென்பது இல்லாத தீக்குணத்தையுடைய கெட்டவன், இப்படிப்பட்ட குற்றமாகிய குணங்களையே நன்மையானதென பெற்றிருக்கப்பட்ட யான், அம்பலக்கூத்தன் = வெட்டவெளியில் நடனமிடுகின்ற கூத்தனுக்கு, குறிப்பினுக்கென் கடவேனே = அவனிடம் சேரும்படியாகிய பக்தர்களில் சேரும் நோக்கத்திற்கு நான் யென்னசெய்வேன். (எ-று.) (க)

Koviloor Digital Library

கடியரிற்கடியேன்கடையரிற்கடையேன்
கள்வரில்கள்வனேன்காமப்
பொடியரிற்பொடியேன்புலையரிற்புலையேன்
பொய்யரி[illegible]னேன்பொல்லாச்
செடியரிற்செடி[illegible]த்தேன்
தீயரிற்தீய[illegible]
கொடியரிற்கொடி[illegible]க்கூத்தின்
குறிப்பினுக்கெ[illegible]வேனே.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307

(இ - ள்.) கடியரில் கடியேன்=கடிந்து பேசும்படியான வர்களிலும் மிகக்கடுமையான பேச்சுடையவன், கடையரிற் கடையேன்=கீழானவர்களிலும் கீழானவன், கள்வரில் கள்வனேன்=திருட்டுத்தொழில் செய்யும்படியான சோரர்களிலும் இழிவான திருடனாயிருக்கிறேன், காமப்பொடியரில் பொடியேன்=மன்மதவாதையால் அடியுண்டு யெந்நேரமும் சிற்றின்பவாசையால் கிறைவுண்டு கிடக்காகின்ற சிறியவர்களிலும் மிககாமங்கொண்ட சிறியவன், அல்லது. காமமில்லாத சற்குணருக்கு காமம் மூட்டும்படியான வார்த்தைகளால் பசப்பி காமத்தீ மூட்டிவிடும்படியான சிறியவனாயிருக்கும் யென்று சொல்லலாம், புலையரில்புலையேன்=சண்டாளத்தொழில் செய்யும்படியான புலையராகிய நீசர்களிலும் மிகைப்பாய்ச் சண்டாளத்தொழில் செய்பவன், பொய்யரிற்பொய்யனேன்=பொய்சொல்லும்படியான அபத்தவாசகர்களாவது ஒருகால் மெய் சொல்லுவார்கள் அப்படிப்பட்ட மெய் யெப்போதும்பேசாத பொய்யர்களிலும் பெரிய பொய்யனானவன், பொல்லாச் செடியரில் செடியேன்=கெட்ட நச்சுமரம்யென்று சொல்லும்படியாகிய செடியின் குணம்படைத்தோரிடத்திலும் மிக்கான கெட்டகுணத்தையுடைய செடிபோன்றவன், சினத்தரிற்சினத்தேன்=கோபம்கொள்ளும்படியானவர்களிலும் மிகைப்பான கோபத்தையுடையவன், தீயரில் தீயனேன்=தன்னை அண்டினவர்களுக்கு யெந்நேரமும் கெடுதிசெய்யும்படியாகிய குணங்களையுடைய தீயோர்களிலும் மிகக்கடுமையான தீக்குணத்தை

Koviloor Digital Library

யுடையவன், பாபக்கொடியரிற் கொடியேன்=பாவம்செய்வது ளும் கொடிதாகிய பாவங்கள் செய்திருக்கும்படியான கெட்டவர்களிலும் அதிககடப்பான கெட்டபாவங்கள்செய்யும் கெட்டகுணத்தோன், இத்தகைய குணங்களையுடைய நான் அம்பலக்கூத்தன்=வெட்டவெளியில் நடமாடுகின்ற திருக்கூத்தனின், குறிப்பினுக்கென்கடவேனே=திருவருளைப்பெறும்படியாகிய குணம் சம்பாதிக்கின்றது நான் செய்வது யென்னவென்று தெரிவிக்க வேண்டுகிறேன்.—(எ-று.) (ய)

திருச்சிற்றம்பலம்.

ஆற்றாமை 1. முற்றுப்பெற்றது.

ஆக கூடிய விருத்தம். 10.

இரண்டாவது ஆற்றாமை.

இதுவுமது,

எண்சீரடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலத்திடையுங்கொடியனொருகுடித்தனத்துங்கொடியேன்
குறிகளிலுங்கொடியனன்றிக்குணங்களிலுங்கொடியேன்
மலத்திடையேபுழுத்தசிறுபுழுக்களிலுங்கடையேன்
வன்மனத்துப்பெரும்பாவிவஞ்சநெஞ்சப்புலையேன்
நலத்திடையோரணுவளவும்நண்ணுகிலேன்பொல்லா
நாய்க்குநகைதோன்றநின்றேன்பேய்க்குமிகவிழிந்தேன்
நிலத்திடைநானேன்பிறந்தேனின்கருத்தையறியே
னிர்க்குணனேநடராஜநிபுணமணிவிளக்கே.

(இதன்பொருள்.) நிர்க்குணனே=கடவுளே, நட=என் மனதின்கண் நடமாடாநின்ற, ராஜ=பூவுலகிலுள்ள இராஜர்கள் யாவருக்கும் இராஜ்ஞாவாயிராநின்ற, நிபுணமணி=

Koviloor Digital Library

மணிகள்யாவற்றிலும் தெளிந்த ஒளிவையுடைய, விளக்கே - விளக்கைப்போல் என்மனதினிடையில் சோதியாயிரானின்ற வல்லகடவுளே!, குலத்திடையும் = பூமியின்கண் உற்பத்தியாயிரானின்ற மனிதர்களின் மத்தியில்வழக்கடித்துக்கொண்டிருக்கும்மதாசாரத்தில்யென்சாதிபெரியது உன்சாதிசிறியது யென்ற வழக்கில் யான் பெரியதுயென சொல்லுவதர்க்கு இல்லாமல், கொடியேன் = மயங்கும்படியான மனவருத்தத்தையுடையவன், ஒருகுடித்தனத்தும் = இன்னம் பெண்சாதிபிள்ளை வீடு வாசல் முதலியவற்றிலும் அதிகமாக உழைத்து வருத்தப்பட்டு சம்பாதித்து சேர்க்கும்படியாகிய உலகவியாபாரங்களிலும், கொடியேன் = கிடந்து உழலுவதர்க்குத் தெரியாத சோம்பலுடையவன்,, குறிகளிலும் — உன்னிடம் அடையும்படியான நல்வழிகளை செய்யும்படியான அடையாளங்களில் எதும் செய்து இவன் நல்ல அடியார்களில் சேர்ந்தவன் யென்று சொல்லும்படியாகிய யெந்தகுறியும் என்னிடம் இல்லாத, கொடியேனன்றி = பாவியானவனும் தவிற, குணங்களிலும் = அந்த சாதுக்களினுடைய மேன்மைபாகிய இலக்ஷணங்களிலும் ஒருபாணராவது இல்லாத, கொடியேன் — பாவியானவன், மலத்திடையே -- மனிதர்களின் வயிற்றில்நின்றும் துர்க்கந்தத்துடன் வெளியே புறப்பட்டு எறியப்பட்டு கிடக்கும் மூலத்தின் சக்கையின்கண், புழுத்த — உற்பத்தியாகி நின்று சந்தோஷமாய் களித்து நெளிந்திராநின்ற, சிறு புழுக்களிலும் — சின்னகிறுமிகளிலும், கடையேன் — அந்த கிருமிகளானவை அந்த வலத்தைத்தின்று துர்கந்தத்தைப்போக்கி தானும் சம்பிரமம் அடைந்துபோகும்வண்ணம் இல்லாமல் வெவ்வேறு கவலைகளும் பராக்குகளும் பார்ததுப்பார்த்துச் சலிப்படைந்து கைசோறவிட்டு ஏமாந்து நிற்கும்படியான இவன் அந்த புளுக்களிலும் கீழ்த்தரமானவன், வன்மனத்துப் பெரும்பாவி = ஏ நிபுணமணிவிளக்கே: இந்த சடலமானது பெரும்பாவம் யெல்லாம் தனதென்று கங்கணம்கட்டிச்செய்த கன்னெஞ்சுடையது. அதிலுமோ, வஞ்சநெஞ்சப் புலையேன் = நல்ல சாதுக்களுக்

Koviloor Digital Library

கும் இன்னம் மற்றோர்களுக்கும் மனமஞ்சாமல் வஞ்சகம் செய்யும்படியாகிய மனதையுடைய கீழ்மக்கள்களில் கடையேனாகிய சண்டாளனா யிருக்கின்றேன். இன்னம், நலத்திடையோர் அணுவளவும் = பூலோகத்தின் செய்யாநின்ற நலவுகள் ஆகிய * மூவகையில் ஒருவகையாவது செய்வதற்கு அற்ப உபகாரமாவது யெப்போதாவது செய்யவேண்டுமென்று, நண்ணுகிலேன் = ஆசைகொண்டவனல்லேன், பொல்லாநாய்க்கு=ஒ நேசனே! மேல்காட்டியவைகளும் மற்றவைகளும் செய்யாத கெட்ட நடத்தைகளைக் கைபற்றியிராநின்ற இந்த நாயினும் கீழானவனாகிய நான், நகைதோன்றநின்றேன் = உன்னை அடையும் வழியை இன்னதெனக் காணாத நால்வர்களோடு கலந்து நாளும் சிரிக்கின்றவனாக நிற்கிறேன், பேய்க்கு மிகவிழிந்தேன் = பேய்யென்று சொல்லும்படியாகிய நம்மில் நின்றும் உண்டான விகாரமாகிய ¶ ஆறு பேய்களுக்கும், இழிவாயினேன்; இப்படிப்பட்ட இழிவடையும்படியான யான், நிலத்திடையான் யேன் பிறந்தேன் = பூமியில் யேன் பிறக்கவேண்டும், நின் கருத்தையறியேன் = உன்னுடைய கருத்து இன்னதுதான் யென்று நான் அறிய முடியேன். அதாவது; உன்னுடையகருத்தை இந்த பொல்லாதவன் இன்னதுதான்யென்று அறியவில்லையே. கடவுளே (என்றவாறு)— (க)

விளக்கறியா விருட்டறையின் கவிழ்ந்துகிடந்தழுது
விம்முகின்றகுழவியினுமிகப்பெரிதுஞ்சிறியேன்
அளக்கறியாத்துயர்க்கடலில்விழுந்து நெடுங்கால
மலைந்தலைந்துமெலிந்ததுரும்பதனின்மிகத்துரும்பேன்

---

* மூவகை உபகாரமாவன = உடம்பினால் உபகாரம் செய்தல், வாக்கினால் உபகாரம் செய்தல், செல்வத்தினால் உபகாரம் செய்தல் ஆகிய மூன்றும்.

¶ விகாரம் ஆறு = காமம், குரோதம், உலோபம், மோகம் மதம், மாற்சரியம் ஆக ஆறும்.

Koviloor Digital Library

கிளக்கறியாக்கொடுமையெலாங்கிளைத்தபழுமரத்தேன்
கெடுமதியேன்கடுமையினேன்கிறிபேசும்வெறியேன்
களக்கறியாப்புவியிடைநானேன்பிறந்தேனந்தோ
கருணைநடத்தரசேநின்கருத்தையறியேனே.

(இ - ள்.) கருணைநடத்தரசே! — கிருபைபொங்கி யெனையாட்கொண்டு யென் மனதின்கண் நடமாடுகின்றஅரசே விளக்கறியாவிருட்டறையில் = விளக்கினுடையவெளிச்சமென்பது அறியாத இருள் சூழ்ந்திருக்கும்படியான வீட்டின் அறையில், கவிழ்ந்துகிடந்தழுது = குப்புறக்கண் கீழிருக்கும்படியாக தரையில் யெறியப்பட்டு அழுதுயிருக்கும்படியான, விம்முகின்ற குழவியினும் = அதிகமாகிய அழுவுதலினால் உண்டாகிய ஏங்குதலிலுண்டாகிய முகம் விம்மலெடுத்து ஏங்கியிருக்கும்படியான சிறிய குழந்தையிலும், மிகப் பெரிதுஞ் சிறியேன் = அதிகமாக உலகவியாபாரங்களில் தலையிட்டு பரசாதனங்களைக் காணமலிருக்கிற அடியான் அதைக்காணும் பொருட்டு மேல்காட்டிய குழந்தையைக்காண அதிகமாக அழும்படியானவர்களில் சிறியவன், அளக்கறியாத் துயர்க்கடலில் = அளந்து இவ்வளவு நிலைமையை உடையதெனச் சொல்லுவதற்குமுடியாத துன்பம்யென்னும் சமுத்திரத்தில், விழுந்து நெடுங்காலம் = அநேககாலமாக அந்த சமுத்திரத்தில் விழுந்து மூழ்கி, அலைந்தலைந்து = விசனத்தினுடைய கடலின் அலையென்று சொல்லும்படியான பலபோது வரும் யெண்ணங்களால் அடிபட்டு இடிபட்டு, மெலிந்த துரும்பதனின் = என்னுடைய மனமானது சிறிய மெல்லினமென்னும் இளைத்து கரைந்த துரும்பு யென்னும் நொய்ய திரணத்திலும், மிகத்துரும்பேன் = அதிலும் மெல்லியதாகிய திரணத்தையுடைய மனத்தையுடையவன், கிளக்கறியாக்கொடுமையெலாம் = சொல்லுவதற்கு இயலாத தீவினைகளெல்லாம், கிளைத்தபழுமறத்தேன் = ஓர் மரமாகவேரூன்றி கிளைகள்பிரிந்து காய்கள்காய்த்து பழுத்திருக்கும்படியான மரமானவன், அதாவது கொடுமையையே

Koviloor Digital Library

ஒருருவாய்க்கொண்டவன், கெடுமதியேன் = ஒருவரைக் கெடுக்கும்படியான புத்தியையுடையவன். கடுமையாயினேன் = கண்டிப்பாகிய கோபத்தையுடையவன், கிறிப்பேசும் வெறியேன் = பொய்சொல்லும்படியான பைத்தியங்கொண்டவன், களக்கறியாப்புவியிடை = மேல் சொல்லியிருக்கும்படியானவைகளை நீக்கியிருக்கும்படியான குணத்தையறியாத நான் இந்த பூமியின்மேல், நான் யேன் பிறந்தேன் = நான் யென்னத்திற்காக ஜெனனமாய் வந்தேன், அந்தோ = ஐயோ, கருணை நடத்தரசே = கிருபையோடுகூடி யென்மனதின்கண் நடமாடுகின்ற இராஜனே, நின் கருத்தையறியேனே = உன்னுடைய கருத்தானது இன்னவைக்காக நான் பிறந்தேன் யென்பது தெரியவில்லையே என்றவாறு (உ)

அறியாதபொறியவர்க்குமிழிந்ததொழிலவர்க்குமதிகரித்துத்
துன்மார்க்கத்தரசசெய்யுங்கொடியேன்
குறியாதகொடும்பாவச்சுமைசுமக்குந்திறத்தேன்
கொல்லாமையென்பதையாக்குறிப்பாலுங்குறியேன்
செறியாதமனக்கடையேன்றீமையெலாமுடையேன்
சினத்தாலு மதத்தாலுஞ் செறிந்தபுதலனையேன்
எறியாத புவியிடைநானேன்பிறந்தேனுன்ற
னிதயமறியேன்மன்றிலினித்தநடத்திறையே.

(இ - ள்.) அறியாதபொறியவர்க்கும் = நன்மையாகிய அடையாளத்தை பெற்று அறியாத வம்பர்களுக்கும், இழிந்த தொழிலவர்க்கும் = இழிமக்கள் செய்யும்படியான இழிவான தொழில் செய்வோர்க்கும், அதிகரித்து = பாதகத்தொழில் மிகைப்பாக செய்யும்படியான வகைகளில் அதிகமாக்கி, துன்மார்க்கத்து = சன்மார்க்கத்தைவிடுத்து கெடுதிசெய்யும்படியான தீவினையென்னும் சிம்மாசனத்தின்மீதிலிருந்து, அரசசெய்யும் கொடியேன் = இராஜரீகம் செய்யும்படியான பாதகனாயிருக்கிறேன், குறியாத = இருப்பது இவ்வளவுதான் யெனமதிக்கக்கூடாது, கொடும்பாவச்சுமை = கொடுமையென்

Koviloor Digital Library

னும் யான் செய்த நோவினைகளோடு கூடியபாவங்கள் யெல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டி, சுமக்கும் திறத்தேன்=தலைமேல் என்னேறமும் தூக்கிக்கொண்டிருக்கும் வலுவுடையவன்; அதாவது பாவமூட்டை தூக்கும் சக்தியுடையவனாய் தூக்கிக்கொண்டிருக்கிறேன், சொல்லாமையென்பதையோர் = ஜீவித்திருக்கும்படியாகிய பிராணிகளைக் கொல்லுதல் மகாபாதகம் யென்று பெரியோர்களும், யெனையோர்களும் சொல்லியிருக்க அதை பாதகம் நாம் கொல்லப்படாது யென்கிற ஒரு எண்ணத்தை யெப்போதாவது, குறிப்பாலுங் குறியேன்=யென் யெண்ணத்திலெண்ணினவனல்லன், அதைவிட்டவனே அல்ல, செறியாத மனக்கடையேன்=ஒருவருக்கு வரும் வாழ்வைப்பார்த்து நமக்கு வறவில்லையேயென்று மனசந்தோஷமில்லாத வெறுப்புடைய தீயோனாயிருக்கிறேன், தீமையெலாமுடையேன்=கெடுதிகள் யாவற்றையும் ஒருங்கே மனதில் சேர்த்துவைத்திருப்பவன், சினத்தாலும்=கோபத்தாலும்,மதத்தாலும்=அகங்காரத்தாலும், செறிந்த புதலனையேன் =மேல்சொன்னவை அடங்கலும் நிறைந்த நாணல்புதறைப்போலொத்தவன், எறியாதபுவியிடை நான் யேன் பிறந்தேன் =நான் குறிப்பில்லாத இந்த பூமியினிடத்து யென்னத்திற்காக பிறந்தேன், உன்னிதயமறியேன்=உன்னுடைய மனமானது இத்தன்மையதென அறிய முடியவில்லை, மன்றிலினித்த நடத்தரசே=நெஞ்சின்கண் உண்டாயிருக்கும் கனகசபையின்கண் நடமாடுகின்ற அரசே. என்றவாறு (ரு)

இனித்தபழச்சாறுவிடுத்திழித்தமலங்கொளுமோரிழி
விலங்கினிழிந்துநின்றேனிரக்கமொன்றுமில்லேன்
அனித்தநெறியிடைத்தொடர்ந்துமனித்தவுடம்பெடுத்த
வறக்கடையர்தமக்கெல்லாம்மறக்கடையனானேன்
பனித்தமனக்குரங்காட்டிப்பலிக்குழலுங்கொடியேன்
பாதகமுஞ்சூதகமும்பயின்றபெரும்படிறேன்
தனித்தகடுங்குணத்தனேனன்பிறந்தேனினது
தனிக்கருத்தையறிந்திலேன்சபைக்கேற்றமொளியே.

Koviloor Digital Library

(இ - ள்.) இனித்த பழச்சாறு=பால்பழம் சர்க்கறைபோட்டு ஒன்றாய்க்கலந்த மதுரம்பொருந்திய சாறென்னும் பானத்தைக்கொண்டு வந்து கொடுக்க, விடுத்து=யெனக்குவேண்டாமென்று சொல்லி மறுத்துவிட்டு, இழித்த=மேல்சொன்னவைகளில் இழிவாகிய, மலங்கொளுமோர்=வலத்தை அதிக ஆவலோடு தின்னும்படியான ஒரு அதாவது தனக்கு கொடுத்ததை வேண்டாமென்று தடுத்துவிட்டு வலம் தின்னும்படியாகிய ஒருவன் எதற்கு சமானமெனில், இழிவிலங்கினிழிந்து நின்றேன்=நால்கால்கொண்டு நடக்கும் பிராணிகளென்னும் விலங்கினத்தில் கேவலமான ஓர் பன்றி அல்லது நாய் இப்படிப்பட்ட பிராணிகளிலும் இழிவாகிய இருகால் விலங்கு போன்றவன், இரக்கமொன்றுமில்லேன்=தயை செய்யும்படியான மனதுள் கிருபை ஒன்றும் கிடையாது, அதாவது பச்சாதாபம் கிடையாது, அனித்த நெறியிடை=சமீபமாக கண்ணுக்கு தென்பட்ட அழியும்படியான ஒருவழியின் நடுவில், தொடர்ந்து =சென்று அந்த வழியில் சேர்ந்து, மனித்த உடம்பெடுத்த= அழியும்படியாகிய இத்தேகத்தை யெடுத்த, அறக்கடையர்தமக்கெல்லாம்=கொஞ்சமாவது மேன்மையில்லாத கீழ்மக்களின் சாதியோர்களிலெல்லாம், அறக்கடையனேன் = அப்படிப் பட்ட கீழ்மக்கட்கும் தாழ்ந்தவனா யிருக்கிறேன், பனித்தமனக்குரங்காட்டி=தன்னைத்தவிற மற்றவர்களுடைய மனதில் அச்சம் உண்டாகி நடுக்கும்படியான வகையாய் கோபத்தைக் காண்பித்து, பலிக்குழலும் கொடியேன்=இவர் பெரியகோபத்தை யுடையவர் இவர் கோபத்திர்க்கு ஆளாகக்கூடாதுயென யோசித்து ஜனங்களின் காணிக்கை பாத சேவை முதலிய பொருள்வகையராக் கொண்டுவந்து கொடுத்து வேண்டிக்கொள்ளும்படியான கெட்ட யெண்ணத்தையுடைய கொடியேன், பாதகமும்=கொலை பழி பாவம் முதலாகிய பாதகங்களையும், சூதகமும்=மனதின்கண் யெந்நேறமும் சூதுசெய்யவேண்டுமென்கிற கபடுகளை வைத்திருக்கும்படியாகிய அகமுடையவனும் ஆக, பயின்று பெரும்படிறேன்=இத்தியாதிவைகளை சற்

Koviloor Digital Library

று த்தேறி இருக்கும்படியான பெருநிந்தனை யுடையவன், தனித்தகைங்குணத்தேன்=வேறொரு குணமில்லாது தனிமையாய் இப்படிப்பட்ட குணங்களைக்கொண்டு கடிசான குணத்தை யுடையவனாகிய, நான் யேன்பிறந்தேன்=இந்த பூமியின்கண் யென்னத்திற்க்காக பிறந்தேன், நினது தனிக்கருத்தை=உன்னுடைய ஒரு கருத்தை, அறிந்திலேன்=நான் அறியவில்லையே ஆதலால் யெனக்கு அறிவிக்க வேண்டும், சபைக்கேற்றுமொளியே=மனமாகிய சபையின்கண் ஏற்றியிராநின்ற சோதியே (எ-று) (ச)

ஏறுகின்றேமெனமதித்தேயிறங்குகின்றகடையே
னேதமெலாநிறைமனத்தேனிரக்கமிலாப்புலையேன்
சீறுகின்றபுலியனையேன்சிறுதொழிலேபுரிவேன்
செய்வகையொன்றறியாதசிறியரினுஞ்சிறியேன்
மாறுகின்றகுணப்பேதைமதியதனாலிழிந்தேன்
வஞ்சமெலாங்குடிகொண்டவாழ்க்கைமிகவுடையேன்
வீறுகின்றவுலகிடைநானேன்பிறந்தேனினது
மெய்க்கருத்தையறிந்திலேன்விளங்குநடத்தரசே.

(இ-ள்.) ஏறுகின்றே¦ மெனமதித்தே=அரசே உன்னுடைய அருள்பெறவேண்டுமென்று தினந்தோறும் நான் செய்யும் ஜெபதப முதலியவற்றையும் கண்டு எனக்கு அருள் விளங்கும்படியான இவ்வகையின் உபாயத்தால் நாம் அவன் பதவியில் சேர்ந்து வருகின்றோமென்று யெண்ணியே, இறங்குகின்ற கடையேன் = மேல்காட்டியமாதிரியாய் மமதைகொள்ளக்கொள்ள மனிததன்மையைவிட்டும் அகங்காறங்கொண்டு அவனுடைய அருள் இல்லாமல்படியாய் இறங்கிவரும்படியான கீழானவனின், ஏதமெல்லாம் நிறைமனத்தேன்=குற்றமெல்லாம் துன்பமாக நிறைந்த மனதையுடையவன், இரக்கமிலாப் புலையேன்=கொஞ்சமாவது இரக்கமில்லாதசண்டாளனாயிருக்கிறேன், — சீறுகின்றபுலியனையேன்=மனதில் கொண்டகோபத்திலோ ஆக்கிரமித்தெழும்புகின்ற புலிபோன்றவன், சிறு

Koviloor Digital Library

தொழிலே புரிவேன் = யெப்போதும் கீழான வேலையையே செய்வேன், செய்வகையொன்றறியாத = செய்யும்படியான வகைகளின் உபாயம் அதாவது இப்படிச்செய்தால் இப்படி வரும் இன்னது செய்தால் இன்னவை உண்டாகும் என்கிற ஏதுக்கள் ஒன்றும் தெரியாத, சிறியரினுஞ் சிறியேன் = சிறிய பிள்ளைகளின் குணத்தினாலும் சிறியவனாயிருக்கிறேன், மாறுகின்ற குணப்பேதை = நிலையில்லாது யெந்நேரமும் க்ஷணபித்தம் க்ஷணசித்தம் யென்று சொல்லும்படியாக மாறுகின்ற குணத்தையுடைய அறிவில்லாதவனாகிய நான், மதியதனாலிழந்தேன் = புத்தியில்லாதவனென்று சனங்கள் இகழும்படியானவன், வஞ்சமெலாங்குடிகொண்ட = வஞ்சகங்கள்யாவும் மனதில் வாசஞ்செய்ய வைத்திருக்கும்படியான, வாழ்க்கைமிகவுடையேன் = அதிகமாகிய சீவிப்புடையவன், வீறுகின்றவுலகிடைநான்யேன் = வெறுப்பாயிராநின்ற இவ்வுலகத்தின்மீது நான் என்னத்திற்காக, பிறந்தேனினது = நான்பிறந்தேன் உன்னுடைய மெய்க்கருத்தை யறிந்திலேன் = மெய்யாகிய பூரண யெண்ணத்தை அறிய யென்னால் முடியவில்லை, விளக்குநடத்தரசே = என் மனதில் விளங்கி நடமாடுகின்ற அரசே (என்றவாறு.) (௫)

அரசரெலாமதித்திடப்பேராசையிலேயர
 சோடாலெனவேமிகக்கிளைத்தேனருளறியாக்கடையேன்
புரசமரம்போற்பருத்தேனெட்டியெனத்தழைத்தேன்
 புகெனவும் புளியெனவும் மயக்கியுதிர்கின்றேன்
பரசும்வகைதெரிந்துகொளேன்தெரிந்தாரைப்பணியேன்
 பசையறியாக்கருங்கன்மனப்பாறைசுமந்துழல்வேன்
விரசநிலத்தேன்பிறந்தேனின்கருத்தையறியேன்
 வியக்குமணிமன்றோங்கி விளங்குபரம்பொருளே.

(இ-ள்.) அரசரெல்லாம் = பூவுலகம் ஆளும் மன்னர்களெல்லாம், மதித்திட = இவ்வளவு மேன்மைபெற்றவன்யென்று சொல்லும்படியாகிய, பேராசையிலே = யான்கொண்ட பேரின்பத்திலே, அரசோடாலெனவேமிகக்கிளைத்தேன் அரு-

Koviloor Digital Library

வாறியாக் கடையேன் = உன்னுடைய பூரண இன்பமாகிய அருள்யென்னுங் கிருபையை காணாத கடையேனாகிய நான் மிகவிசாலமாப் பரம்பிவளர்ந்து இராநின்ற அரசமரத்தோடு ஆலமரமாகவே பரவி அதிகமாக கிளைகளையுடைய மாமாக வளர்ந்து நிற்கின்றேன், புரசமரம்போல் பருத்தேன் = பலாசமரம்போல் யெதர்க்குமுதவாது பெருத்திருக்கின்றேன், யெட்டியெனத் தழைத்தேன் = காஞ்சிரம் யென்றுசொல்லும்படியான எட்டிமரம்போல் தழைத்து நின்றேன், புங்கெனவும் புளியெனவும் = புங்கமரம்போலவும் புளியமரம் போலவும், மயங்கியுதிர்கின்றேன் = பூலோகத்தின் நானாவிதமான மாயையால் மயங்கி மேல்காட்டிய மரத்தின் இலைகள் உதிர்ந்துவிழுவதுபோல் உதிர்ந்துகொண் டிருக்கின்றேன், அதாவது மாய்கையில் உழன்று மயங்கி நான் செய்யும் நல்வினையாகிய இலைகளையுதிர்த்து யுதிர்த்து என்னுடைய வயதைப் போக்குகின்றேன், — பரசும்வகை தெரிந்துகொளேன் = உன்னை துதித்து உன்னால் அருள்பெரும்படியான வதுவை நான் இதுவரையிலும் தெரிந்துகொள்ளாமலிருக்கிறேன், தெரிந்தாரைப்பணியேன் = அப்படிப்பட்டவைகள் செய்துஅருள் பெற்றிருக்கும்படியாகிய தெரிந்தவர்களை அடைந்து அவர்களிடம்தொண்டுசெய்யவுமில்லை, பசையறியா கருங்கல் = மழைபெய்து கொஞ்சமாவது அதினுடைய நீரையே யேற்றுக்கொள்ளத்தெரியாத கருங்கல்லாகிய, மனப்பாறை சுமந்துழல்வேன் = மனம் யென்னும் கருங்கல்பாறையை சுமந்துழல்கின்றவனாயிருக்கின்றேன், — விரசுநிலத்தேன் பிறந்தேன் = சிந்தையோடு கூடிய இந்த நிலத்தின்மீது நான் என்னத்திற்காகப் பிறந்தேன், நின் கருத்தையறியேன் = உன்னுடைய கருத்தின்னதெனயெனக் குத் தெரியவில்லை, வியக்குமணிமன்றோங்கி = சனங்களெல்லாம் பெருமையில் வியந்துசொல்லும்படியாகிய மாணிக்கத்தின் ஒளியைக்காண ஓங்கி, விளங்குபரம் பொருளே = உலகமெலாம் விளங்கி இராநின்ற பரமார்த்தமாகிய பொருளே (எ-று.) (சு)

Koviloor Digital Library

பொருளறியேன்பொருளறிந்தார்போன்றுநடித்திங்கே
பொங்கிவழிந்துடைகின்றேன்பொய்யகத்தேன் புலையன்
மருளறியாத்திருவாளருளங்கசக்கத்திரிவேன்
வையுண்டுமுழவுதவாமாடெனவேதடித்தேன்
வெருளறியாக்கொடுமனத்தேன்விழற்கிறைத்து களிப்பேன்
வீணர்களிற்றலைநின்றேன்விலக்கனைத்தும்புரிவேன்
தெருளறியேனுலகிடைநானேன்பிறந்தேனினது
திருவுளத்தையறிந்திலேன்தெய்வநடத்தவனே.

(இ - ள்.) பொருளறியேன் = உன்னை அறியும்படியான பொருள் இதுதான் என்று தெரியாதவன், பொருளறிந்தார் போன்று = அப்படித்தெரியாவிட்டாலும் முற்றிலும் நான் நன்றாய் தெரிந்தவர்களைப்போல், நடித்திங்கே = எனையோர் முன்பாக ஷை யாவும் தெரிந்தவர்களைப்போல் பாவனைகாட்டி, பொங்கி வழிந்துடைகின்றேன் = நாம் யாவும் தெரிந்தவர்களைப்போல் இவர்கள் முன்பு மோசஞ்செய்த அன்பானது பொங்கி நாலாபக்கமும் வழிந்து கீழேவிழுந்து உடைந்துபோன வெறும்பாண்டம்போன்றவன், பொய்யகத்தேன் = எனது அகமாகிய மனதில் பொய்கொண்டிருப்பவன், புலையேன் = சண்டாளனானவன். மருளறியா திருவாளர் = மயக்கம் என்பதறியாத மேன்மைபொருந்திய உன்னடியாரின். உளங்கசக்க = மனம் கசக்கும்படியாக அதாவது அவர்கள் வருந்தப்படும்படியாக, திரிவேன் = அவர்கள் முன்னால் நடப்பேன், வையுண்டு = பூமியின்மேல் பயிராயிராநின்ற கனிகள் முதலியவற்றைத்தின்று, உழவுதவாமாடெனவேதடித்தேன் = பயிரிடுவோர் உழவுக்கு உதவாத மாடென்று சொல்லும்படியாக தடித்துப் பெருத்தவன், வெருளறியாக்கொடுமனத்தேன் = அஞ்சுதலில்லாத கெட்ட மனத்தையுடையவன், விழற்கிறைத்து களிப்பேன் = நெல்லுக்கு இறைக்காமல் பூமியின்கண் உண்டாயிருக்கும் புற்களுக்குத் தண்ணீரை இறைத்து அதினால்

Koviloor Digital Library

பிரயோசனம்பெறாது களித்திருப்பவன், வீணர்களிற்றலை யின்றேன் = வீணனகாரியம் செய்பவர்களுக்கு தலைவனாக நின்றவன், இன்னும், விலக்கனைத்தும்புரிவேன் = கடவுளால் இதுகாரியம் செய்யப்படாதென்று விலக்கியிருக்கும்படியான காரியங்கள்யாவும் விடாமல் செய்பவன், தெருளறியேன் = மனதில்மேல் காட்டியவைகளில் தெளிவுதல் இன்னதென்று தெரியாதவன், உலகிடைநான்யேன்பிறந்தேன் = அறியாதவனாகிய நான் இவ்வுலகத்தின்மீது யென்னத்திற்காக பிறந்தேன், னது திருவுளத்தை யறிந்திலேன் = உன்னுடைய எண்ணமானது இத்தன்மையதென்று அறிய என்னால் முடியவில்லை, தெய்வநடத்தவனே = என் உள்ளத்தில் மயமாய்விளக்கி நடமாடும் கடவுளே. (எ - று.) (எ)

தவம்புரியேன்றவம்புரிந்தார்தமைப்போலநடித்து
தருக்குகின்றேனுணர்ச்சியிலாசடம்போலவிருந்தேன்
பவம்புரிவேன்கமரிளிடைப்பால்கவிழ்க்குங்கடையேன்
பயனறியாவஞ்சமனப்பாறைசுமந்துழல்வேன்
அவம்புரிவேனறிவறியோனன்பறியேனன்பாலையா
னின்னடியடைந்தார்க்கணுத்துணையுமுதவேன்
நவம்புரியுமுலகிடைநானேன்பிறந்தேனினது
நல்ல திருவுளமறியேன்ஞானநடத்திறையே.

(இ - ள்) தவம்புரியேன் = ஒருநாளாவது கடவுளே உனை வணங்கினது கிடையாது, தவம்புரிந்தார் தமைப்போல நடித்து = தெய்வதொண்டு செய்யம்படியான தவம் செய்பவர்களைப்போல்வெளிபகட்டுதலாககாண்பித்து, தருக்குகின்றேன் = அகங்காரத்தில் மிகவாக செருக்குற்றவனாக யிருக்கிறேன், உணர்ச்சியிலாச்சடம்போல இருந்தேன் = சுவரனை இல்லாதசரீரகம் யென்று சொல்லும்படியாகிய மட்டிச்சாம்பிராணிபோல இருந்தேன், பவம்புரிவேன = பாகவங்களைச்செய்வேன், கமரி

Koviloor Digital Library

னிடைப்பால்கவிழ்க்கும்=பாலைதானும் குடிக்காமல் குடிக்கப்பட்டவனுக்கும் கொடாமல் பூமியினையுடைய வெடிப்பில் பாலை கவிழ்க்கும்படியான, கடையேன் — சண்டாளனானவன், பயனறியா=பிரயோசனம் இன்னதென அறியாத, வஞ்ச=வஞ்சகம் பொருந்திய, மனப்பாறை=மனமாகிய பாறுங்கல்லை, சுமந்துழல்வேன் = சுமந்து திரிகிறவனாயிருக்கிறேன், —அவம்புரிவேன்=என்னேறாமும் பயன்தருத வீண்வேலைகளையே செய்வேன், அறிவறியேன்=இது நன்மையென்றும் தீமையென்றும் தெரியும்படியான அறிவே கிடையாது, அன்பறியேன்=உன்பேரில் அன்புகொள்ளல் இன்னதெனத் தெரியாது, அன்பாலையா=அய்யனே உன்னுடைய ஆசையால், நின்னடியடைந்தார்க்கு=உன்பாதம் கதியென சேர்ந்த அடியவர்களுங்கு, அணுத்துணையுமுதவேன் = அணுவளவாவது அவர்களுக்கு உதவிசெய்யவேமாட்டேன், நவம்புரியும் உலகிடைநானேன் =புதுமையே யெக்காலமும் செய்துவரும் அல்லது பழைய நாள்கழிந்து புதுநாட்களையே நமக்குத் தரும்படியான இந்த உலகத்தினிடையில் நான் யென்னத்திற்கு, பிறந்தேன்=ஜனித்தேன், நினது உன்னுடைய, நல்ல திருவுளமறியேன் = நன்மையாகிய அன்புள்ள உன் திருவுளம் இன்னதென அறியேன், அறியமுடியவில்லையே, ஞானநடத்திறையே= என்மனோ இதயத்தின்கண் நடமாடுகின்ற இராஜர்களுக்கெல்லாம் இராஜனே (எ - று.) (அ)

இறையளவுமறிவொழுக்கத்திச்சையிலேனரகிலிருந்
துழன்றவாடுகின்றோரெல்லார்க்குமிழிந்தேன்
பொறையளவோநன்மையெலாம்போக்கில்விட்டுத்தீமை
புரிகின்றேனெரிகின்றபுதுநெருப்பிற்கொடியேன்
சிறையளவோமுறையளவோவிலையளவுந்தவிர்த்த
நெடுஞ்சாலநெஞ்சகத்தேனிலவிடம்போல்வேன்
கறையளவாவுலகிடைநானேன்பிறந்தேனினது
கருத்தறியேன்கருணைநடக்காட்டுகின்றருருவே.

Koviloor Digital Library

(இ - ள்.) இறையளவு=கடவுளே ஒரு அணுவளவா வது, அறிவொழுக்கத்து=புத்தி முதலிய நல்லநடக்கையில், இச்சையிலேன் = அப்படிப்பட்டவைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று, அல்லது நடக்கவேண்டுமென்று, இன்பம் இல்லாதவன், நரகிலிருந்துழன்று=கடவுளே நரகிற்குப்போ கும்படியாகிய நரகசாதனங்களைக் கைக்கொண்டு எந்நேரமும் அதிலேயே முங்கிகிடந்து உழன்று நரகத்தின் அமளியை எண்ணி, வாடுகின்றோரெல்லோர்க்குமிழிந்தேன்=மனம் முகம் வாட்டமடைந்து நரகத்தைப்பற்றிய எண்ணங்களால் விசனமடைந்துகிடக்கும் யாவரிலும் மிக இழிவானவனுயிருக் கிறேன், பொறையளவோ=மலையைப்போல் பெருப்பமாகிய அளவுடைய, நன்மையெல்லாம் போக்கில்விட்டு=நலவாகிய காரியங்களைச் செய்யாமல் அதின்போக்கிலேயே விட்டுவிட்டு, தீமைபுரிகின்றேன் = பாவங்களைச் செய்கிறவனுயிருக்கின் றேன், எரிகின்ற புதுநெருப்பில்=புதிதாக கட்டைகளை வை த்து யெறித்து சத்தமாய் சாம்பல் முதலியவைகளில்லாது கட்டிகட்டியாய் யெறிந்துக்கொண்டிருக்கும் நெருப்பைக் காண, கொடியேன்=கொடியவனுயிருக்கின்றேன்,— நிறை யளவோ = நியாயமாகிய அளவிலோ, முறையளவோ = ஒழுக்கமாகிய அளவிலோ, நிலையளவும் = விறதமாகிய அளவிலோ, அதாவது நியாயம், ஒழுக்கம், விறதம் முத லிய பத்தியங்களிலாகிய இதுகளில் நான் ஒன்றிலும் சரியாய் இராமல், தவிர்ந்த=இதுகள் யாவற்றையும் விட்டுவிட்டு, நெடுஞ்சாலநெஞ்சகத்தேன்=கேட்பவர்களுக்கு, அல்லது வரு பவர்களுக்கு வஞ்சகம் செய்யவேண்டுமென்று அதிக பொழு துபோக்க ஜாலம்செய்து யேமாற்றும் நெஞ்சையுடையவன், நீலவிடம்போல்வேன்=கரும்பாம்பின் விஷத்தைப்போலான வன்.–கறையளவாவுலகிடைநான்=நான்குபக்கங்களிலும் சமு த்திரத்தின் கரையானது சூழாநின்ற இந்த உலகத்தின்மீது நான், ஏன்பிறந்தேனினது=என்னத்திற்காக நான் பிறந்தேன் உன்னுடைய, கருத்தறியேன்=உன் எண்ணத்தை அறியஎன்

Koviloor Digital Library

னால் கூடவில்லை, கருணைநடக்காட்டுகின்ற குருவே=கிரு பையோடு என்மனதின்கண் ஒளிவை நடப்பிக்கும்படி காட்டு கின்ற மெஞ்ஞான குருவே. (எ - று.) (கூ)

காட்டுகின்றவுவர்க்கடல்போற்கலைகளிலுஞ்செல்வ
களிப்பினிலுஞ்சிறந்துமிகக்களித்துநிறைகின்றேன்
நீட்டுகின்றவாபத்திலொருசிறிதுமுதவேன்
நெடுங்கிணறமாழ்ந்துதவாப்படுங்கிணறபோல்வேன்
ஆட்டுகின்றவருட்பெருமையொருசிறிதுந்தெரியே
னச்சமிலேனாணமிலேனடக்கமொன்றுமில்லேன்
கூட்டுகின்றவுலகிடைநானேன்பிறந்தெனினது
குறிப்பறியேன்மன்றினடங்குலவுகுலமணியே.

(இ - ள்.) காட்டுகின்ற உவர்க்கடல்போல்=நாம் கண் ணால் காணும்படியாகிய உப்புத்தண்ணீரையுடைய சமுத்திர மானது தூரம் இருந்துதாகித்து வருபவர் அச்சமுத்திரத்தைக் கண்டு தண்ணீர் அருந்தலாமெனவெகு ஆவலோடு பிராணிகள் அக்கடலருகேவந்து குடிக்க உப்பாயிருப்பதால் நல்ல தண்ணீ ராயிருக்கக்கூடாதோ யென ஐயுறுகிறார்கள். அப்படிப்போல் தண்ணீரானது என்னிடம் மிகுதமிருக்கிறதுயென்று காட் டும்படியான பெருமையுடைய உப்பாகிய தண்ணீருள்ள கட லைப்போல் நானுகிறவன், கலைகளிலுஞ் செல்வ களிப்பினிலும் =எனக்கு உண்டாயிருக்கும் பட்டு, பட்டாவளி, சரிகை முத லிய வெண்வகைப் பிரகாசம்பொருந்திய உடுப்புகளினாலும் இன்னம் யெனக்குண்டாயிருக்கும் பணங்காசு முதலிய சந்தோ ஷத்தினாலும், சிறந்து மிககளித்து நிறைகின்றேன்=மேல் சொல்லியவைகளினால் சிறப்புற்று அதிகமாக சந்தோஷத் தோடு நின்றவனாயிருக்கிறேன்,—நீட்டுகின்ற வாபத்திலொரு சிறிதுமுதவேன்=தன்னையல்லாத மற்றவர்களுக்கு உண் டாகும் ஆபத்துகளில் ஒருவேளையாவது கொஞ்சமாகிலும் கொடுத்து நான் உதவுவது கிடையாது, நெடுந்தூரமாழ்ந் துதவா படுங்கிணறுபோல்வேன் = கிணறை தண்ணீர்க்காக வேண்டி வெட்டவெட்ட நெடுந்தூரம் வெட்டியும் தண்ணீர்

Koviloor Digital Library

கிடையாது ஒன்றுக்கும் உதவாத பாழுங்கிணர் என்று வருபவர்கள் அதைப்பார்த்து அதில் விழுந்து மாளும்படியான படுங்கிணறுபோலவுடையவன், அதாவது; என்னிடத்து பொருள் இருக்கிறது என்று வரும் சனங்கள் கொடுப்பான் கொடுப்பான் என்று காத்து மாள்வார்கள் என்பதே; ஆட்கொகின்ற வருள்பெருமை=என்னை ஆட்கொள்ளும் படியான அவனுடைய கிருபையின் பெருமையானது, ஒருசிறிதும் தெரியேன்—அதின் மகத்துவமானது இத்தன்மையதென்று கிஞ்சிற்றேனுமறியாதவன், அச்சமிலேன்=பயமும் கிடையாது, நாணமிலேன்=வெட்கம் இல்லாதவன், அடக்கமொன்றுமிலேன்=மரியாதை ஒழுக்கம் முதலியவைகள் ஒன்றுமில்லாதவன்,—கூட்டுகின்ற உலகிடைநான்=ஜனங்களைச் சேர்த்து காண்பிக்கும்படியான இந்த உலகத்தின்மீது நான், என்பிறந்தேனினது=என்னத்திற்காக ஜனித்தேன் உன்னுடைய, குறிப்பறியேன்=இன்னத்திற்காக நான் பிறந்தேன் என்னும் அடையாளமும் தெரியவில்லை மன்றிடங்குலவும்=என்மனத்தின்கண் உண்டான ஞானசபையில் நடந்து உலவிஇருக்கும்படியான, குலமணியே=அடியார்களின் குலத்திற்கு ஏற்றமணியே. (என்றவாறு.) (ய)

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது ஆற்றாமை முற்றுப்பெற்றது.

பாடல் விருத்தம் 10. ஆக கூடிய பாடல். 20.

மூன்றாவது ஆற்றாமை.

இதவுமது,

எண்சீரடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்.

தாவுமானெனக்குதித்துக்கொண்டோடித்
தையலார்முலைத்தடம்படுங்கடையேன்
கூவுகாக்கைக்குச்சோற்றிலோர்பொருக்குங்
கொடுக்கநேர்ந்திடாக்கொடியரிற்கொடியேன்

Koviloor Digital Library

ஓவுறுதழலீயெனப்பலகாலோடி
யோடியேதேடுறுந்தொழிலேன்
சாவுறுவகைக்கென்செயக்கடவேன்
றந்தையேயெனைத்தாங்கிக்கொண்டருளே.

(இதன்பொருள்.) தாவுமானெனக் குதித்துக்கொண்டு= பெண்களைக் கண்டகாலத்தில் துள்ளிக்குதித்து ஓடும்படியான மானைப்போல் குதித்துக்கொண்டு, ஒடித்தையலார்=அதிகசந்தோஷமாக ஒட்டமாக ஓடி வலையில் அகப்படும் மானைப்போல் பெண்களினுடைய, முலைத்தடம்படும்கடையேன்=மன்மதனுடைய கிரீடமாகிய முலையைகண்டு அவர்களின் தடமாகிய அல்குலில் அகப்பட்டு மாண்டுமடிந்துபோகும்படியான தன்மையையுடைய கீழானவன்,—கூவுகாக்கைக்குசோற்றிலோர் = தான் சாப்பிடும்போது காகமானது வந்து எதிரிலுட்கார்ந்து என் இன்பநேசனே எனக்கு கொஞ்சம் கொடாயோ யென்று கேட்கும்வண்ணம் கூப்பிடும்படியான காக்கைக்கு அப்போது தின்றகொண்டிருக்கும்படியான சாதத்தில் ஒரு, பொருக்குக்கொடுக்க நேர்ந்திடா=ஒரு பருக்கையாவது தின்னுயென்று கொடுக்க மனம்வராத, கொடியரில்கொடியேன்= தீமையானவர்களில் பெரிய தீமையானவன்,—ஓய்வுறுதழல் =கொஞ்சமாவது கிம்மிதியில்லாமல் ஓடித்திரிந்து உழன்றுகொண்டிருக்கும், ஈயெனப் பலகால்=ஈயைப்போல் யெந்தகாலத்திலும், ஓடிஓடியே தேடுறும் தொழிலேன் = அலுப்பு சலிப்பு இல்லாமல் கண்டவிடமெல்லாம் ஓடி ஓடித் திரிந்து பணம் சம்பாதிக்குந் தொழிலுடையவன், சாவுறுவகைக்கு= இத்தியாதி குணங்களையுடைய நான் இறக்கும் சமயத்தில் வீணே மறணமாகவிருக்கும்படியான எதுவுக்கு நான் ஒன்றும் பரசாதனங்கள் சம்பாதியாதவனாயிருக்கிறபடியால், யென்செயக்கடவேன்—அந்த சமயம் நான் யென்னசெய்ய முடியும் ஆதலால், தந்தையே=அன்பாகிய என்னை வளர்த்த பெரிய தகப்பனே, யெனைத் தாங்கிக்கொண்டருளே=வீணாய் மரண

Koviloor Digital Library

யாகாமல்படி உம்முடைய அருளைத்தந்து அடியேனை தாங்கி கிருபைசெய்ய வேண்டுகிறேன். (எ - று.) (ச)

போகமாதியைவிழைந்தனன்வீணிற்
பொழுதுபோக்கிடுமிழுதையேனழியாத்
தேகமாதியைப்பெறமுயன்றறியேன்
சிரங்குநெஞ்சக்குரங்கொடுமுழல்வேன்
காகமாதிகளருந்தவோர்பொருக்குங்
காட்டநேர்ந்திடாக்கடையரிற்கடையேன்
ஆகமாதிசொல்லறிவறிவேனோ
வப்பனேயெனையாண்டுகொண்டருளே.

(இ - ள்.) போகமாதியை = பூலோகத்தின் பாவமுதலியவற்றில் முதன்மையாகிய பாவமாகிய பறஸ்திரீயை தழுவலாகிய புணர்ச்சி முதலியவற்றை. விழைந்தனன் = மிகுதமாகயெந்நேரமும் விடாதுசெய்துக்கொண்டிருந்தவன், வீணிற் பொழுதுபோக்கிடும் = ஒருவேலையும் செய்யாமல் காலங்கழிக்கும்படியான, மிழுதையேன் = அறிவில்லாதவனாகிய சோம்பேறியானவன், அழியா தேகமாதியை = என்னாளும் சாரூப சாயுச்யபதவியை சேறவேண்டுமென்றும் இந்ததேகத்தை அழியாதிருக்கவேண்டுமென்கிற தவநிலைகளை, பெற முயன்றறியேன் = பெறுவதற்காகவேண்டி ஏதுக்களை செய்ய முயற்சி செய்ததுமில்லை செய்யவேண்டுமென்கிறது இம்மாதிரியானதென்றும் அறியவில்லை, சிரங்குநெஞ்சகக் = சிரங்கு என்னும் குரூரநோயால் வருத்தப்படுவதுபோல் வருத்தப்படும்படியான மனதையுடைய குணங்கெட்ட துர்குணங்களைக்கொண்டு, உழல்வேன் = வரும் வருத்தங்களைப்பட்டுக்கொண்டு இருக்கிறேன் காகமாதிகள் = காக முதலிய பட்சிவகைகளும் நாய் முதலாகிய மிருகவகைகளும். அருந்தவோர் = தின்பதர்க்காகவேண்டி ஒரு, பொருக்குங்காட்ட = ஒருசோற்றுபருக்கையாவது அதுகளுக்கு காட்ட, நேர்ந்திடா = முடியாதிருக்கும்படியான, கடை

Koviloor Digital Library

யரில்கடையேன் = கீழானவர்களிலும் கீழானவன்; எச்சில்கை யிலும் காக்கைஒட்டாதவன் யென்பது கருத்து, ஆகமாதி = ஆதி யாயிராநின்ற வேதபுராண இதிகாச முதலியவைகள், சொல் லறிவேனோ = எனக்கு சொல்லாநின்ற நன்மையாகியது இன் னது தீமையாகியது இன்னது யென்று சொல்லும்படியான வைகளில் நன்மை தீமை பகுத்தறியும் தன்மை அறிவேனோ அறியமாட்டான் ஆதலால் இத்தன்மை துர்நடத்தை குணங் களையுடைய யென்னை, வப்பனேயென்னை யாண்டுகொண்ட ருளே = யென்னைப்பெற்ற தகப்பனிலும் கிருபையுடைய தகப் பனே யென்னை ஆண்டுகொண்டு அருள் செய்வாய் (எ-று) (௨)

(அதாவது யெந்த நேரத்திலும் கெட்ட செய்கையையே கைகொண்ட நான் யெந்தமாதிரி அறிவேன்.)

விழியைத்தூர்க்கின்றவஞ்சரைவிழைந்தேன்
விருந்திலேயுணவருந்தியோர்வயிற்றுக்
குழியைத்தூர்க்கின்றகொடியரிற்கொடியேன்
கோபவெய்யனேன்பாபமேபயின்றேன்
வழியைத்தூர்ப்பவர்க்குளவுரைத்திடுவேன்
மாயமேபுரிபேயரிற்பெரியேன்
பழியைத்தூர்ப்பதற்கென்செயக்கடவேன்
பரமனேயெனைப்பரிந்துகொண்டருளே.

(இ-ள்.) விழியைத்தூர்க்கின்ற = வழியில் போகும்படி யான மனிதர்களின் கண்களையும் இன்னம் மற்ற மேலானவ ரின் கண்களையும் மோசஞ்செய்யவேண்டுமென்கிற யெண் ணத்தோடு அதாவது அவர்களிடம் இருக்கும்பணம் பறிக்க வேண்டுமென்கிற கெட்ட யெண்ணத்தோடு கண்ணில் ஏதாவது காரமானவற்றை கையிலெடுத்து ஊதி கண்கள் தெரியாமல் செய்துவிட்டு அவர்களிடமிருக்கும் பணம் முத லிய சொத்துக்களை பிடிங்கிக்கொண்டோடும்படியான, வஞ்ச ரை = வஞ்சகம் செய்யும்படியான திருடர்களை, விழைந்தேன்

Koviloor Digital Library

= அவர்களுடைய இஷ்டத்தையே யெடுத்தேன், தவிற கண்களை மூடிக்கொண்டு சதா நிஷ்டையிலிருக்கும் மேலோர்களைப்போல கண்களை மூடிக்கொண்டிருக்கும் வஞ்சக சாதுக்களாகிய பரமார்த்தருடைய கூட்டத்திலேயே சேர்ந்து அவர்கள் செய்யும்படியான கேட்டையே நானும் செய்தேன், விருந்திலே = புதிதாய் வந்திருக்கும்படியான அதிதிகளுக்கு சாப்பாடு போடும்படியான போசனத்திலே, யுணவருந்தி = அழையா வீட்டுக்கு நுழையா சம்பந்திபோல சேர்ந்து நானும் தின்று, ஓர் வயிற்று = தன்னுடைய ஒரு வயிற்றுக்கு, குழியைத்தூர்க்கின்ற = தான் வயிற்றுக்குழியை நிறப்புகின்ற, கொடியரிற் கொடியேன் = மேல்சொன்னபடி செய்யானின்ற கெட்டவர்களிலும் மிக கெட்டவன், கோபவெய்யனேன் = பொல்லாத கோபத்தையுடையவன், பாபமே பயின்றேன் = யெப்போதும் பாபமே செய்தவன், வழியைத்தூர்ப்பவர்க்கு = ஒரு ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு அல்லது இடத்துக்குப் போகும்படியான வழியை அடைக்கும்படியானவர்க்கு அல்லது சன்மார்க்கமான வழியில் செல்லும்படியான யெண்ணமுடையவர்க்கு அந்த வழியைவிட்டு துன்மார்க்கமான வழியில் செல்லும்படியாகிய, உளவுரைத்திடுவேன் = இம்மாதிரி செய்யென்று வேவுசொல்லிக்கொடுப்பேன், மாயமேபுரி = எக்காலமும் மாயம் செய்துக்கொண்டிருக்கும்படியான, பேயரிற்பெரியேன் = கெட்டவர்களில் தலைமையானவன், பழியைத்தூர்ப்பதற்கு = இம்மாதிரியாகிய கெடுதலையுடைய காரியங்களையே செய்துபெற்றிருக்கும்படியாகிய வழியைவிட்டு நீங்குவதர்க்கு, யென்செயக்கடவேன் பரமனே = கடவுளே நான் செய்வேன் யெம்மாதிரி உய்வேன் வேறுவழியில்லை ஆதலால், யெனைப் பரிந்துகொண்டருளே = யென்னை ஆதரித்து தயவுபுரிந்து யேழையேனை கடைத்தேறும்படியாக தந்து அருள் செய்வாயாக. (எ-று) (௩)

மதத்திலேயபிமானங்கொண்டுழல்வேன்
வாட்டமேசெயுங்கூட்டத்தில்பயில்வேன்

Koviloor Digital Library

மதத்திலேயொருவார்த்தையும்புகலேன்
ஈயுமொய்த்திடற்கிசையுறுதுன்பேன்
குதத்திலேயிழிமலத்திறுங்கடையேன்
கோடைவெய்யிலின்கொடுமையிற்கொடியேன்
இதத்திலேயுறற்கென்செயக்கடவேன்
தெய்வமேயெனைச்சேர்த்துக்கொண்டருளே.

(இ - ள்.) மதத்திலேயபிமானம்கொண்டுழல்வேன் = நான் கொண்டிருக்கும்படியாகிய சாதியே பெரிதென்று அதை கெட்டியாய்பிடித்து அதையே மேலாம்பறம் யென்றும் மற்ற மதங்கள் கீழ்மையானதென்னும் பெருமைகொண்டிருப்பேன், வாட்டமேசெய்யும் = சனங்களின் மனது சோர்வு அடையும் படியாகிய பல மாதிரியான செய்கைகள் செய்யும்படியாகிய. கூட்டத்தில் பயில்வேன் = கூட்டத்தில் சேர்ந்து அவர்கள் செய்யும்படியாகிய செய்கைகளை கற்றுக்கொள்வேன், இதத்திலே ஒரு = இன்பம்செய்யும்படியாகிய நயமொழிகளில் ஒன்று, வார்த்தையும் புகலேன் = ஒரு மொழியாவது சொல்லமாட்டேன், ஈயுமொய்த்திடற்கு = நான் சாப்பிடும்படியான வகைகளில் ஈ வந்து உட்கார்ந்து அதின் சுவையை கிரகிக்காத, இசையுறு = யெந்தவிதத்திலும் இசைபடாதபடியாக, உண்பேன் = தின்பேன், குதத்திலே = ஆசனத்திலிருந்து வரும் படியாகிய, இழியமலத்தினும் = இழிவாகிய வலத்தினும், கடையேன் = கெட்டவன, கோடைவெய்யலின் = கோடைகாலத்தில் காணும் வெய்யிலானது வெகு தீக்ஷணியமானது அதைக்காண, கொடுமையிற் = வருத்தம் தரும்படியான மனிதர்களிலும், கொடியேன் = மிகுதமாகியகெட்டவன், இதத்திலே யுறற்கென்செயக்கடவேன் = மேல்காட்டியவைகளெல்லாம் என் மனதைவிட்டு நீக்கி நன்மையாகிய கவனங்கள் வந்தடையும்படியாக இருப்பதற்கு நான் யென்னசெய்யட்டும், தெய்வமே = கடவுளே, யெனைச் சேர்த்துக்கொண்டருளே = நான் என்னசெய்திருந்தபோதிலும் நீக்கி மன்னித்து யென்னை உன் பாதத்தில் சேர்த்துக்கொண்டு அருள்செய்வாயாக (எ-று) (௪)

Koviloor Digital Library

கொடியவெம்புலிக்குணத்தினேனுதவாக்
 கூவனேர்ந்துளேன் பாவமேபயின்றேன்
கடியநெஞ்சினேன்குங்குமஞ்சுமந்த
 கழுதையேனவப்பொழுதையேகழிப்பேன்
விடியுமுன்னரே யெழுந்திடாதுறங்கும்
 வேடனேன்முழுமூடரிற்பெரியேன்
அடியனுவதற்கென்செயக்கடவே
 னப்பனேயெனையாண்டுகொண்டருளே.

(இ-ள்.) கொடியவெம்புலி=பொல்லாத பெருங்கோப த்தையுடைய புலியின், குணத்தினேன்=தன்மையையுடைய வன், உதவாகூவம்=ஒன்றுக்கும் யாருக்கும் உதவாத தண்ணீ ரில்லாத கிணறுபோல், நேர்ந்துளேன்=யாருக்கும் உதவாத வன், பாவமே பயின்றேன்=பாவத்தையே பாடமாக கற்ற வன், கடியநெஞ்சினேன்=கொடுமைபொருந்திய கடிசாகிய நெஞ்சென்னும் மனதையுடையவன், குங்குமஞ்சுமந்த=குங் குமத்தை அதாவது வாசனையுடைய குங்குமபூவை சுமந்திரா னின்ற, கழுதையேன்=கழுதைப்போலொத்தவன் அதாவது; குங்குமப்பூவின் வாசனையறியாத கழுதையைப்போன்றவன், அவப்பொழுதையே கழிப்பேன்=வீணுக காலங்களை கழித்த வனுயிருக்கிறேன், விடியுமுன்னரே=சூரியன் வெளிகிளம் புவதற்குமுன்பாகவே, யெழுந்திடாதுறங்கும் = யெழுந்து முகம், கை, கால் சுத்தம்செய்து வேதபாராயணம் செய்யாமல் தடிக்கழுதைபோலுறங்கும்,வேடனேன்=வெளிபகட்டு காண் பிக்கும் வேஷத்தையுடையவன், முழுமூடரிற்பெரியேன்= முழுதும் தெரியாத மூடாத்துமாக்களில் தலைமையானவன், அடியனுவதற்கென்செயக்கடவேன்=கடவுளே இத்தியாதி குணங்களையுடைய நான் உன் திருபாதத்தில் தொண்டுசெய் து சேறவேண்டுமென்பதற்கு செய்வது யென்ன அதாவது யென்னசெய்வேன் ஒன்றும்செய்ய முடியவில்லை ஆதலால் அப்பனே யெனையாண்டுகொண்டருளே=யென்னைப்பெற்ற தகப்பனிலும் கிருபையுடைய அப்பனே இந்த அடியேனை

Koviloor Digital Library

ஆண்டு ரக்ஷித்துக்கொண்டு அருள்யென்னும் கிருபைசெய்வாயாக. (எ - று.) (௫)

தூங்குகின்றதேசுகமெனவறிந்தேன்
சோறதேபெறும்பேறதென்றுணர்ந்தேன்
ஏங்குகின்றதேதொழிலெனப்பிடித்தே
னிரக்கின்றோர்களே யென்னினுமவர்பால்
வாங்குகின்றதேபொருளெனவலித்தேன்
வஞ்சநெஞ்சினாற்பஞ்செனப்பறந்தேன்
ஓங்குகின்றதற்கென்செயக்கடவே
னுடையவாவெனையுவந்துகொண்டருளே.

(இ - ள்.) தூங்குகின்றதே=எக்காலமும் சதா தூக்கம் பிடித்து நித்திரைசெய்து இருக்கிறதையே, சுகமெனவறிந்தேன்=சுகம்யென்று நான் அறிந்தவனாயிருக்கிறேன், சோறதே=நான் பெறும்படியானவற்றில் தினந்தோறும் வயிறு நிறைய சாப்பிடும் சோற்றையே, பெறும்பேரெனவறிந்தேன்=நான் பெற்றிருக்கும்படியாகிய பேறு சாப்பாடுதான் யென்று அறிந்தேன், ஏங்குகின்றதே=எந்நாளும் நல்ல அடியார்களைக் கண்டு அவர்கள் பெற்றிருக்கும்படியாகியபேறை நாம் பெறவில்லையே யென்று, அல்லது சம்பத்துடையவர்களைக்கண்டு நமக்குக் கிடைக்கவில்லையேயென்று, தொழிலெனப்பிடித்தேன்=இதுவே தொழில் இதுதான் வேலையென்று கைபிடித்தவனாயிருக்கிறேன், இரக்கின்றோர்களே யென்னினும்=எனக்கு கண்ணில் அகப்பட்டவர்கள் நாள்சென்று இரந்து தின்பவர்களாயிருந்தாலும், அவர்பால் = அப்படிபட்டவர்களிடம் வாங்குகின்றதே=அவர்களையும் கேட்டு யேதாவது வாங்குவதே, பொருள்யென=பணம்யென, வலித்தேன்=கடினமாய் வாங்கும் குணத்தையுடையவன். யேழைகளிடத்திலேயே கடினமாய் வாங்கினால் பொருளுடையவரை யெங்குபோனாலும் விடார்போலும், வஞ்ச நெஞ்சினால்=என்னுடைய நெஞ்சிலிருக்கும் வஞ்சகத்தினால் நன்மையைக்கண்டால், பஞ்செனப்

Koviloor Digital Library

பறந்தேன்=பஞ்சு காற்றில் யெம்மாதிரி பறக்குமோ அப்படிப் போல் நன்மை நம்முடைய மனதை யெங்கே பிடிக்குமோ யென்று பறந்தவனாயிருக்கிறேன், ஓங்குகின்றதற் கென்செயக்கடவேன்=கடவுளே என் மனமானது உன்னுடைய கிருபையைப் பெற்று நன்மையைப் பதிந்துவளர்ந்து ஓங்கி உன் அடிபெறுவதற்கு நான் என்ன செய்யட்டும், உடையவா=யென்னை அடிமையாகக்கொண்ட கடவுளே, யெனையாண்டுகொண்டருளே=யென்னை யுவந்து ரக்ஷித்து கிருபைகொடுத்து அருள்செய்வாயாக (எ-று.) (௬)

வருத்தநேர்பெரும்பாரமேசுமந்து
  வாடுமோர்பொதிமாடெனவுழன்றேன்
பருத்தவூனொடுமலமுணத்திரியும்
  பன்றிபோன்றுளேனன்றியொன்றறியேன்
கருத்திலாதயல்குறைத்தலுப்படைந்த
  கடையநாயினிற்கடையனேனருட்குப்
பொருத்தனாவதற்கென்செயக்கடவேன்
  புண்ணியாவெனைப் புரிந்துகொண்டருளே.

(இ-ள்.) வருத்தநேர்=கஷ்டத்தை தரும்படியாகிய, பெரும்பாரமேசுமந்து=பெரியபளுவை தாங்கிகொண்டு பேகும்படியான, வாடுமோர் பொதிமாடென=பொதிசுமக்கும்படியான எருது வாடியதுபோல், வுழன்றேன்=அதிகமாகிய பாபத்தைச்சுமந்து அந்த மாட்டைப்போல் நான் கவலையடைந்தவனாயிருக்கிறேன், பருத்தவூனொடு=பெருத்த கொழுத்த சரீரத்தையோடு கூடிய திரேகத்தோடு, மலமுணத்திரியும்=மலத்தின் வாசனையைக்கண்டு தின்பதற்காக யெங்குளதோ யென ஓடித்திரியும்படியான, பன்றிபோன்றுளேன்=பன்றியைப்போல் நான் திரிந்துக்கொண்டிருக்கிறேன், அன்றி ஒன்றறியேன்=மாட்டைப்போல் உழைக்கவும் பன்றிபோல் தின்னவுமே ஒழிய வேறு ஒன்றும் தெரியாது, கருத்திலாதயல்=கொஞ்சமாவது விவேகம் இல்லாமல்படி பக்கத்தில், குறை

Koviloor Digital Library

தலுப்படைந்த=குலைத்து குலைத்து வாய்நொந்து அலுப்படைந்திருக்கும்படியாகிய, கடையநாயினிற்=கேடுகெட்ட நாயினும், கடையனேன்=கேடுகெட்டவன், அருட்குப்பொருந்தலுவதற்கு=கடவுளே உன்னுடைய அருளுக்கு நான் இணக்கமாவதற்கு, யென்செயக்கடவேன் = யென்னத்தைத்தான் செய்வேன், புண்ணியா=பாபம் செய்பவர்களுக்கு புண்ணியத்தை தரும்படியாகிய கடவுளே, யெனைப்புரிந்துகொண்டருளே=யென்னை உன்னடியனாக செய்து என்பேரில் பட்சம்வைத்து அருள்செய்வாயாக. (எ - று.) (எ)

துருக்கலோகொடுங்கருங்கலோவயிரச்
சூழ்கலோவெனக்காழ்கொளுமனத்தேன்
தருக்கலானவக்கருக்கலோடுழல்வேன்
சந்தைநாயெனப்பந்தமுற்றலைவேன்
திருக்கெலாம்பெறுவெருக்கெனப்புகுவேன்
தீயனேன்பெரும்பேயனேனுளந்தான்
உருக்கலாகுதற்கென்செயக்கடவே
னுடையவாவெனையுவந்துகொண்டருளே.

(இ - ள்) துருக்கலோ=கடவுளே என்னுடைய மனமானது இரும்பு சிட்டமோ, கொடுங் கருங்கலோ=கல்தச்சன் உளிக்கும் அசைவுபடா கொடுமைபூண்ட கரும்பாறைக் கல்லோ, வயிரச்சூழ்கலோ=வயிறம் யென்னும் சினம் சூழ்ந்த கல்லோ, வெனக்காழ்கொளுமனத்தேன்=யென்று சொல்லும்படியாகிய குற்றங்களைக்கொண்ட மனதையுடையவன், தருக்கலானவம் = அகங்கரித்தல், ஆங்காறம், கருக்கலோடுழல்வேன்=மனம் நோவச்செய்தலாகிய குணத்தோடு உழன்றுகொண்டிருக்கிறேன், சந்தைநாயென=கடைவீதியில் திரியும்படியாகிய நாய்யென்று, பந்தமுற்றலைவேன் = நாயானது கடைவீதியில் இன்னொரு நாயுடன் சேர்ந்தால் யெம்மாதிரி குரைக்கும் குரைப்புக்கு வால்குழைத்துக்கொண்டு ஓடுவதுபோல பெண்சாதி பிள்ளைமற்ற பந்துக்களின் பந்தத்

Koviloor Digital Library

தில் தலைபட்டு அவர்களுக்கு நாய் வாலை அசைப்பதுபோல அலைந்து திரிகிறவனாயிருக்கிறேன், திருக்கெல்லாம் பெறும்= குற்றங்கள்யாவும் பெரும்படியான, வெறுக்கென புகுவேன்= உருத்திராட்சப்பூஜையென்று ஒன்றும் அறியாததுபோல புகுந்து வருவேன். தீயனேன் = பெரிய தீமை குணத்தையுடையவன், பேயனேன்=ஒன்றும் தெரியாத பேய்க்குணத்தையுடையவன், உளந்தான்=என்னுடைய இத்தகையை குணங்களையுடைய மனம்தான் உருக்கலாகுதற்கு = கடவுளே என்மனதிலுள்ளகபடுகள் யாவும் நீங்கி உன்பேரில் பட்சமாவதற்கு, யென்செயக்கடவேன்=நான் யென்ன செய்யட்டும், உடையவாயெனை உவந்துகொண்டருளே=என்னுடைய தேகம் உயிர் யாவும் சொந்தமாக கொண்டிரானின்றவனே என்னை இன்பமாய் பட்சமுடன் அங்கீகரித்துக்கொண்டு அருள்புரிவாயாக (எ - று.) (அ)

கானமேயுழல்விலங்கினிற்கடையேன்
காமமாதிகள்களைகணிற்பிடித்தேன்
மானமேவிடச்சாதியேமதமே
வாழ்க்கையேயெனவாரிக்கொண்டலைந்தேன்
ஈனமேபொருளெனக்களித்திருந்தே
னிரக்கமென்பதோரெட்டுணையறியேன்
ஞானமேவுதற்கென்செயக்கடவேன்
நாயகாவெனைநயந்துகொண்டருளே.

(இ - ள்.) கானமேயுழல்விலங்கினிற் = காட்டின்கண் உழன்று சண்டைபோட்டு கடித்து கிழித்து திரிகின்ற நால்கால் உயிர்பிராணிகளென்னும் விலங்குகளுக்கும் கீழாக, கடையேன்=கீழ்மையானவன், காமமாதிகள்களை=பாவத்தில் முதலாவதாகிய காமம், மோகம் முதலிய கள்குடித்தலாகிய பாதச் செயல்களை, கணிற்பிடித்தேன் = விடாமல் செய்யும் தொழிலையே கைப்பிடித்தேன், மானமேவிட = வெட்கம் அதிகமாக வரும்படியாக, சாதியே=என்னுடைய சாதி

Koviloor Digital Library

யென்னும் குலமே, மதமே = அகங்காரமே, வாழ்க்கையே யென=என்னுடையவாழ்க்கையே இதுகள் மேலானதென்று, வாரிக்கொண்டலைந்தேன் = இதுகளின் யாவற்றின் காரிய கருத்தனையாவும் என்மேல் வாரிப் போட்டுக்கொண்டு அலைந்தவனாயிருக்கிறேன், ஈனமே = ஈனத்தொழில் செய்வது தான், பொருளென = ஆசையாகத் தேடும் பொருள் யென்று, களித்திருந்தேன்=சந்தோஷமாயிருந்தேன், இரக்கம்யென்பது=பட்சாதாபம் யென்று சொல்லும்படியாகிய தயவில், எட்டுணையுமறியேன்=எந்தவிதத்திலும் இம்மாதிரியானதென்று நான் அறியவில்லை, ஞானமேவுதற்கு=கடவுளே உன்னின் ஞானம் அதாவது உன்னை அறிவதற்கான ஞானம் உண்டாவதற்கு, யென்செயக்கடவேன்=நான்யென்ன செய்யட்டும், நாயகாவெனை நயந்துகொண்டருளே = நாயகத்தன்மை பொருந்திய கடவுளே யெனை சீர்திருத்தி நயமாக்கிக்கொண்டு அருள் செய்வாயாக. (எ-று) (க)

இருளையேவொளியெனமதித்திருந்தே
 னிச்சையேபெருவிச்சையென்றலந்தேன்
மருளையேதருமனக்குரங்கோடும்
 வனமெலாஞ்சுழன்றினமெனத்திரிந்தேன்
பொருளைநாடுநற்புந்திசெய்தறியேன்
 பொதுவிலேநடம்புரிகின்றோயுன்ற
னருளைமேவுதற்கென்செயக்கடவே
 னப்பனேயெனையாண்டுகொண்டருளே.

(இ-ள்) இருளையே ஒளியென=கடவுளே நான் என் மனதின்கண் சுழிமுனையில் காணுகின்ற இருட் கூட்டத்தையே உன் அடியார்கள் காணும் ஒளிவுயென்று, மதித்திருந்தேன் = நினைத்திருந்தேன், இச்சையே=பூமியில் மக்கள் பெண்டீர் முதலியவர்களிடத்தில் உண்டாயிருக்கும் இன்பமே, பெருவிச்சையென்றலந்தேன்=பெரும் இன்பங்கள் இதுதான் யென்று யிருந்தேன், மருளையேதரும்=பயத்தைக்கொடுக்கும்

Koviloor Digital Library

படியாகிய, மனக்குரங்கொடு=கெட்டுப்போன என் மனதி ேனாடு, வனமெலாஞ்சுழன்ற=காடெல்லாம் சஞ்சரிக்காநின்ற விலங்கினுடைய, இனமெனத்திரிந்தேன் = கூட்டத்துடன் இது என்னுடைய இனம்யென்று திரிந்தேன் அதாவது நானு ம் ஒரு விலக்குபோல அதனுடன் போராடிக்கொண்டிருந் தேன், பொருளைநாடு=கடவுளை உன்னையறிந்து பொருள் தேடுவதற்கு நாடும்படியாகிய நாட்டார், நற்புந்திசெய்தறி யேன்=மற்றவர்களுக்கும் எனக்கும் நல்லபுத்திகளை சொல்வி யும் இருக்கமாட்டேன் செய்தும் அறியமாட்டேன், பொதுவி லே நடம்புரிகின்றோ = உலகத்தின் நடுநிலையில் இருந்து உயிர்பிராணிகள் யாவருடைய நடுவில் நடம்புரிந்திராநின்றவ னாகிய, உன்றன்=உன்னுடைய, அருளை மேவுதற்கு=உன் அருள்யென்னும் தயைபெறுவதற்கு, யென்செயக்கடவேன்= யென்னசெய்யட்டும், அப்பனே = தகப்பனிலும் கிருபையு டைய அப்பனே, யென்னை யாண்டுகொண்டருளே = யென் பேரில் கிருபைசெய்து ஆண்டுகொண்டு அருள்புரிவாயாக. (எ - று). (ய)

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது ஆற்றாமை முற்றுபெற்றது.

பாடல் விருத்தம் 10. ஆக கூடியபாடல் உரை 30

நான்காவது முறையீடு.

எண்சீரடியாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

மருந்தறியேன்மணியறியேன்மந்திரமொன்றறியேன்
மதியறியேன்விதியறியேன்வாழ்க்கைநிலையறியேன்
திருந்தறியேன்றிருவளின்செயலறியேனறந்தான்
செய்தறியேன்மனமடக்குந்திறத்தினிலோரிடத்தே

Koviloor Digital Library

யிருந்தறியேனறிந்தோரையேத்திடவுமறியே
னெந்தைபிரான்மணிமன்றமெய்தவறிவேனோ
யிருந்திசைசொலவறியேனெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே.

(இ-ள்) மருந்தறியேன்=ஒகடவுளே! என் மனமானது உன்னை உய்யும்வண்ணம் அந்தமனதிற்கு பரிகாரம்செய்ய மருந்தாகிய ஔஷதம் இன்னதென நான் அறியமாட்டேன், மணியறியேன்=உனக்குத் தொண்டுசெய்வதின் இடம் இன்னதென அறியேன், மந்திரமொன்றறியேன்=உனக்கு தொண்டுசெய்யும்படியாகிய நாமமந்திரம் அறியமாட்டேன், மதியறியேன்=புத்தியும் இன்னதென அறியவுமாட்டேன், விதியறியேன்=எனக்கு உனக்கு தொண்டுசெய்யும் வணக்கவிதிகளும் அறியேன், வாழ்கைநிலையறியேன்=என் வாழ்கை இத்தனைநாள் தான்யென நாட்களின் நிலையையும் அறியமாட்டேன் நான் தெரிந்தாலும் இன்னம் இத்தனைநாளிருக்கிறது பின்னால் தொண்டுசெய்யலாம் யென இருக்கலாம் அதுவுமோ தெரியாது,—திருந்தறியேன்=என் மனம் பலவழிகளில் செல்லாமல் திருத்தி ஓர் நிலைப்படுத்த அறியமாட்டேன், திருவருளின்செயலறியேன்=உன் உயர்வாகிய அருளின் செய்கையானது இன்னதென நான் அறியமாட்டேன், அறந்தான் செய்தறியேன்=தர்மம்யென்பது எப்போதும்செய்தேயிருக்கமாட்டேன்,மனம் அடங்கும் திறத்தினில்=என் கெட்டித்தனத்தால் பலவகைகளிலும் பாய்ந்துநின்று பரவிகிடக்கும் மனதை அடக்கி ஓரிடத்தே=ஓர் இடத்தில், யிருந்தறியேன்=சிறத்தி ஒரே எண்ணத்திலிருத்தி இருக்க யென்றால் முடியவில்லை, அறிந்தோரை=மனம் அடக்கும் தன்மையை தெரிந்தவர்களாகிய பெரியோர்களை, யேத்திடவுமறியேன்=அடுத்து அப்படிப்பட்டவர்களை வணங்கி கற்றுக்கொள்ளமாட்டேன், யெந்தைபிரான்=யென்னை படைத்த யெப்பொருட்குமிறைவனுடைய, மணிமன்றமெய்த=என்மனமாகிய கனகசபையின்கண் ஜொ

Koviloor Digital Library

லிக்காநின்ற ஒளிவைபெற,வறிவேனோ=மேல்காட்டிய குண ங்களெல்லாம் பூண்டிராநின்ற நான் பெறுகிறதற்கு அறிவே னோ அறியமாட்டேன், யிருந்ததிசை=நான் இருக்கும்படி யான திக்கு இன்னதுயென்று, சொலவறியேன்=சொல்லுவ தற்கு முடியாத நான், யெங்கெனநான்புகுவேன்=எவ்விடம் போய் புகுந்து நான் அறிந்துகொள்வேன், யார்க்குரைப்பேன் =எவருக்கு நான் சொல்வேன், யென்னசெய்வேன்=யென் னதான்செய்வேன், எதுமறிந்திலனே=ஒ கடவுளே ஒன்றும் நான் அறியமுடியவில்லையே. (எ - று). (௬)

அகங்காரக்கொடுகிழங்கையகழ்ந்தெறியவறியே
னறிவறிந்தவந்தணர்பாற்செறியுநெறியறியேன்
நகங்கானமுறுதவர்போல்நலம்புரிந்துமறியேன்
நச்சுமரக்கனிபோலயிச்சைகனிந்துழன்றேன்
மகங்காணும்புலவரெலாம்வந்துதொழநடிக்கும்
மணிமன்றந்தனையடையும்வழியுமறிவேனோ
இகங்காணத்திரிகின்றேனெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே

(இ - ள்) அகங்காரக்கொடுகிழங்கை=கடவுளே மனதி லேதான் யென்னும் அகங்காறம் யென்கிற கெட்ட செடியின் வேரையுடைய கிழங்கை, அகழ்ந்தெறிய வறியேன்= அதை அடியோடுதோண்டி பிடிங்கி யெடுத்து யெறியும்படியான வ கையை அறியமாட்டேன், அறிவறிந்தவந்தணர்பால்= அறிவு களை நன்றாய் தெரிந்திருக்கும்படியான மேலோர்களிடம், செ றியுநெரியறியேன் = நெருங்கி இணங்கும்படியான வழியை அறியமாட்டேன், நகங்கான முறுதவர்போல்=கடைசியாகிய புண்ணியம் செய்பவர்கள்போலாவது, நலம்புரிந்துமரியே ன்=நன்மையாவது ஒன்று செய்ததை யெப்போதும் அறியா தவன், நச்சுமறக்கனிபோல = கொடுமை பொருந்திய விஷங் களையுடைய மறத்தின் பழம்போல, இச்சைகனிந்துழன்றேன் =என் கொடுமையாகிய இச்சையானது படுத்து உழன்றிருக்

Koviloor Digital Library

கிறேன், அகங்காணும் புலவரெல்லாம்=கடவுளே உன்னை தன்னுடைய மனதின்கண் காணும்படியாகிய அறிவாளர்களெல்லாம், வந்து தொழ நடிக்கும்= உன்னை அன்பாக வந்தித்து வணங்க அவர்கள் மனதின்கண்வந்து நடிக்கும்படியாகிய, மணிமன்றந்தனை=மனதாகிய கனகசபையின்கண் ஜொலிக்காநின்ற ஒளிவை, அடையும்வழியுமறிவேனோ=நான் பெரும்படியான மார்க்கத்தையடைவேனோ அறிவேனோ ஆகடவுளே, இகங்கான திரிகின்றேன்=பூவுலக இன்பத்தைகாணும்படியாக திரிகின்ற நான் இதை விட்டுவிட்டு, யெங்ஙனநான் புகுவேன்=எவ்விடம் நான் நுழைவேன், யார்க்குரைப்பேன் =எவரிடம் நான் என்னிட்ட குறையைச் சொல்வேன், யென்னசெய்வேன் =யென்னத்தைத்தான் செய்வேன், யேதுமறிந்திலனே=ஒன்றும் எனக்கு தெரியவில்லையே (எ - று). (உ)

கற்குமுறைகற்றறியேன்கற்பனகற்றறிந்த
கருத்தர்திருக்கூட்டத்திற்களித்திருக்கவறியேன்
நிற்குநிலைநின்றறியேனின்றுரினடித்தேன்
நெடுங்காமப்பெருங்கடலைநீந்தும்வகையறியேன்
சிற்குணமாமணிமன்றிற்றிருநடனம்புரியுந்
திருவடியென்சென்னிமிசைச்சேர்க்கவறிவேனோ
இற்குணஞ்செய்துழல்கின்றேனெங்ஙனநான்புகுவேன்
யார்க்குறைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே

(இ - ள்) கற்குமுறைகற்றறியேன் = நான் உன் பதம் அடையும்படியாகிய மார்க்கமுறை படிக்கும்படியான வகைகளை நான் கற்று அறியவில்லை, கற்பன கற்றறிந்த=படித்துக் கொள்ளும்படியானவற்றை கற்று அறிந்திருக்கும்படியான, கருத்தர் திருக்கூட்டத்தில் = எண்ணத்தையுடையவர்களின் மேலான கூட்டங்களில், களித்திருக்கவறியேன் = அவர்களுடன் கலந்து அவர்களோடுகூட சந்தோஷமாயிருக்க அறியவில்லை, நிற்குநிலைநின்றறியேன்=நிற்கும்படியான ஒருவழியில் நின்று அறியவுமில்லை, நின்றுரினடித்தேன் = அப்படி

Koviloor Digital Library

நிற்கும்படியானவர்களைப்போல் நடித்தேனே அல்லது மெய்யாக நிற்கவில்லை, நெடுங்காமப்பெருங்கடலை = அதிக ஆழமாகிய காமத்தின் பெரியகடலை, நீந்தும் வகையறியேன் = அந்த சமுத்திரத்தில் நீந்தி கரைசேரவேண்டிய வழியை அறியமாட்டேன், சிற்குணமாம் = பரிசுத்தகுணமாயிராநின்ற, மணிமன்றிற்றிருநடனம்புரியும் = மனமாகிய கனகசபையின்கண் ஒளிவாயிலங்கி நடனஞ்செய்யாநின்ற, திருவடியென் சென்னிமிசை = அப்படிபட்ட நாயனது உயர்ந்த பாதத் தாமறையையென்னுடைய தலையின்மீது, சேர்க்க வறிவேனோ = சேர்த்துக்கொள்வதற்கு அறிவேனோ அறிய முடியவில்லையே, இற்குணம்செய்துழல்கின்றேன் = மேல்காட்டிய குணங்களைசெய்து திரிகின்றவனாயிருக்கின்றேன், யெங்ஙனநான்புகுவேன் = யெவ்விடம் நான் நுழைவேன், யார்க்குறைப்பேன் = யெவருக்கு சொல்வேன், யென்னசெய்வேன் = யாதுசெய்யட்டும், ஏதுமறிந்திலனே — ஒன்றுமறியேனே கடவுளே (எ-று) (௩)

தேகமுறுபூதநிலைத்திறஞ்சிறிதுமறியேன்
சித்தாந்தநிலையறியேன்சித்திநிலையறியேன்
யோகமுறுநிலைசிறிதுமுணர்ந்தறியேன்சிறியே
னுலகநடைக்கிடைந்தேயுழைப்பாரிற்கடையேன்
ஆகமுறுதிருநீற்றினொளிவிளங்கவசைந்தோ
யம்பலத்திலாடுகின்றவடியையறிவேனோ
ஏகவறுபவமறியேனெங்ஙனநான்புகுவேன்
யார்க்குறைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே

(இ-ள்) தேகமுறு = தேகத்திலுண்டாயிருக்கும், பூதநிலை = ஐம்பூதங்களின் நிலையை திறம் சிறிதுமறியேன் = அதினுடைய பலம் கொஞ்சமாவது இன்னவிதத்திலிருக்கிறதென்று அறியமாட்டேன், சித்தாந்தநிலையறியேன் = தர்க்கமுடிவு சம்பந்த விகற்பங்களின் நிலை இன்னதென்றும் அறியமாட்டேன், சித்திநிலையறியேன் = யோகத்தினுடைய நிலையையும் அறியமாட்டேன், யோகமுறுநிலை = யோகம் செய்யும்படியா

Koviloor Digital Library

ிய ந்லையையும், சிறிதுமுணர்ந்தறியேன் = கொஞ்சமாவது முணர்ச்சிபெற்று அறிந்திருக்கவுமில்லை, சிறியேன் = யாவரினும் சின்னவன் கடையானவன், உலகநடையிடைக்கிடைந்தே = உலகத்தில் நடைபெறும்படியாகிய உலகவியாபாரங்களின் இடைந்து அகப்பட்டு உழன்று, உழைப்பாரில் கடையேன் = கஷ்டப்படுவர்களில் கீழானவனுயிருக்கிறேன், ஆகமுறு திருநீற்றிணுளிவிளக்க = ஆகமபுராணங்களுக்கெல்லாம் காரணமுடைய ஒளிவு பிரகாசிக்க, வசைந்தோயம்பலத்திலாடுகின்ற = நடனமாக வெட்டவெளியிலாடுகின்ற, அடியை அறிவேனே = கடவுளே உன்னுடையபாததாமரையைசேர்வதற்கு அறியமுடியுமோ, ஏகவநுபவம் அறியேன் = ஏகமாகிய உன்னை சேர்வதற்குரிய காரியங்களில் சேர்ந்துசெய்த அநுபவங்கள் தெரியாதவன்யெங்ஙனநான்புகுவேன் = யெவ்விடத்தில் நான் நுழைவேன்யார்க்குரைப்பேன் = யாருக்குத்தான்சொல்வேன் யென்னசெய்வேன் = யேதுதான் செய்யட்டும், ஏதுமறிந்திலனே = யேல்காட்டியவைகள் ஒன்றும் செய்ய அறிந்திருக்கவில்லையே கடவுளே. (எ-று). (௪)

வேதாந்தநிலைநாடிவிரைந்துமுயன்றறியேன்
 மெய்வகையுங்கைவகையுஞ்செய்வகையுமறியேன்
நாதாந்தத்திருவீதிநடந்திடுதற்கறியேன்
 நானுரென்றறியேனெங்கோனுரென்றறியேன்
போதாந்தத்திருநாடுபுகவறியேன்ஞான
 பூரணுகாயமெனும்பொதுவையறிவேனே
ஏதாந்தீயேன்சரிதமெங்ஙனநான்புகுவேன்
 யாற்குரைப்பேனெனசெய்வேனேதுமறிந்திலனே.

(இ - ள்) வேதாந்தநிலைநாடி = நான்குவேதத்திலுள்ள ஆதியந்தங்களின் நிலையை அறிகிறதற்காக வேண்டி நாட்டம் உண்டாகி, விரைந்து = சீக்கிறமாக அதை அறியும்படியானவர்களிடம் சென்று, முயன்றறியேன் = கற்கவேண்டுமென்று முயற்சிசெய்தறியமாட்டேன், மெய்வகையும் = இந்த உடல் இ

Koviloor Digital Library

ம்மாதிரியானதென்று சொல்லும்படியான வகைகளையும், கை வகையும்=இன்னம் அதினுடைய ஒழுக்கமாகியவகைகளையும், செய்வகையுமறியேன்=இன்னம் அதற்காக வேண்டிசெய்யும் படியானவகைகளையும் தெரியமாட்டேன், நாதாந்தத்திருவீதி =ஞானநெறிகளில் ஒன்றாகிய திருவீதியின்கண், நடந்திடு தற்கறியேன்=அதில் பழகி நடக்கும்படியானதை நான் அறி யவில்லை, நானாரென்றறியேன்=நான் யார் யெத்தன்மையா னவன் யென்னில் என்னயிருக்கிறது என்னும் இத்தன்மை யானவைகளை அறியமாட்டேன், எங்கோனாரென்றறியேன் =என்னை ஆட்கொண்டு நடத்துவர் யார் யென்றும் அறிய மாட்டேன். போதாந்ததிருநாடு = ஞானங்களை தரும்படியா கிய மேலாகிய நாட்டில், புகவறியேன்=அதில் நுழைவதற்கு அறியமாட்டேன், ஞானபூரணகாயமெனும் = ஞானமென் னும் அறிவுபூரணமாய் நிறைந்திராநின்ற, பொதுவையறிவே னோ=யாரிடத்திலும் பொதுவாயிராநின்ற ஒளிவை நான் அறிவேனோ,—ஏதாம்தீயேன்சரிதம்=இத்தன்மையாகிய குண ங்களை குடிகொண்ட இந்த தீயனுடைய சரித்திரம் ஏதாகு மோ. அதாவது நலவாகுமோ கொடிதாகுமோ தெரியவில் லையே ஆதலால், யெங்ஙனநான்புகுவேன் = எவ்விடத்தில் நான் நுழைவேன், யார்க்குரைப்பேன்=எம் சரித்திரம் இம் மாதிரியென்று யாரிடம்சொல்லி முறையிடுவேன், யென்ன செய்வேன்=நான் யென் கொடிய குணங்களெல்லாம் போக யென்னசெய்யட்டும், யேதுமறிந்திலனே=ஒன்றும் செய்ய ஏதும் அறியவில்லையே. (எ - று) (ரு)

கலைமுடிவுகண்டறியேன்கரணமெலாமடக்குங்
கதியறியேன்கதியறிந்தகருத்தர்களையறியேன்
கொலைபுலைகள்விடுத்தறியேன்கோபமறுத்தறியேன்
கொடுங்காமக்கடல்கடக்குங்குறிப்பறியேன்குணமா
மலைமிசைநின்றிடவறியேன்ஞானநடம்புரியும்
மணிமன்றந்தனையடையும்வழியும்மறிவேனோ

Koviloor Digital Library

இலையெனும்பொய்யுலகினிடையெங்ஙனநான்புகுவேன்
யாற்குரைம்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே.

(இ-ள்) கலைமுடிவு கண்டறியேன் = சந்திரகலை சூரியகலை யென்கிற இடகலைபிங்கலையிறுடைய முடிவானது இத்தன்மையானது யென்று தெரிந்துக்கொள்ளவில்லை, கரணமெலாம் அடக்கும்=மனம், புத்தி, அகங்காறம், சித்தம் முதலியவைகளை அடக்கும்படியாகிய, கதியறியேன்=கதியென்று சொல்லும்படியாகிய ஆதறவும் அறியமாட்டேன், கதிவறிந்த=உன்பாதமே கதியென்று கரணங்களை அறிந்திருக்கும்படியான, கருத்தர்களை யறியேன்=எண்ணங்கொண்டுள்ளவர்களை அறியவுமாட்டேன், கொலைபுலைகள் விடுத்தறியேன் = பஞ்சபாதகங்களில் ஒன்றாகிய, கொலையையும், புலைத்தொழிலாகிய சண்டாளத் தொழிலையையும் விட்டு இருக்கமாட்டேன் விடுவதற்கு தெரியாதவனா யிருக்கிறேன், கோபமறுத்தறியேன்=எனக்கு இரானின்ற கோபத்தை அடியோடு அறுத்து நீக்கிவிட தெரியாதவன், கொடுங்காமக்கடல் =கொடுமைகள்யாவும் சேர்ந்திரானின்ற காமத்தின் சமுத்திரத்தை, கடக்கும் குறிப்பறியேன்= நீந்தி கறைசேர்வது இன்னபடியென்று அதின் குறிப்பும் அறியமாட்டேன், குணமாமலைமிசை=மேல்காட்டியவற்றையும் விட்டு நல்ல குணங்களையுடைய பெரிய மலைமேல். அதாவது நல்ல குணங்களைக் கைக்கொண்டு, நின்றிடவறியேன்=வேறு வழிகளில் செல்லாமல் அதையே கைப்பிடித்து நின்றிருக்கமுடியவில்லை, ஆதலால் இத்தன்மையான கெட்ட குணங்களையுடைய நான், ஞானநடம்புரியும்=பெரியோர்களின் ஞானத்தில் நடம்புரியாநின்ற, மணிமன்றந்தனை=கனகசபையில் ஒளிவாயிலக்கும் ஒளிவை, யடையும் வழியுமறிவேனோ = அடையும்படியாகிய வழியை நான் அறிவேனோ யெப்படி அறிவேன், இலையெனும் பொய்யுலகினிடை=அழிந்துபோகும்படியாகிய பொய்யாகிய இந்த உலகத்தினிடையில், யெங்கனம் நான் புகுவேன்=எவ்

Koviloor Digital Library

விடத்தில் நான் நுழைவேன், யார்க்குரைப்பேன் = யெவரிடம் நான் சொல்லுவேன், யென்னசெய்வேன்=யென்னசெய்யட்டும் ஏதுமறிந்திலனே=ஒன்றும் அறியவில்லையே (எறு) ௯

சாதிமதஞ்சமயமெனுஞ்சங்கடம்விட்டறியேன்
சாத்திரச்சேறாடுகின்றசஞ்சலம்விட்டறியேன்
ஆதியந்தநிலையறியேனலையறியாக்கடல்போ
லானந்தப்பெரும்போகத்தமர்ந்திடவுமறியேன்
நீதிநெறிநடந்தறியேன்சோதிமணிப்பொதுவில்
நிருத்தமிடுமொருத்தர்திருக்கருத்தையறிவேனோ
ஏதிலர்சாருலகினிடையெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே

(இ - ள்) சாதிமதம் சமயமெனும்=என் சாதி பெரியது உன் சாதி சின்னது யென்னும் வழக்கிலும், பெருமையிலும், மார்க்கமென்றிரானின்ற, சங்கடம்விட்டறியேன்=இதுகளின் வருத்தத்தில் அகப்பட்டு முழிக்காமலிருக்க மேல்சொல்லியவைகளின் அவஸ்தையைவிட்டு நீங்க அறியமாட்டேன், சாத்திரச்சேறாடுகின்ற=சாத்திரமாகிய சேற்றில் அதாவது அந்த சாஸ்திரத்தில் இன்னது சொல்லுகிறது இந்த சாஸ்திரத்தில் இன்னது சொல்லுகிறது இரண்டையும் பார்க்கிறதில் பேதாபேதங்களா யிருக்கிற சேற்றில் புரண்டு அலைந்து ஆடும்படியான, சஞ்சலம்விட்டறியேன்=மனவருத்தத்தைவிட்டு நீங்க அறியமாட்டேன், ஆதிஅந்தநிலையறியேன் = துவக்கமுடிவு இதுகளின் நிலையை நான் அறியமாட்டேன், அலையறியாக்கடல்போல்=அலைவீசி அறியத்தெரியாதக்கடல்போல் அதாவது தண்ணீறை மிருதமாகக்கொண்ட ஒரு கிணறுபோல் கிணற்று நீருக்கு அலையுண்டா? இல்லை அந்த கிணற்றைப்போல, ஆனந்தப் பெரும்போகம்=உன் இன்பவெள்ளம் பெற்று அந்த இன்பமாகிய பெரும் போகத்தோடு, அமர்ந்திடவுமாட்டேன்=அமர்ந்து அதே இன்பத்திலிருக்கவுமாட்டாத

Koviloor Digital Library

வன், நீதிநெறி நடந்தறியேன் = நீதியாகிய பாதையில்நடந்து அறிந்தவனுமல்ல, சோதிமணிப்பொதுவில் = ஒளிவாயிராநின்ற மணியை நடுநிலைமையில், திருத்தம்டுமொருத்தர் = நடமாடுகின்ற ஒருவரின், திருக்கருத்தை யறிவேனோ = அவருடைய அழகாகிய கருத்து இன்னதென்றுயான் அறியமுடியுமோ, ஏதிலர்சாருலகிடை = ஏது இல்லை யென்று சொல்லும்படியாகிய சனங்கள் இருக்கானின்ற இந்த உலகத்தின்மீது, யெங்ஙனநான்புகுவேன் = இப்படிப்பட்ட குணங்களையுடைய நான் யெவ்விடம் நுழைவேன், யார்க்குரைப்பேன் = எவருக்கு என்னுடைய குறையை கூறுவேன், என்ன செய்வேன் = இதுகள் நீர நான் செய்யவேண்டுவது யாது, ஏதுமறிந்திலனே = ஒன்றும் நான் தெரிந்துக்கொள்ளமுடியவில்லை. (எ - று) (எ)

சாகாததலையறியேன்வேகாதகாலின்தரமறியேன்
போகாததண்ணீரையறியேன்
ஆகாயநிலையறியேன்மாகாயநிலையுமறியேன்
மெய்ந்நெறிதனையோரனுவளவுமறியேன்
மாகாதலுடையபெருந்திருவாளர்வழுத்தும்
மணிமன்றந்தனையடையும்வழியுமறிவேனோ
ஏகாயவுலகினிடை யெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே

(இ - ள்) சாகாததலையறியேன் = கடவுளே நான் மரணமாகாதிருக்கும்படியாகிய இடம் இன்னதென்று அறியமாட்டேன், வேகாதகாலின் = நெருப்பிலிட்டு வெந்து நீறாகாதிருக்கும்படியாகியவழியின், தரமறியேன் = இது செய்தால் இம்மாதிரி ஆகும் யென்கிற பக்குவம் அறியமாட்டேன், போகாத தண்ணீரை அறியேன் = உன்னுடைய இன்பம் போகாதிருக்கும்படியான குளிர்ந்த குணத்தை அறியமாட்டேன், ஆகாயநிலையறியேன் = பஞ்சபூதியங்களின் நிலை உன்னதாயிருக்கிறதென்று தெரியமாட்டேன், மாகாயநிலையுமறியேன் = பெரிய இந்த உடலின் நிலையுமறியமாட்டேன், மெய்ந்நெறிதனை =

Koviloor Digital Library

உண்மையாகிய வழிதன்னை, ஓரணுவளவும்=ஒரு அற்ப அளவாவது, அறியேன்=அறியமாட்டேன், மாகாதலுடைய=எனக்கு பெரிய அன்புண்டாயிராநின்ற, பெருந்திருவாளர் வழுத்தும்=பெரிய மேன்மைபொருந்திய செல்வர் துதிக்காநின்ற, மணிமன்றந்தனை=கனகசபையின்கண் பிரகாசிக்கும்ஒளிவை, அடையும்=பெறும்படியாகிய, வழியுமறிவேனோ = வழியையும் நன்மையாக நான் அறிவேனோ, ஏகாய உலகினிடை=முத்திபெரும்படியாகிய இந்த உலகின்மீது என்னிட குற்றங்களை நீக்க. யெங்ஙனநான்புகுவேன்=யெந்த இடத்தில் நான் நுழைவேன், யார்க்குரைப்பேன்=யெவரோடு சோல்லுவேன் யென்னசெய்வேன்=யேதுசெய்யட்டும், ஏதுமறிந்திலனே=ஒன்றும் தெரியவில்லையே (எ - று) (அ)

தத்துவமென்வசமாகத்தான்செலுத்தவறியேன்
சாகாதகல்விகற்குந்தரஞ்சிறிதுமறியேன்
அத்தநிலைசத்தநிலையறியேன்மெய்யறிவையறியேன்
மெய்யறிந்தடங்குமறிஞரையுமறியேன்
சுத்தசிவசன்மார்க்கத்திருப்பொதுவினிடத்தே
தூயநடம்புரிகின்றஞாயமறிவேனோ
எத்துணையுங்குணமறியேனெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே.

(இ-ள்) தத்துவம்யென்வசமாக=தத்துவமாகிய ஞானமானது என்னுடையவசம் இருக்கும்படியாக அதை, தான்செலுத்தவறியேன்=நடத்துவதை நான் அறியவேமாட்டேன், சாகாத கல்விகற்கும்=எந்நாளும் சாகாதிருக்கும் படியாகிய ஞானத்தை கற்கும்படியான, தரஞ்சிறிதுமறியேன்=வகையைக்கொஞ்சமாவது அறியமாட்டேன், அந்தநிலை=உன் அருளாகிய நிலையையும், சத்தநிலையறியேன்=உன்னை தொழும்படியாகிய நாமத்தினுடைய சத்தத்தின் நிலையையும் அறியமாட்டேன் மெய்யறிவையறியேன்=உண்மையாக உன்னுடைய அறிவையும் நான் அறியமாட்டேன், மெய்யறிந்தடங்கும்=

உன்றுடைய உண்மையாகிய அறிலை அறிந்து அடங்கியிருக்கும்படியாகிய, மறிஞரையுமறியேன் = அப்படிப்பட்ட அறிவாளர்களையும் நான் அறியமாட்டேன், சுத்தசிவ சன்மார்க்கத் திருப்பொதுவினிடத்தே = சுத்தமாகிய கடவுளின் நல்லமார்க்கத்தைக்கொண் டிருக்கும்படியானவர்கள் யாவருக்கும் பொதுவாகிய மனதினிடத்தே, தூயநடம் புரிகின்ற ஞாயமறிவேனோ = துப்புரவாக காட்சிதருகின்றநின் நியாயம் இது தான் யென்று அறிவேனோ. அறியமாட்டேன். எத்துணையுங் குணமறியேன் = யெந்தவிதத்தில் பார்த்தபோதிலும் அநின் நியாயமாகிய குணம் இதுதான் யென்று அறிய முடியவில்லை, ஆதலால் நானும் அதை பெற்று சந்தோஷிக்க முடியாததால். யெங்ஙன நான் புகுவேன் = வெவ்விடத்தில் நுழைந்து நான் யென்னுடைய முறையை, யார்க்குரைப்பேன் = எவரிடத்தில் கூறுவேன், யென்ன செய்வேன் = யென்னதான் செய்குவேன், யேது மரிந்திலனே = ஒன்றும் நான் அறியவில்லையே (எ-று) (௯)

வரையபரமார்க்கமொடுபரமார்க்கமறிவேன்
மரணபயந்தவிர்த்திடுஞ்சன்மார்க்கமதையறியேன்
திரையறுதண்கடலறியேனக்கடலைக்கடைந்தே
தெள்ளமுதமுணவறியேன்சினமடக்கவறியேன்
உரையுணர்வுகடந்ததிருமணிமன்றந்தனிலே
யொருமைநடம்புரிகின்றார்பெருமையறிவேனோ
இரையுறுபொய்யுலகினிடையெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே.

(இ-ள்) வரையபரமார்க்கமொடு = எழுதுவதற்கு அரிதாகிய பரமார்க்கத்தோடு, பரமார்க்க மறிவேன் = இதரமாகிய மார்க்கங்கள்யாவும் அறிந்தவனாயிருக்கிறேன், அநேகமார்க்கங்களை அறிந்தவனாயிருந்தாலும், மரணபயந்தவிர்த்திடும் = இறக்கும் தருவாயில் உண்டாகிய பயத்தைத் தீர்க்கும்படியாகிய, சன்மார்க்கமதை = நன்மையாகிய உன்னருள் பெற்ற மேலான

Koviloor Digital Library

மார்க்கத்தை அறியேன் = அறியமாட்டேன், திரையறுதண்கட லறியேன் = அலே இல்லாத குளிர்ந்த கடல் அறியமாட்டேன், அதாவது ஞானம் பெற்றவர்கள் பெருமைஅடிக்கமாட்டார்கள் அவர்கள்தான் பெறுமையென்னும் அலேயில்லாத குளிர்ந்த கடல்போலானவர்கள், அக்கடலேக் கடைந்தே = அந்த கடல் போல்வாரிடம் சேர்ந்து அவர்களிடம் ஒன்றுகி ஞானம்பெற்று அந்த ஞானத்தில் ஒளியை சிறுத்திக்கடைந்து, தெள்ளமுத முணவறியேன் = அதிஞலுண்டாகிய தெளிந்த அமுதம்மென்னும்ஞானந்தத்தை தின்பதற்கு அறியமாட்டேன், சினமடக்க வறியேன் = கோபத்தை அடக்கும்படியானவகையும் அறியமாட்டேன், உரை யுணர்வுகடந்த = சொல்வதற்கு அறிவு அதிகமாய் இரானின்ற, திருமணிமன்றந்தனிலே = அழகு பொருந்திய சபையின்மீது நடமாடும் ஒளிவாயிருக்கும், மொருமை நடம்புரிகின்ருர் = தனியாக வீற்றிருக்கின்ற, பெருமை யறிவேனே = நாயேனுகிய நான் அவரின் பெருமை இத்தன்மையையுடையது யென்று அறியவல்லவனே, இரையுறபொய் யுலகினிடை = ஆகாறம் இருக்கும்படியாகிய இந்த பொய்யுலகத்தின்கண், மெங்கனநான் புகுவேன் = மெவ்விடம் நான் நுழைவேன், யார்க்குரைப்பேன் = யார்க்கு சொல்வேன், மென்னசெய்வேன் = மென்னசெய்யட்டும், யேதும் அரிந்திலனே = ஒன்றும் தெறியவில்லையே. எ-று. (ய)

திருச்சிற்றம்பலம்

நான்காவது முறையீடு முற்று பெற்றது

பாடல் விருத்தம் 10. ஆக கூடிய பாடல் உரை 10.

Koviloor Digital Library

ஐந்தாவது.
அடியார் பேறு.
அறுசீரடி யாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அடியார்வருத்தந்தனைக்கண்டு
தரியாரின்பமளித்திடுவார்
வடியார்க்கருணைப்பெருங்கடலாரென்ற
பெரியோர்வார்த்தையெலாம்,
நெடியார்க்கரியாய்கொடியே னென்
னொருவன்றனையுநீக்கியதோ,
கடியாக்கொடுமாபாதகன்
முன்கண்டபரிசிங்கண்டிலனே.

(இ-ள்) அடியார்வருத்தந்தனை=கடவுளே உன்னுடைய நல்ல அடியார்கள் இன்னொரு அடியார் படும்படியாகிய யெவ்வித வருத்தத்தையும், கண்டு=பார்ப்பார்களாகில், தரியார்=கொஞ்சநேரமாவது சும்மாவிராமல் அவர்படும் வருத்தமாகிறது தான் படும் வருத்தமென யெண்ணி கொஞ்சமாவது தாமதிக்காமல், இன்பமளித்திடுவார் = அப்படிப்பட்ட வருத்தத்தை நீக்கும்படியாகிய உபாயங்களால்நீக்கி அவர்களுக்கு இன்பத்தை கொடுத்திடுவார், வடியார் கருணை=கிருபை நீங்காதிருக்கும்,பெருங்கடலாரென்ற=பெறியகடல்போலாகிய அதாவது எவர் குற்றம் செய்யினும் அதை எண்ணாமல் கிருபைசெய்யும்படியாகிய பெரியகடல்போலொத்த, பெரியோர் வார்த்தையெலாம்=அப்படிப்பட்ட பெரியோர்களின் வாயிலிருந்து புறப்படும் மொழிகளெல்லாம், நெடியார்க்கரியாய் = உன்னின் நெடியவர்க்கு அழகாயிருக்க, அப்படிப்பட்டவர்களில் என்னை சேர்க்காமல்,கொடியேன்=கொடுமைபூண்டவனாகிய, என்னொருவன் றன்னை = என்னொருத்தனை மாத்திரம் நீக்கியதோ = அப்படிப்பட்ட அழகு பொருந்திய அடியார்

Koviloor Digital Library

களின் கூட்டத்தில் சேர்க்காமல் ஏன் நீக்கியதோ, கடியாக்கொடு = இந்தகொடுமை பொருந்திய, மாபாதகன் = பெரிய பாதகம் செய்த பாவியானவன், முன்கண்ட பரிசு = முன்கண்டிருந்த வெகுமதியை, இங்கு கண்டிலேனே = இங்கு நான் காணவில்லையே நான் செய்த குற்றம் யென்னமோ. (எ-று) (க)

பையார்பாம்புகொடிய தெனப்
  பகர்வாரதற்குப்பரிந்துமுன்னுள்
ஐயாகருணையளித்தனையென்ன
  ளவிலின்னுமளித்திலையே
மையாமிடற்றோயானந்த
  மன்றிநடிப்போய்வல்வினையேன்
நையாநின்றேனையோ
  நான்பாம்பிற்கொடியனானேனே.

(இ-ள்) பையார் பாம்பு = விஷத்தைக்கொண்டிராநின்ற பாம்பை, கொடியதெனப் பகர்வார் = ஜனங்கள் கொடியதென்றுசொல்லுவார்கள் அப்படியிருக்க கடவுளே நீயோ, அதற்கும் = அப்படிப்பட்ட பாம்புக்கும், பரிந்து முன்னுள = ஆதிகாலத்தில் அதற்கு மனமிரங்கி, ஐயா கருணை அளித்தனை = யெனைப்படைத்த அய்யனே அப்படிப்பட்ட பாம்பை பிழைக்கும்படியாக கிருபை கொடுத்திட்டாய், யென்னளவிலின்னுமளித்திலையே = உன்னளவில் சாளயப்பட்டு உன்னை எதிர்பார்த்து நிற்காநின்ற எனக்கு இன்னும் கிருபை செய்யவில்லையே, மையாமிடற்றோய் = நடுவாகிய இடத்திலிருக்கும்படியான, ஆனந்தமன்றினடி போய் = இன்பமாகியசபையின் கண் நடிப்பதைபார்ப்பது இல்லாமல்போய், வல்வினையேன் = வலிய வினையுடையவனாகிய நான், நையாநின்றேனையோ = கெஞ்சிக்கொண்டு நின்றேன் அந்தோ இன்னும் கிருபை செய்ய மனம் இரங்கவில்லையோ, நான் பாம்பிற் கொடியனானேனே = மேற்சொல்லியிருக்கும்படியான பாம்பிலும் கொடியவனாயிருக்கின்றேன் (எ-று) (உ)

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 4403
2, 11 (...)

Koviloor Digital Library

பீழைபுரிவான்வருந்துகின்ற
பேய்க்குங்கருணைபெரிதளிப்பான்
ஊழையகற்றும்பெருங்கருணை
யுடையானென்பாருனையையோ
மூழைமனத்தாற்குரங்கெறிந்த
விளங்காயாகிமொத்துண்ணு
மேழைஅடியேன்வருத்தங்
கண்டிருத்தலழகோவெங்கோவே.

(இ-ள்) பீழைபுரிவான்=மனிதர்களுக்கு யெந்நேரமும் துன்பம் செய்து, வருந்துகின்ற=அதனால் வரும் தண்டனைக்கு வருத்தப்படுகின்ற, பேய்க்குங்கருணை=பேயைப்போல் குணமுடையவர்கள் கெஞ்சிக்கேட்டும் காலத்தில்கிருபையை, பெரிதளிப்பான்=மிகுதியாக கொடுக்கும்படியானவன், ஊழையகற்றும் = ஊழ்வினைப்பயன்யென்று சொல்லும்படியாகிய விதியின் கட்டளையும் நீக்கும்படியாகிய, பெருங்கருணையுடையன் = பெரிதாகியகிருபை செய்பவன்யென்று, யென்பாருனையையோ = சொல்லுவார்கள் உன்னையே அந்தோ, மூழைமனத்தாற்=எனக்கு விளங்கத்தெரியா மூடமாகியமனதினால், குரங்கெறிந்த விளங்காயாகி=குரங்கெறியும்படியாகிய இளந்தேங்காயாகி, மொத்துண்ணு=அநேகரிடத்தி லடிபட்டு கொண்டிருக்கும், ஏழையடியேன் வருத்தம் = உன்னடியானாகிய இந்த ஏழைபடும்படியாகிய வருத்தம், கண்டிருத்தலழகோ=யாவற்றையுங்கண்டு சும்மா இரக்காமலிருப்பது உமக்கு அழகோ கிருபை செய்வாய், யெங்கோவே = யென்னுடைய அரசரே. (எ-று) (௫)

மருளுறுகுலகிற்கொலைபுரிகார்
மனமேகரையாக்கல்லென்று
பொருளுடியனின்றிருவாக்கே
புகலவறிந்தேனென்னளவிற்

Koviloor Digital Library

கருணாநிதிநின் திருவுளமுங்
 கல்லென்றுரைக்கவறிந்திலனே
இருணாடியவிற்சிறியேனுக்
 கின்னுமிரங்காதிருந்தாயே.

(இ-ள்) மருணாகுலத்திற் = மருண்டுபோ யிருக்கும்படி யாகிய இந்த வுலகிற், கொலைபுரிவார் மனமே = உயிர்களை கொலை செய்பவர்களுடைய மனந்தான், கரையாக்கல்லென்று =ஒருபோதும்கரையாத கருங்கல்லென்று அதாவது இரக்கமி ல்லாதமனமென்று, சொல்லுவார் கருணாநிதி = கிருபைபொரு ந்திய பொக்கிஷமே, நின்றிருவுளமும்=உன்னுடைய மேலாம் பரமாகிய மனமும், கல்லென்றுரைக்க வறிந்திலனே=கல்லெ ன்று சொல்ல நான் அறியவில்லை, பொருணாடியநின்=உன்னு டைய பொருளென்னும் அருளைநாடிய நான், திருவாக்கே=உன் னுடைய உயர்ந்த நாமத்தையே, புகலவறிந்தேன் =சொல்லுவ தர்க்கு அறிந்திருக்கிறேன் ஆதலால், யென்னளவிற்=யென் பக்கத்தில், இருணாடிய = மங்கலாய்ரானின்ற, விற்சிறியே னுக்கு = இந்த சிறியவனாகிய எனக்கு, இன்னுமிறங்காதிருந் தாயே=இதுவரையிலும் மனம் இறங்கி கிருபைசெய்யாதிருக் கின்றையே. (எ று) (௮)

முன்னுங்கொடுமைபலபுரிந்து
 முடுகிப்பின்னுங்கொடுமைசெய
உன்னுங்கொடியர்தமக்கு
 மருளுதவுங்கருணையுடையானே
மன்னும்பதமேதுணையென்று
 மதித்துவருந்துஞ்சிறியேனுக்
கின்னுங்கருணைபுரிந்திலை
 நானென்னகொடுமைசெய்தேனோ.

(இ-ள்) முன்னுங்கொடுமை=ஓ கடவுளே உன்னருள் பெறுவதற்கு முன்பாகவே கொடுமைகள், பலபுரிந்து=அநேக விடத்திலும் கொடுமைகள் பலமாகவே செய்து, முடுகி=

Koviloor Digital Library

உனக்குகிட்ட அடுத்தும், பின்னுங் கொடுமைசெய = உன்னுடைய அருள் கிடைத்தபின்னிலும் கொடுமைகளை செய்வதற்கு, உன்னுங்கொடியர் தமக்கு = யெண்ணங்கொண்டிருக்கும்படியாகிய தீமையோர்க்குக்கூட, அருளுதவும் கருணையுடையானே — கிருபை செய்து உதவும்படியாகிய அருள்தருபவனாயிருக்க, மன்னும்பதமே துணையென்று = தங்களுடைய பதமே துணை யென்று, மதித்து = தினந்தோறும் எண்ணி வருந்துஞ் சிறியேனுக்கு = வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்படியாகிய இந்த சிறிய அடியானுக்கு, இன்னுங்கருணை புரிந்திலை — இன்னம் கிருபையை செய்யவில்லையே ஐயனே, நானென்ன கொடுமை செய்தேனோ = நான் யாரும் செய்யாதிருக்கும்படியான யென்னகொடுமைதான் செய்தேனோ தெரியவில்லை (எ-று) (௫)

அங்கேயடியர்தமக்கெல்லா
மருளாரமுதமளித்தையோ
இங்கேசிறியனொருவனுக்கு
இடர்தானளிக்கவிசைந்தாயேல்
செங்கேழ்வண்ணத்தனிக்கனியே
சிவமேஅடிமைச்சிறுநாயேன்
எங்கேபுகுவேனென்செய்வே
னெவரென்முகம்பார்த்திடுவாரே.

(இ-ள்) அங்கேயடியர்தமக்கெல்லாம் = இவ்விடம் தவிர மற்றயெல்லா இடங்களிலுமுள்ள உன்னுடைய அடியார்களுக்கெல்லாம், அருளார அமுதமளித்தையோ = அவர்களின் கலி தீரும்படியாகிய உன்னுடைய கிருபையாகிய தெள்ளமுதத்தை அளித்திட்டையோ, இங்கே சிறியனொருவனுக்கு = இவ்விடத்தில் உன்னுடைய சிறிய அடியான் ஒருவனாகிய எனக்கு உன்னுடைய அருளளிக்காமல், இடர்தானளிக்கவிசைந்தாயேல் = துன்பத்தை யெந்நேரமும்அளிக்கிறதற்கு இசைந்துவிட்டாய் அப்படி இன்னம் இடர் அளித்துக் கொண்டிருப்பாயாகில், செங்கேழ்வண்ணத் தனிக்கனியே =

Koviloor Digital Library

செழுமையாகிய சுடர்போன்றிரானின்ற தனியாகிய கனியே, சிவமே = கடவுளே, அடிமைச் சிறுநாயேன் = உன் அடிகளில் சின்னவனுகிய இந்த கடையான் எங்கேபுகுவேன் = உன்னைத் தவிற வேறு யெவ்விடம் அடைக்கலம் புகுவேன், என்செய் வேன் = ஏதுசெய்வேன், எவர் என்முகம் பார்த்திடுவாரே = எவர்கள் என்னைப்பார்த்து ஆதரிப்பார்கள். ஒருவருமில்லை (எ-று) (௬)

அளியேயென்பரன்பே
நல்லமுதேசுத்தவறிவான
வெளியேவெளியிலின்பநடம்
புரியுமரசேவிதியொன்றுந்
தெளியேன்றீங்குபிறர்செயினுந்
தீங்குநினையாதிருவுளந்தா
னெளியேனளவினினைக்க
வொருப்படுமோகருணையெந்தாயே.

(இ-ள்) அளியே யென்பரன்பே = கடவுளே எனக்கு அளிக்கும்படியாகிய பரமாகிய இன்பமே, நல்லமுதே = நல்லதாகிய அமிர்தமே, சுத்தவறிவான = சுத்தமாய்அறிவையுடைய வெளியே = பரவெளியே, வெளியிலின்பநடம்புரியு மரசே = சுத்தமாகிய ஏகாந்தவெளியில் இன்பமாக வீற்றிருக்கானின்ற இராஜனே, விதியொன்றும் = உன்னையறியும்படியான விதிவகைகள்யெதுவும், தெளியேன் = அதில்பழகிதெளிந்து கொள்ளாதவன், தீங்கு பிறர்செய்யினும் = கொடியதை உனக்குவேறு ஒருவர் செய்துவிட்டாலும், தீங்குநினையா திருவுளந்தான் = கடவுளே நீர் தீங்கு நினைக்காதிருக்கும் படியாகிய மேன்மையாகிய அறிவையுடைய நீ, யெளியேனளவில் = தங்களின் பக்கத்திலிருக்கானின்ற இந்த யெளியவனுடைய குற்றத்தை, நினைக்க வொருப்படுமோ = நினைத்து கோபமாயிருக்க இனப்படுமோ படாது ஆதலால், கருணையெந்தாயே = யென்தாயைக் காண அதிகமாகிய பட்சத்தையுடையதாயே இவனிடம் கருணை செய்வாயாக. (எ-று) (எ)

Koviloor Digital Library

நீதுவினைக்கும்பாவிகட்குஞ்செய்தாய்
கருணையெனத்தெளிந்து
வாதுவினைக்குமனக்கடையேன்
மகிழ்வுற்றிருந்தேனென்னளவில்
சூதுநினைப்பாயெனில்யார்க்குச்
சொல்வேன்யாரைத்துணைகொள்வே
னேதுநினைப்பேனையோநான்
பாவியுடம்பேனெடுத்தேனே

(இ-ள்) நீதுவினைக்கும் பாவிகட்கு = எந்நேரமும் கொடுமையே நினைத்து செய்துவருகின்ற பாவிகளுக்கு, செய்தாய் கருணை யெனத் தெளிந்து = அவர்கள் செய்திரானின்றபாவங்களை குற்றமென்றெண்ணாமல் அந்தபாவிகளுக்கு கிருபைசெய்துவருகின்றா யென்று நன்றாய்தெரிந்து, வாதுவினைக்குமனக்கடையேன் = யென்னேரமும் நல்ல அடியார்களுடன் சண்டை, தருக்கம் முதலியவை செய்யவேண்டுமென்று நினைத்தும் செய்துவராநின்ற மனதையுடைய கீழ்மைமானவன், மகிழ்வுற்றிருந்தேன் = நாம் செய்தபாவங்களையும் மேல் கண்டிராநின்றதியகுணத்தார்க்கு பொருத்ததுபோல் எனக்கும்பாவங்களை பொறுப்பாயென்று மனஞ் சந்தோஷமாகயிருந்தேன், யென்னளவில் = ஆனால் யென்னளவில் மேல் கண்ட கிருபை செய்வதை நீக்கிவிட்டு, சூதுநினைப்பாயெனில் = வஞ்சகத்தை மனதில் கொண்டிருந்தாயாகில், யார்க்குச்சொல்வேன் = நீ இப்படிசெய்தாயென்றுயாரிடம்சொல்வேன், யாரைத்துணைகொள்வேன் = உன்னைவிட்டு வேறு எவரை எனக்குத் துணையாகச் சேர்த்துக்கொள்வேன், யேது நினைப்பேனையோ = யென்னதான் நான் என் விஷயத்திலுண்டாகிய யெண்ணத்தைப் பற்றி நினைப்பேன் ஐயோ, பாவி = இந்தபாவியாகிய நான் உடம்பேனெடுத்தேனே = இந்த சடலத்தை யென்னமாக யெடுத்தேன். (எ - று) (அ)

Koviloor Digital Library

பொதுவென்றறிந்துமிரங்காத
சிலர்க்குங்கருணைபுரிவதன்றிக்
கதுவென்றழுங்கவினையாவின்
கருணையுளர்ந்தானறிவென்ப
திதுவென்றறியாவெனைவருத்த
வெந்தவகையாற்றுணிந்ததுவோ
எதுவென்றறிவேனென்
புரிவேனையோபுழுவிலிழிந்தேனே

(இ - ள்) பொதுவென்றறிந்தும்=இது பொதுவாகிய வஸ்துவென்று நன்ருக அறிந்திருந்தும் அதைக் காப்பாற்ருது வீண்வழியில் சிலவு செய்யும்படியாகிய, இரங்காத சிலர்க்கும்=மனம் கல்லாகிய இரக்கமில்லா நெஞ்சையுடையவர்க்கும், கருணைபுரிவதன்றி=அப்படிபட்டவர்களுக்கும் நீ கிருபைசெய்கிறதேஒழியவருத்தப்படுத்துவதுகிடையாது,அப்படியிருக்க, கதுவென்றழுக வினையா=கோபம் ஆனது அச்சமுடையது யென்று வினையாதநான், நின்கருணை=உன்னுடைய பட்சம், உளந்தானறிவென்ப=உம்முடைய உள்ளத்திலுவறுவதுதான், இது வென்றறியாவெனை=பட்சம் வரும்படியான செயல் இதுதான் யென்ற அறியாத யென்னை, வருத்த= நான் இன்னம் கருணைவறவில்லையேஎன்று மனநோகச்செய்ய, யெந்தவகையாற்றுணிந்ததுவோ=நான் செய்த யெந்த பாபத்தால் யென்னை பாராது கிருபைசெய்யாமலிருக்க துணியச்செய்ததோ, எதுவென்றறிவேன்=அது எந்த வகையானபாபம் யென்று அறிவேன், யென்புரிவேன்=யென்ன செய்வேன், ஐயோ புழுவிலிழிந்தேனே = ஐயோ புழுவிற்கும் இழந்தவனுனேனே. (எ - று.) (க)

வெடிக்கப்பார்த்துநிற்கின்றவெய்யர்
தமையும்வினைத்துயர்கள்
பிடிக்கப்பார்க்கத்துணியாத
பெருமானினதுதிருவுளந்தான்

Koviloor Digital Library

நடிக்கப்பார்க்குமுலகத்தே சிறியேன்
மனது நவையாலே
துடிக்கப்பார்த் திங்கிருந்ததுகாண் ஐயயோ
விதற்குத் துணிந்ததுவோ.

(இ-ள்) வெடிக்கப்பார்த்து நிற்கின்ற=நான்குபேர் பார்த்து நகைக்கும்படியாக பாவங்களைச் செய்து அல்லது குற்றங்களைச்செய்து நிற்கும்படியாகிய. வெய்யர் தமையும்=கொடியவர்களையும்கூட, வினைத்துயர்கள்=அவர்கள் செய்த தீவினைக்குத் தக்கவாறு வருத்தமாகிய விசாரங்கள், பிடிக்கப்பார்க்கத்துணியாத =பட்டு தொந்தரை செய்வதைபார்க்க மனம் துணியாத கிருபை பொருந்திய, பெருமா=பெரியகடவுளே, நினது திருஉளந்தான்=உன்னுடைய எண்ணமானது, நடிக்கப்பார்க்குமுலகத்தே = ஜனங்கள் செய்து வரும்படியாகிய நன்மை தீமை முதலியவைகளை பார்க்க இருந்த உலகத்தின் மேல், சிறியேன் மனது நவையால்=உன்னுடைய அடியானாகிய இந்த சின்ன அடியானாகிய நான் என் மனதின் வருத்தத்தால், துடிக்கப்பார்த்திங்கிருந்ததுகாண் = நான் துடித்து கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டிருக்க நான் இங்கிருந்துக்கொண்டிருப்பது பார்க்கக்கூடாமல், ஐயோ விதற்குத் துணிந்ததுவோ=ஐயோ கடவுளே நான் பட்டிருக்கும் வருந்தமாகிய இதர்க்கு பாராதிருக்க துணிந்தது யென்னமோ (எ - று.) (ங)

கல்லுங்கனியத்திருநோக்கம்
புரியுக்கருணைக்கடலேநான்,
அல்லும்பகலுந்திருகுறிப்பை
யெதிர்பார்த்திங்கேயயர்கின்றேன்,
கொல்லுங்கொடியார்க்குதவுகின்ற
குறும்புத்தேவர்மனம்போலச்,
சொல்லுமிரக்காவன்மைகற்க
வெக்கேயையோ துணிந்தாயோ.

Koviloor Digital Library

(இ-ள்) கல்லுங்கனியத் திருநோக்கம் புரியும் = கடவுளே உன்னுடைய அருளானது, கல்லும் இளகிப்போகும் படியாகிய உன் திருநோக்கமாகிய பார்வை தரும்படியாகிய, கருணைக்கடலே நான் = கிருபை பொங்கியிருக்கும் அலையுடைய சமுத்திறமே நான், அல்லும் பகலும் = இரவிலும் பகலிலும் எந்த நேரத்திலும், உம் திருக்குறிப்பை = உம்முடைய மேன்மையாகிய அருள் இரங்கும்படியான அடையாளத்தை யெதிர்பார்த்து இங்கே = எப்போது வருமோ யெவ்வழியுறுமோ வென்று நிமிஷந்தோறும் யெதிர்பார்த்து இவ்விடத்திலேயே யான், அயர்கின்றேன் = சோர்வுற்று நின்றிருக்கிறேன், கொல்லுங் கொடியார்க்கு = உயிர்பிராணிகளை கொலை செய்யாநின்ற கொடியபாதகர்க்கு, உதவுகின்ற = உதவி செய்யும்படியாகிய குறும்புத்தேவர்மனம்போல் = அவர்கள் செய்த கெட்டகுணத்தை நீக்கி அவரின் மனம்போல, சொல்லும் = அவர்களுக்கு பிறதியாகதராநின்ற கடவுளே, எனக்கு, இரங்காவன்மை = மனம்இரங்காமலிருக்கும்படியாகிய வல்லவன்மையை, கற்க = கற்றுக்கொள்ள, யெங்கேயையோ துணிந்தாயே = யெவ்விடத்தில் ஐயோ துணிந்தீர்கள். (எ-று) (௰௧)

படிமேலாசைபலவைத்துப்
 பணியுமவர்க்கும்பரிந்தசுகங்,
கொடிமேலுறச்செய்தருள்கின்றாய்
 யென்பாலிரக்கங்கொண்டிலையே,
பொடிமேலணிகின்னருட்சிது
தானழகோபொதுவினடிக்குமன்ற
 னடிமேலாசையல்லால்
வேறாசையையோவறியேனே.

(இ-ள்) படிமேலாசை = கடவுளே நீதரும்படியாகிய உன்னுடைமோட்ச வீட்டையடையும்படியான பதவிமேல்ஆசை, பலவைத்து = அநேகமாக எண்ணங்கொண்டு, பணியுமவர்க்கும் = உன்னை தொழுபவர்க்கும், பரிந்தசுகம் = கிருபையால் தயைபுரிந்து சுகமாகிய, கொடிமேலுற = செடியின் கொடியா

கோவிலூர்-630307

Koviloor Digital Library

னாது மேலோங்கிவளர, செய்தருள் கின்றாய்=செய்து கிருபைதருகின்றாய், யென்பாலிரக்கங்கொண்டிலையே=யென்மேல்கொஞ்சமாவது இரக்கங்கொள்ள வில்லையே, பொடிமேலணி=வெண்ணீறை மேலணிந்துக் கொண்டிருக்கும் படியாகிய, கடவுளே, நின்னருட்கிது தானழகோ=நீ செய்யும் படியான கிருபைக்கு அழகு இதுதானோ, பொதுவினடிக்கு முன்றன்=பொதுவிருந்து நடத்துகின்ற உன்னுடைய, அடிமேலாசையல்லாமல்=உம்முடைய பதத்தைப்பெற ஆசையே அல்லாது, வேறாசையையோ வறியேனே = வேறேஎந்த ஒரு ஆசையும் நான்கருதவில்லை நான் அறியவுமாட்டேன் (எ று.) (௰௨)

நாயேனுலகிலறிவுவந்தநாள்
தொட்டிந்தநாள்வரையு
மேயேன்பிறிதிலுன்குறிப்பே
யெதிர்பார்திருந்தேனென்னுடைய
தாயேபொதுவினடம்புரியெந்தாயே
தயவுதாராயேல்
மாயேனையோவெதுகொண்டு
வாழ்ந்திங்கிருக்கத்துணிவேனே

(இ-ள்) நாயேனுலகில் = நாயினுங் கடையானவனாகிய இந்த உன்னுடைய அடியான் இவ்வுலகில், அறிவு வந்த நாள் தொட்டு=எனக்கு வயது ஏறி அறிவும் வந்த நாள் முதலாய், இந்த நாள் வரையும்—இன்றையதினம் வரையிலும், மேயேன் பிறிதிலுன் =உன்னைத்தவிரவேறொரு நாட்டம்வைத்தவனல்ல நான் உன்னுடைய, குறிப்பேயெதிர் பார்த்திருந்தேன்=அருள் வரும் அடையாளம் எப்போது வரும் யென்றே பார்த்துக் கொண்டு இருந்தேன், என்னுடைய தாயே=பெற்று வளர்த்து வந்ததாயிலும் கிருபை மிகுந்த தாயே, பொதுவிநடம் புரியுமெந்தாயே = பொதுவில் கிருபைசெய்து நடத்திரானின்ற யென்னுடைய கடவுளே, தயவு தாராயேல்=நீகிருபைசெய்து என்னை ஆதரிக் காவிடில்,மாயேனையோ=மாய்ந்து போகமாட்

Koviloor Digital Library

டேன் ஐயோ, யெதுகொண்டு = உன்னைத்தவிற வேறு யெந்த ஆதரவுகொண்டு, வாழ்ந்திங்கிருக்கத் துணிவேனே = இங்கு வாழ்ந்திருக்கத் துணியமாட்டேன் (.எ-று.) (கங)

நயத்தாலுனது திருவருளை
நண்ணாக்கொடியேனுயுடம்பை
உயத்தான்வையேன்மடித்திடுவேன்
மடித்தார்பின்னருலகத்தே
வயத்தாலெந்தஉடம்புருமோ
வென்னவருமோவென்கின்ற
பயத்தாலேயோவிவ்வுடம்பைச்
சுமக்கின்றேனெம்பரஞ்சுடரே.

(இ-ள்) நயத்தாலுனது = இதமாகிய அன்பினால் கடவுளே உன்னுடைய, திருவருளை = மேலாம் பறமாகிய அருள் யென்னும் கிருபாநோக்கத்தை, நண்ணாக்கொடியேன் = பெற்றுக்கொள்ளாத தியேன், நாயுடம்பை = இந்த நாயினுங்கடைகெட்ட நாயுடம்பை, உயத்தான்வையேன் = உயிரோடு வாழ்ந்திருக்கும் படியாக வைக்கமாட்டேன். மடித்திடுவேன் — இந்த சடலத்தை மாய்க்கும்படியானவைகளைச் செய்து மடித்துக்கொள்வேன், மடித்தால் = அப்படி இந்த சடலத்தை மடித்துக்கொள்வேனேயானால், பின்னர் உலகத்தே = நடுதீர்ப்பு நாளாகிய இவ்வுலகத்தில், வாய்த்தாலெந்த வுடம்புறுமோ = நான் செய்த மடியும் படியான தீவினையை அநுபவிக்க எந்த சடலம் உண்டாகுமோ, யென்னவருமோ = அப்படிப்பட்ட சடலத்தால் யென்னென்ன வருத்தங்கள் படவேண்டிவருமோ, யென்கின்றபயத்தாலேயோ = அப்படிப்பட்ட பயத்தினாலேயே ஐயோ, யிவ்வுடம்பை சுமக்கின்றேன் = இந்த சரீரத்தை சுமந்து கொண்டு திரிகின்றேன், எம்பரஞ்சுடரே = என்னுடைய ஆசையின் காரணாதீதமான வெளியாகிய ஒளியே. (எ-று) (கச)

Koviloor Digital Library

இனயமடுத் துன்னடிய
　ரெலாமிழியாதேறியிருக்கின்றார்
வன்பரிடத்தேபலகாற்
　சென்றவரோடுறவுவழங்கியுன்றன்
அன்பருறவைவிடுத்
　துலகிலாடிப்பாடியடுத்தவினைத்
துன்பமுடுகிச்சுடச்சுடவுஞ்
　சோறுண்டிருக்கத்துணிந்தேனே.

(இ-ள்) இன்ப மடுத்துன்னடியரெலாம் = கடவுளே உன்னுடைய இன்பத்தைப் பெறுவதற்காக வேண்டி உன்னுடைய அடியார்களெல்லாம், யிழியாது = கொஞ்சமாவது இழிவுண்டாகாமல் நலவாய் உன்னருளைப் பெற்று, தேறியிருக்கின்றார் = தீர்க்கமாய் பெற்று இருக்கின்றார்கள், உன்றன் அன்பருறவை விடுத்து = அப்படிப்பட்ட உன்னுடைய அன்பர்களின் சம்பந்தமாகிய சிநேகத்தை விட்டு விட்டு, உலகில் = இந்த நிலத்தில், வன்பரிடத்தே பலகால் சென்று = வம்பர்களாகிய கொடும்பாவிகளிடத்தில் பலநேரமும் போய், அவரோடுறவு வழங்கி = அந்த வம்பர்களினுடன் சிநேகம்செய்து, ஆடிப் பாடி அடுத்தவினை = = அவர்களோடும்கூடி ஆடி பாடி சந்தோஷமாய்ச் சேர்ந்திருந்த தீவினையானது, துன்பமுடுகி = உன்னருளைப் பெறாத துன்பமானது என்னிடம் அணுகியிருக்கவும் அதை நினையாது, சுடச் சுடவும் = மனமானது வருந்தி வருந்தி சூடு கொண்டிருக்கவும், சோறுண்டிருக்கவும் துணிந்தேனே = சாப்பாடு தின்று களித்துக்கொண்டிருக்க துணிந்துவிட்டேனே. (எ - று) (௧௫)

எந்நாள்கருணைத்தனிமுதனீ
　யென்பாலிரங்கியருளுதலோ
அந்நாளிந்நாளிந்நாளென்
　றெண்ணியெண்ணியலமந்தேன்

Koviloor Digital Library

சென்னாள்களிலோர்நன்னாளுந்
திருநாளானதில்லையையோ
முன்னாளென்னையாட்கொண்டா
யென்னநாணமுடுகுவதே.

(இ - ள்) எந்நாள் கருணை = கடவுளே எந்தநாள் உன்னுடைய கிருபை, தனிமுதனி = ஆதியாய் தனியோனாகிய நீ, யென்பாலிறங்கியருளுதலோ = என்பேரில் பட்சம்வைத்து கிருபை செய்வது எந்தநாளோ, அந்நாள் = அந்த நாளில்வருமென்றும், இந்நாள் = இந்தநாளில் வருமென்றும், இந்நாள் என்று = இன்றுவரும் இன்றுவரும் யென்று, யெண்ணி யெண்ணி = நினைத்து நினைத்து இயலமர்ந்தேன் = கைசேதமானேன், கடவுளே, சென்னாட்களிலோர் = சென்றநாட்களில் ஒரு, நன்னாளும் = நல்லதாகிய நாளாகிலும் நீ அருள் செய்வதற்கு திருநாளான தில்லையையோ = உகந்தநாள்ஆகவில்லையா ஐயோ, முன்னாளென்னை = முன்னாட்களில் யென்னை சென்ற நாட்களெல்லாம் யென்னை, யாட்கொண்டாய் = ஆளாக கொண்டாய், யென்ன = இல்லையோ என்னயோவென்று, நாண முடுகுவதே = வெட்கம் எனக்கு கிட்டவந்து விட்டது. (எ - று) (கச)

எந்தவகைசெய்திடிற்கருணையெந்தாய்
நீதானிரங்குவையோ
அந்தவகையைநானறியே
னறிவிப்பாருமெனக்கில்லை
இந்தவகையிக்கையோநானிருந்தாற்
பின்னரென்செய்வேன்
பந்தவகையற்றவருளத்தேடிநடிக்கு
முண்மைப்பரம்பொருளே.

(இ-ள்) யெந்தவகைசெய்திடில் = யெவ்விதமாக வணக்கம் உனக்கு செய்தேனேயானால், யெந்தாய் = என்னுடைய கடவுளே, கருணை நீதானிரங்குவையோ = என்மேல் கருணை

Koviloor Digital Library

தர நீ இரக்கம் செய்வையோ, அந்தவகையை=அப்படிப்பட்ட வணக்கத்தை, நான் அறியேன்=அது இன்னதென நான் அறியமாட்டேன், அறிவிப்பாருமெனக்கில்லை=அது இந்த வணக்கந்தான் யென்று தெரிவிப்பவர்களும் என்க்கு ஒருவருமில்லை, இந்தவகை யிங்கையோ = இம்மாதிரியாகவே இவ்விடத்திலே ஐயோ, நானிருந்தால்=நான் இருப்பேனேயானால், பின்னர் யென்செய்வேன் = பின்பு நான் யென்னவணக்கஞ் செய்யட்டும், ஆதலால் யெனக்கு தெரிவிக்குக, பந்தவகையற்றவர்=சமுசாறசாகரம் கட்டுப்பாடு இல்லாதவர்களுடைய, உளத்தேடி நடிக்கும்=அவர்களுடைய மனம் தேடி அதில் ஒளிவாயிருக்கும், உண்மை பறம்பொருளே = உண்மையாகிய பறமார்த்தமாகிய வஸ்துவே.(எ-று) (மஎ)

அடுக்குந்தொண்டர்தமக்கெல்லா
  மருளிந்திங்கேயென்னளவிற்
கொடுக்குந்தன்மைதனையொளித்தா
  லொளிக்கப்படுமோகுணக்குன்றே
தடுக்குந்தடையும்வேறில்லை
  தமியேன்றனையித்தாழ்வகற்றி
யெடுக்குந்துணையும்பிறிதில்லை
  யையோவின்னுமிரங்கிலையே.

(இ-ள்) அடுக்கும் தொண்டர் தமக்கெல்லாம்=உன்னை நத்தி அடுத்திருக்கும்படியான தொண்டுசெய்யுபவர்க்கெல்லாம், மருளிந்து=கிருபையை தந்து விட்டாய், இங்கே யென்னளவில் = இங்கே காத்திருக்கும்படியான அடியானாகிய யெனக்கு அல்லது யென்பக்கத்தில், கொடுக்கும் தன்மைதனை =நீ கொடுக்குப்போகிற உம்முடைய சுபாவத்தை, ஒளித்தால் =நீ மறைத்தால், ஒளிக்கப்படுமோ=அந்த அருள் மறைக்கப்படுமோ=படாது, குணக்குன்றே=நன்மையாகிய குணங்களையுடையமலையே, தடுக்கும் தடையும் வேறில்லை, எனக்கு நீ அருள் தருவதை கொடுக்கவேண்டாமென்று தடுப்பவர் யாரா

Koviloor Digital Library

கிலும் இருக்கிறார்களா ஒருவரும் இல்லை, தமியேன்றன்னை = உன்னை நம்பின அடியேனை, இத்தாழ்வகற்றி = உன் அருள் பெற்றவர்களுக்கெல்லாம் கீழா இருக்கும் இவனின் குறைவை நீக்கி, யெடுக்குந் துணையும் பிறிதில்லை = என்னை கைகொடுத்து எடுத்து ஆதரிக்கும்படியாகிய துணையும் வேறில்லை, ஐயோ வின்னுமிரங்கிலையோ = ஐயோ நானென்ன செய்வேன் இன்னம் மனமிரங்கவில்லையோ. (எ-று) (கஅ)

எல்லாமுடையாய்நின்செயலே
யெல்லாமென்றாலென்செயல்க
ளெல்லாநினதுசெயலன்றோ
வென்னேயென்னைப்புறந்தள்ளல்
வல்லாயென்னைப்புறம்
விடுத்தாற்புறத்துமுன்றன்மயமன்றே
நல்லாரெங்குஞ்சிவமயமென்
றுரைப்பாரெங்களையகனே.

(இ-ள்) யெல்லாம் உடையாய் = கடவுளே எவ்வகையாகிய யெல்லா வஸ்துக்களும் யெல்லாசெயல்களும் உடையவனாகியவனே, நின் செயலே யெல்லாமென்றால் = யெப்படிப்பட்ட யெல்லாசெயல்களும் உன்னுடையதா யிருந்தால், என் செயல்களெல்லாம் = நான் செய்யப்பட்ட யெப்படிப்பட்ட செயல்களும், நினது செயலன்றோ = உன்னுடைய செயலல்லவா, வென்னே = யென்னை ஆட்கொண்டவனே, யென்னைப் புறந்தள்ளல் = யென்னைபார்த்து கருணை செய்யாமல் ஒதுக்கி விடாதே, வல்லா யென்னைப்புறம் விடுத்தால் = வல்லமையுடையக் கடவுளே யென்னை புறம் தள்ளிவிட்டால், புறத்துமுன்றன் மயமன்றே = அந்த வெளியாகிய புறத்திலும் உன்னுடைய வியாபித்தலல்லவோ, நல்லாரெங்கும் = நல்லவர்களாகிய உம்முடைய அடியார்கள் எவ்விடமும், சிவமயம் யென்று = ஆண்டவனுடைய தன்மையென்று, உரைப்பார் = சொல்வார்கள் ஆதலால் நானும் அந்த புறம்பேயும் உன்னு

Koviloor Digital Library

டைய தன்மைக்குள்ளாகவே இருக்கின்றேன், யெங்களுய கனே.=யென்னுடைய தலைமை தனம் வகித்த நாயகனே. (எ - று.) (கக)

கூடுங்கருணைத்திருக்குறிப்பை
யிற்றைப்பொழுதேகுறிப்பித்து
வாடுஞ்சிறியேன்வாட்டமெல்லாந்
தீர்த்துவாழ்த்திவிடவேண்டும்
பாடும்புகழோய் நினையல்லால்
துணைவேறில்லைபரவெளியி
லாடுஞ்செல்வத்திருவடிமே
லாணைமுக்காலாணையதே.

(இ-ள்) கூடுங்கருணைத் திருகுறிப்பை=கடவுளே எனக்கு கைகூடும்படியாகிய உன்னுடைய கிருபை பொருந்திய அருளின் உயர்ந்த அடையாளத்தை; இற்றைப் பொழுதே குறிப்பித்து=இந்த நேரத்தையே குறிப்பாக்கி, வாடும் சிறியேன்=மனவாட்ட மடைந்திருக்கும் சிறியேனாகிய எனக்கு கொடுத்து, வாட்டமெல்லாந் தீர்த்து=மனவாட்டத்தை நீக்கி, வாழ்த்திவிடவேண்டும்=ஆசீர்வாதம் செய்துவிடவேண்டும், அன்றும் இன்றும் என்றும், பாடும் புகழோய்=ஜனங்கள்புகழ்ந்துபாடும்படியானகடவுளே, நினையல்லால்=உன்னைத்தவிற, துணைவேறில்லை=எனக்கு உற்றதுணை வேறுகிடையாது, பரவெளியிலாடுஞ்=பறமாகிய வெளியிலாடுகின்ற, செல்வத்திருவடிமேல்=செல்வமாகிய அழகுபொருந்திய அடிகளின்மேல், ஆணை முக்காலாணையதே,=சத்தியம் மூன்றுதறம் சத்தியமே யென்பதாம். (எ - று) (உ0)

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது அடியார்பேறு முற்றியது.

பாடல் விருத்தம் உரை உ0. ஆகவிருத்தம் கூ0.

Koviloor Digital Library

ஆறுவது
ஆத்தும விசாரத்தழுங்கல்
எழுசீரடி யாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்

போகமேவிழைந்தேன்புலைமனச்சிறியேன்
பூப்பினும்புணர்ந்தவெம்பொறியேன்
ஏகமேபொருளென்றறிந்திலேன்
பொருளினிச்சையாலெருதுநோவரியாக்
காகமேயெனப்போய்ப்பிறர்தமைவருத்திக்
களித்தப்பாதகத்தொழிற்கடையேன்
மோகமேயுடையேனென்னினுமெந்தாய்
முனிந்திடேல்காத்தருளெனையே.

(இ ள்) போகமே விழைந்தேன்=யெந்நேரமும் மோகத்தையே விரும்பினேன், புலைமனச் சிறியேன் = சண்டாள மனதையுடைய சின்னவன், பூப்பினும்=மகளிர்களின் சூதக காலத்திலும், புணர்ந்த வெம்பொறியேன் = சையோகஞ் செய்த உன்னுடைய கோபத்திற்கு நேரானவன். இன்னும் நான், ஏகமே பொருளென்றறிந்திலேன் = ஒன்றிலும்சேராமல் தனியாய் இருப்பதுதான் பொருள் யென்று அறியாமலிருக்கிறவன், பொருளினிச்சையாய்= பணத்தினுடைய ஆசையினால், யெருதுநோவறியா=எருதின் வருத்தமறியாத, காகமேயெனப் போய்=காக்கைமாதிரியாக போய், பிறர்தமை வருத்தி=மற்றோர்களைபடாத பாடுபடுத்தி பணங்களை சம்பாதித்து, களித்த=சந்தோஷமான நான். பாதகத்தொழிற்கடையேன்=பாதகம் செய்பவர்களிலும் கடையேனானவன், மோகமே யுடையேனென்னினும்=நான் அதிகமாகிய மோகங்கொண்டவனாயிருந்தாலும், எந்தாய் முனிந்திடேல்=எனது தந்தையே என்மேல் கோபஞ்செய்யாமல், காத்தருளெனையே = காத்தருள்வாய் யெனது ஐயனே (எ-று) (க)

Koviloor Digital Library

பூப்பினும்பலகால்மடந்தையர் தமைப்போய்
புணர்ந்தவெம்புலையனேன்விடஞ்சார்
பாம்பினுங்கொடியருறவையேவிழைந்த
பள்ளனேன்கள்ளனேனெருக்கும்
ஆப்பினும்வலியேனறத்தொழில்புரியே
னன்பினாலடுத்தவர்கரங்கள்
கூப்பினுங்கூப்பாக்கொடுங்கையேனெனினுங்
கோபியேல்காத்தருளெனையே.

(இ-ள்) பூப்பினும்பலகால் மடந்தையர்தமை = அதிக காலமாக ருதுகமாயிருக்கின்ற பெண்களையடுத்து, போய்புணர்ந்தபோய் அவர்களோடு சையோகஞ்செய்த, வெம்புலையனேன் கொடுமைபொருந்திய சண்டாளனானவன், விடஞ்சார் = விஷங்களை சேர்த்துக்கொண்டிராநின்ற, பாம்பினும் கொடியர் = பாம்பினுங் கொடுமையுடையவராநின்ற. உறவையே விழைந்த = அவர்களுடைய இஷ்டத்தை விரும்பிய, பள்ளனேன் = ஒர் வகையான மனிதனானவன், கள்ளனேன் = திருடனானவன், நெருக்கும் ஆப்பினும்வலியேன் = மரக்கணி நெருக்கை நீக்கும் படியான ஆப்பை அடிக்க அடிக்க ஆப்பு அசைந்து உடையாத போல வலிமை யுடையவன், அறத்தொழில் புரியேன் = தருமத்தொழில் ஒருபோதும் செய்யாதவன் அன்பினாலடுத்தவர் = உன்மேலுள்ள அன்பினால் உன்னை அடுத்தவர்களுடைய, கரங்கள் கூப்பினும் = தங்களுடைய இரண்டுகைகளையுஞ் சேர்த்து உனக்கு தெண்டம் செய்தாலும், கூப்பாக்கொடுங்கையேன் = என் கைகளைச் சேர்க்காத கெட்டகையையுடையவன் கடவுளே, எனினும் = இத்தகைய குணங்களையுடையவனாயிருந்தபோதிலும், கோபியேல் = என் குற்றங்களை குற்றமாகப் பாவித்து கோபிக்காமல்படிக்கு அருளைத்தந்து, காத்தருளெனையே = காப்பாற்றி கிருபைசெய்குவாய் யென்னையே. எ - று. (உ)

Koviloor Digital Library

விழுத்தலைநெறியைவிரும்பிலேன்
கரும்பின் மிகவினிக்கின்ற நின்புகழ்கள்
வழுத்தலையறியேன் மக்களே மனையே
வாழ்க்கையேதுணை யெனமதித்துக்
கொழுத்தலை மனத்துபுழுத்தலைப்புலையேன்
கொக்கனேன் செக்கினைப்பலகா
லிழுத்தலையெருதேனுழத்தலே யுடையே
னென்னினுங்காத் தருளெனையே.

(இ-ள்.) விழுத்தலை-என்பாவங்கள் அற்றுவிழும்படியாகிய,நெறியை, விரும்பிலேன்-வழிமுறைகளை விருப்பவில்லை, (இன்னும் நான்) கரும்பின் மிகவினிக்கின்ற-(ஏற்றப்போற்ற) கரும்பைவிட அதிகமாக ருசியைத்தருகின்ற, நின்புகழ்கள்-உன்னுடைய பெருமைகள் இன்னதென்று, வழுத்தலையறியேன்-சொல்லும்படியானவைகளை நான் அறியவில்லை, (அப்படி அதை அறியாமல்) மக்களே-என்னுடைய பிள்ளைகளும்,மனையே-என்னுடைய வீடு, பெண்சாதியும், வாழ்க்கையே இவர்களுக்குச் சம்பாதித்துப்போட்டு ரக்ஷணைசெய்யும்படியானவைகளே, துணையெனமதித்து-எனக்கு உற்றதுணை இவர்கள் தான் என்று நம்பி, கொழுத்தலைமனத்து-கொழுத்து அலைகின்ற மனதை யுடையவனாகிய, புழுத்தலைப்புலையேன்-புழுத்து அலைகின்ற சண்டாளனா யிருக்கின்றேன், (இன்னும்) கொக்கனேன்-செந்நாய்போன்ற குணத்தையுடையவன், (இன்னும்) செக்கினைப் பலகாலிழுத்து-வாணியர்களின் எண்ணெய் ஆட்டும் செக்கில் கட்டுண்டு பலமுறை சுற்றி இழுத்து, அலையெருதேன்-அலையும்படியாகிய எருதுக்குச் சமானமா யிராநின்ற என்னுடைய, உழத்தலேயுடையனென்னும்-இப்படிபட்ட பலமாதிரியான உழைப்புக்களில் இருக்கிற வனாயிருந்தாலும், காத்தருளென்னையே-இந்த அடியேனை காத்து அருள்செய்வாய்- (எ-று.) (கூ)

Koviloor Digital Library

புலைவிலைக்கடையிற்றலை குனிந்தலைந்து
பொறுக்கிய சுணங்கனேன் புரத்தில்
தலைவிலைப்பிடித்துக்கடைவிலைபடித்த
நயவிலாச் சழக்கனேன் சழக்கர்
உலைவிலையெனவே வியக்கவெந்தொழிலி
னுழன்றுழன்றழன்ற தோருளத்தேன்
இலைவிலையெனக்கென்றகங்கரித்திருந்தே
னென்னினுங்காத்தருளெனையே.

(இ-ள்.) புலைவிலைக்கடையில்-யாமிசம் விற்கும்படியாகிய கடையில், தலைகுனிந்தலைந்து-தலைகுனிந்து திரிந்தக்கொண்டு அவ்விடம் சிதறுண்டு எறிபட்டுகிடக்கும் எலும்பை, பொறுக்கிய சுணங்கனேன்-பொறுக்கித் தின்று ஜீவித்திருக்கும்படியாகியநாய்க்குச் சமானமானவன், புரத்தில்-ஊர்க்களில், தலைவிலை பிடித்து-முதலிற் கூறும் சகாயவிலையிற் பிடித்துக்கொண்டு, கடைவிலைபடித்த-அதிகமான விலையைச் சொல்லும்படியாகப் படித்திருக்கும், நயவிலாச் சழக்கனேன்-கொஞ்சமாகிலும் நயவுஇல்லாத மூடர்களைப்போலொத்தவன், (இன்னும்) சழக்கர்-மூடர்களைப்போல், உலைவிலையெனவே-பயம் இல்லையென்று சொல்லும்படியாகவே, வியக்கவெந்தொழிலில்-அப்படிப்பட்ட சழக்கர்களும்வியக்கும்படியாகியகொடுமையாகியதொழிலில், உழன்று உழன்றுழன்ற-செய்து உழன்றுழன்று அதிலேயேஇருக்கும்படியாகிய, தோருளத்தேன்-ஒருமனதுடையவன் இலைவிலையெனக்கு-இந்த சழக்கில் எனக்குயாரும்நிகர் இல்லையென்று, அகங்கரித்திருந்தேன்-மதம்பிடித்தவனாயிருந்தேன், என்னினும்-அப்படி இருந்தவனாயிருந்தாலும், காத்தருளெனையே-இக்கடையேனாகிய என்னைக்காத்து அருள்செய்வாயாக. (எ-று) (௪)

கோட்டிலையடையாப்பட்டிமாடனையேன்
கொட்டைகள் பரப்பிமேல்வனைந்த

Koviloor Digital Library

கட்டிலைவிரும்பியடிக்கடிபடுத்த
கடையனேன்கங்குலம்பகலும்
அட்டிலையடுத்த பூனையேனுணவை
யறவுண்டு குப்பைமேற்போட்ட
ஒட்டிலையனையேனென்னினும்வேறு
நினைந்திடேல் காத்தருளெனையே.

(இ-ள்) கொட்டிலையடையாப் பட்டி மாடனையேன்-மாட்டின் தொழுவத்திற்குள் கட்டுப்படியாக உள்ளே புகாத பட்டிமாடுபோலானவன், கொட்டைகள் பரப்பிமேல் வனைந்த-பஞ்சு மெத்தையும் பஞ்சினாலாய் தலையணையும் பரப்பி மேல் மூடியிருக்கும்படியாகிய, கட்டிலை விரும்பி-சப்பிரமஞ்சத்தை ஆசைவைத்து, அடிக்கடி படுத்த-எக்காலமும் படுத்துக்கொண்டிருக்கும் படியாகிய, கடையனேன்-கீழ்மையானவன், கங்குலும் பகலும்-இரவும் பகலுமாய், அட்டிலையடுத்த-தின்பண்டங்கள் வைத்திருக்கும்படியாகிய அடுக்களையிடம் சேர்ந்த, பூனையேன்-பூனைபோலொத்தவன், பூனை தின்பது போல் யாவற்றையும் தின்னும்படியானவன், உணவையறவுண்டு-இலையின்மேல் வைத்திருக்கும்படியாகிய சாப்பாட்டையெல்லாம் தின்றபின்பு, குப்பைமேல் போட்ட-நாய் நக்கும்படியாக எடுத்து எருவின்மேல் போடும்படியான, ஒட்டிலையனையேன்-எச்சிலைக்கு ஒப்பானவன், என்னினும்-இத்தகைய குணங்களை உடையவனாயிருந்தாலும், வேறு நினைத்திடேல்-வேறு ஒன்றும் நினைக்காமல்படிக்கு, காத்தருளெனையே-அடியேனைக் காப்பாற்றி அருள் செய்யவேண்டும். (எ-று.)

சேரிழையவர் தம்புணர்முலைநெருக்கில்
நெருக்கியமனத்தினேன்வீணிற்
போரிழை வெறியர்புகழ்பெற வெறியேன்
புனைகலையிலார்க்கொருகலையி
லோரிழை யெனினுங்கொடுத்திலேனீள
வுடுத்துடுத்தூர் தொறுந்திரிந்தே

Koviloor Digital Library

நேரிழைவிழைந்து பூண்டுளங்களித்தே
னென்னினுங்காத்தருளெனையே.

(இ-ள்) நேரிழையவர்தம்-மெல்லிய ஆடை அணிந்திருக்கின்ற பெண்களின், புணர் முலை நெருக்கில்-அவர்களுடன் புணர்ச்சி செய்வதிலும் முலைநெருக்குவதுமாகிய இச்சையில், நெருக்கிய மனத்தினேன்-மனதைச் சேர்த்து நெருக்கிவிட்ட மனதையுடையவன், வீணில்-வீணாக, போரிழை வெறியர்-எந்நேரமும் சண்டையே போட்டுக்கொண்டிருக்கும்படியாகிய வெறியர்களில், புகழ்பெறு வெறியேன்-மிக்கப்புகழும்படியான வெறியனானவன், புனைகலையிலார்க்கொரு கலையில் உடுப்பதற்கு ஆடை யில்லாதவர்களுக்கு என்னிடம் இருக்கும் ஆடைகளில், ஓரிழைபெனினும்-ஒரு நூலிழையாவது அதாவது கிழிந்த ஒரு துணியாவது, கொடுத்திலேன்-கொடுத்தது கிடையாது, ஆனால் நான் மாத்திரம், நீளவுடுத்து-நல்ல துணிகளை ஒன்றின்மேல் ஒன்றாகப்போட்டு அணிந்துகொண்டு, ஊர்தொறுந் திரிந்தேன், ஊர்கள் யெல்லாம் சுற்றித் திரிகிறவனாயிருந்தேன், நேரிழை விழைந்து-இன்னும் பெண்கள் ஆசைப்படும்படியாக விரும்பி, பூண்டுளங் களித்தேன்-ஆடைகளைப்போட்டு அணிந்துகொண்டு என்னுடைய உள்ளங் களித்தேன், என்னினும்-இத்தகையவைகளை நான் செய்தவனாயிருந்தாலும், காத்தருளெனையே-அடியேன்மேல் தயவுபுரிந்து கிருபைசெய்து காப்பாற்றி அருள்செய்வாயாக. (எ-று.) (சு)

அளத்திலேபடிந்ததுரும்பினுங்கடையே
னசடனேனறிவிலேனுலகிற்
குளத்திலே குளிப்பார் குளிக்கவெஞ்
சிறுநீர்க்குழியிலேகுளித்தவெங்கொடியேன்
வளத்திலே போசித்துத்தளத்திலேபடுக்க
மனங்கொண்டசிறிடனேன்மாயைக்

Koviloor Digital Library

களத்திலே பயின்றவுளத்திலேபெரிய
னென்னினுங்காத்தருளென்னையே.

(இ-ள்.) அளத்திலே படிந்த-பெண்கள் தலைவாரிமுடித்த தலையின்கொண்டையின்மேல்சொருகும்படியாகிய வாசனையுடைய மருக்கொழுந்தின்மேல் படிந்திராநின்ற: துரும்பினும் கடையேன்-தூசியினும் கடையேன், அசடனேன்-இன்னமும் கீழான குணத்தையுடையவன், அறிவிலேன்-இன்னம் புத்தியில்லாதவன், உலகில்-இந்த உலகத்தில், உள்ள சனங்களெல்லாம், குளத்திலே குளிப்பார்-தங்கள் உடம்பிலுள்ள அழுக்குகள் நீங்கிச்சுத்தமாகுவதற்காக நல்லநீருள்ள தடாகத்தில் ஸ்நானம் செய்வார்கள், நானோ, குளிக்க வெஞ்சிறுநீர்-குளிப்பதற்காக கடிசாகிய நாற்றத்தையுடைய மூத்திராதிகள் நிறைந்திருக்கும்படியாகிய, குழியிலே-பள்ளத்திலே, குளித்த வெங்கொடியேன்-ஸ்நானம் செய்த வெவ்விதாகிய கொடியவன், அதாவது ஸ்நானம் செயயப்போய் மறுபடியும் சேறு பூசிக்கொண்டவண்ணம் என் பாவம் நீக்கத் துதிப்பதற்குப் பதிலாக பாவமே அதிகமாகக்கொடிய பாவங்களைச் செய்தவன் என்பது கருத்து, களத்திலே பொசித்து-வீட்டிலே சாப்பிட்டு, நல்ல சுண்ணும்பிட்ட காரைப் பூமியின்மேல், படுக்க மனங்கொண்ட சிறியனேன்-படுத்து உறங்க வேண்டுமென்று மனதுகொண்டிராநின்ற சிறியவன், மாயைக்களத்திலே பயின்ற-பொய்யாகிய தோற்றங்கள் காணும்படியாகிய இந்தக்களத்தில் அதாவது உலகத்திலே அந்தமாயைகளை அறியாமல், உளத்திலே பெரியன்-மனதில் நான் பெரியவனென்கிற மமதைகொண்டவன், யென்னினும்-இப்படிப்பட்ட குணங்களைக் கொண்டவனுயிருந்தாலும் அதைப்பாவிக்காமல் காத்தருளென்னையே-என்னைக் காப்பாற்றியருள்செய்வாயாக. (எ-று.) (எ)

தொழுதெலாம் வல்லகடவுளே நின்னை
துதித்திலேன் தூய்மையொன்றறியேன்

Koviloor Digital Library

கழுதெலாமனையேனிழுதெலாமுணவிற்
கலந்துணக்கருதியகருத்தேன்
பழுதெலாம்புரிந்துபோதெலாங்கழித்த
பாவியேன்றீமைகள்சிறிது
மொழுகெலாம்படித்தன்றெனமிகவுடையே
னென்னினுங் காத்தருளெனையே.

(இ-ள்.) தொழுதெல்லாம் வல்ல கடவுளே-ஜனங்கள் செய்யும் வணக்கங்கட்கெல்லாம் பொருத்தமான வல்லமை பொருந்திய கடவுளே, நின்னைத்துதித்திலேன்-நான் உன்னை வணங்கவேயில்லை. தூய்மையொன்றறியேன் உன்னைத் துப்புறவு ஆக்குவது இன்னதென்று நான் அறியமாட்டேன், கழுதெலாமனையேன்-மூடமாகிய செயல்கள்யாவும் கொண்டவன், இழுது எல்லாமுணவில்-நல்லபாகத்தோடு இனிப்பு நெய் பாலோடு முதலிய யாவும் தின்னும் சாப்பாட்டில், கலந்துண-சேர்த்துச் சாப்பிடவேண்டுமென்று, கருதியகருத்தேன்-எண்ணங்கொண்ட கருத்தையுடையவன், பழுதெல்லாம் புரிந்து-ஜனங்கள் யாவருக்கும் கெட்டவைகளையே செய்த பொழுதெல்லாங்கழித்த-நாள் பாவம் வீணான காரியங்களில் கழித்த பாவியேன்-பாவமுடையோனாகியவன், தீமைகள் சிறிதும்-தீச் செயல்களில் கேடுகள் கொஞ்சமாவது விடாமல் செய்தவன், எழுதெலாம் படித்து-எழுதி யிருக்கும்படியானவைகள் யாவும்படித்துக்கொண்டு, அன்றெனமிகவுடையேன்-இல்லையென்று சொல்லும்படியான பொய்த்தன்மையையுடையவன், என்னினும்-இப்படிப்பட்ட வம்பனாயிருந்தாலும், காத்தருளெனையே-அடியேனைக் கொள்ளாமல் காத்து அருள்செய்வீராக. (எ-று.) (௮)

வட்டியேபெருக்கிக் கொட்டியேயேழை
மனைகவர்கருத்தினேனெட்டைச்
சட்டியேயனினும் பிறர்கொளத்தரியேன்
தயவிலேன்முதெலாம்படைத்த

Koviloor Digital Library

பெட்டியேசிகர்த்தமனத்தினேனுலகிற்
 பெரியவர்மனம்வெறுத்திடச்செய
வெட்டியேகள்ளிவெட்டியேயடைத்த
 வேடனேன்மூடரிற்றலையேன்
எட்டியேமன்றுங்கட்டியேயனையே
 னென்னினுங்காத்தருளனையே.

(இ-ள்.) வட்டியேபெருக்கி-தனவந்தர்கள் வட்டிக்குக் கொடுத்து வட்டிமேல் வட்டியேறும்படிக்கு ஒன்றின்மேல் ஒன்றாய் பெருக்கல்செய்து மொத்த பணத்தை, கொட்டியே-கொஞ்சமாவது மனமிரக்கமில்லாமல் பெற்று கொட்டிக்கொள்வார்கள், தவிர வட்டியைக்கொடுக்க வகையில்லா, ஏழை-ஏழைகளினுடைய, மனைகவர் கருத்தினேன்-வீட்டை வட்டிக்கு ஈடுகட்டும்படிக்கும் அந்த வீட்டைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தையுடையவன், ஒட்டைச்சட்டியே எனினும்-என்னுடைய வீட்டில் உபயோக மில்லாமலிருக்கும் ஓட்டைச் சட்டியாயிருந்தபோதிலும், பிறர்கொளத்தரியேன்-அந்தச் சட்டியையும் மற்றோர் யெடுத்துக்கொள்ளச் சகிக்காதவன், தயவிலேன்-கொஞ்சமாவது தயவில்லாதவன், சூதெல்லாமடைத்த-இன்னம் மோசம் சூதுவாது முதலியவைகள் அடைத்திருக்கும்படியாகிய, பெட்டியே சிகர்த்த ஒரு பெட்டியைப்போல் ஒப்பாகிய, மனத்தினேன்-மனதையுடையவன், உலகிற் பெரியவர்-உலகத்தில் நல்ல வழிகளை ஆராய்ந்து அந்த வழியில் சம்பிரதாய மடைந்த பெரியவர்களின், மனம் வெறுத்திடச்செய்-மனம் வெறுப்படையும்படியாகிய செய்கைகள் செய்தவன், வெட்டியே கள்ளிவெட்டியே அடைத்த-இன்னும் நான்கு பேர்கள் போகும்படியாகிய பாட்டையை வெட்டி அதில் கள்ளியை வெட்டி நட்டு வழியை யடைத்த, வேடனேன்-நல்லவனென பெயர்பூண்ட வேஷத்தையுடைய கொடியவன், மூடரிற்றலையேன்-முழுமூடர்களுக்கெல்லாம் தலைமையாகிய சிரோமணி போலொத்தவன்

Koviloor Digital Library

எட்டியேன்-இன்னும் எட்டிப்பழம்போன்ற குணத்தையுடையவன், மண்ணாங்கட்டியே யனையேன்-மண்ணாங்கட்டிக்குச்சமானமானவன், என்னினும்-இப்படி பல மாதிரியாகிய கெட்டகுணங்களை உடையவனு யிருந்தாலும், காத்தருளெனையே, என்னைக் காப்பாற்றுவாயாக. (எ-று.) (சு)

உடுத்திலேஞ்சிறிது முண்டிலேனெனவந்
  தோதியவறிஞருக்கேதுங்
கொடுத்திலேன்கொடுக்குங்குறிப்பிலேனுலகிற்
  குணம்பெரிதுடையநல்லோரை
யடுத்திலனடுத்தற்காசையுமில்லே
  னவனிமேனல்லவனெனப்பே
ரெடுத்திலேனெனினுந்தெய்வமே துணையென்
  றிருக்கின்றேன் காத்தருளெனையே.

(இ-ள்) ஏ! வல்லமையுடைய கடவுளே! உடுத்திலேம்-அப்பா நான் என் உடம்பு மறைய உடுப்பதற்கு ஒரு துணிகிடையாது, இன்னும், சிறிது முண்டிலேனென-கொஞ்சமாவது உணவருந்த வில்லையென்று யென்னிடம், வந்தோதிய வறிஞருக்கு-வந்து சொல்லா நிற்கும் ஏழைகளுக்கு, ஏதும் கொடுத்திலேன்-ஒன்றுங் கொடுத்து உதவினது கிடையாது, கொடுக்குங் குறிப்பிலேன்-அப்படிக் கொடுக்கவேண்டுமென்கிற குறிப்புங்கிடையாது, உலகிற்குணம்பெரிதுடைய நல்லோரை-உலகத்தில் நன்மையாகிய குணம் படைத்திருக்கும்படியாகிய நல்ல பெரிய தர்மவான்களை, அடுத்திலேன்-நான் அடுத்து சற்றுக் கொள்ளவுமில்லை, அடுத்தற் காசையுமில்லேன்-அவரிடம் சேர்ந்து கற்றுக்கொள்ளும் படியான ஆசையும் கிடையாது, அவனிமேல்-பூமியின்மேல், நல்லவனெனப் பேர்-நல்லவன் என்று சொல்லும்படியான பெயர் எடுத்திலேன் - நான் எடுக்கவில்லை, எனினும் - என்றாலும் நான் செய்திருக்கும்படியாகிய பாவம்பழி முதலியவைகளு

Koviloor Digital Library

க்கு, தெய்வமே துணையென்றிருக்கின்றேன்-கடவுளே நீதான் துணையென்று நான் நம்பியிருக்கின்றபடியால், காத்தருளை னையே-இந்தப் பாவியாகிய அடியேனைக் காத்துக் கிருபை செய்வாயாக. (எ-று.) (ய)

திருச்சிற்றம்பலம்.

ஆறுவது ஆத்துமவிசாரத்தழுங்தல் முற்றிற்று.

பாடல் விருத்தம் ய. ஆக விருத்தம் உரை எய.

ஏழாவது

அவாவறுப்பு.

:0:0:0:

எழுசீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தாலவாழ்க்கையிலேசார்ந்த வரெல்லாந்
தக்கமுப்போதினுந்தனித்தே
சீலமார்பூசைக்கடன் முடிக்கின்றார்
சிறியனேன்றவஞ்செய்வான்போலே
ஞாலமேலவர்க்குக்காட்டிநான்றனித்தே
நவிலுமிந்நாய்வயிற்றினுக்கே
காலையாதியமுப்போதினுஞ்சோற்றுக்
கடன்முடித்திருந்தனனெந்தாய்.

(இ-ள்.) தாலவாழ்க்கையிலே-உலகவாழ்க்கையாகியபெண் சாதி மக்கள் பொன் முதலியவைகளையுடைய அந்த வாழ்கை யிலே, சார்ந்தவரெல்லாம்-இருக்கும்படியானவர்கள் எல் லோரும், தக்கமுப்போதினும்-நியமித்திருக்கும்படியாகிய தன

Koviloor Digital Library

க்கு இருக்கும் சாவகாசத்தில் தக்கபடியாய்முப்போதுஎன்று சொல்லும்படியாகிய காலை, மதியம், மாலை,யென்கிற மூன்று நேரங்களிலும், தனித்தே-தன்னுடைய உலகவியவகாரக்களை யெல்லாம் விட்டுநீக்கித் தான் தனித்தவராக இருந்துகொண்டு, சிலமார் பூசைகடன்-ஆசாரமாதி கிருத்தியத்தோடுசெய்யும் வணக்கங்களை, செய்துமுடிக்கின்றார்-செய்து முடித்து வருகிறார்கள், ஆனால், சிறியோன்-அந்த சிறியவன், தவஞ்செய்வான்போல-நன்மையாகிய மெய்யான தவமாகியவணக்கம் செய்பவனைப்போல, ஞாலமேலவர்க்குக்காட்டி-உலகத்திலுள்ளவர்களுக்கு பாசாங்கு காட்டி, நான் றனித்தே-நான்ஒண்டியாய் இருக்கிறேன் என்று, நவிலும்-சொல்லுகின்ற, இந்நாய் வயிற்றினுக்கே-இந்த நாயாகிய என்வயிற்றுக்கே,காலையாதிய முப்போதிலும்-உன்னை மேல்காட்டியவர்கள் வணக்கம் செய்கின்ற காலை முதலாகிய மூன்று நேரங்களிலும், சோற்றுக்கடன்-உன்னை வணக்கஞ் செய்வதற்குப் பதிலாக சோறு சம்பாதிக்கிறதற்காக வேண்டிய உபாயங்களை, முடித்திருந்தே னெந்தாய்-செய்துக்கொண் டிருந்தேனே ஒழிய உன்னை வணங்கவில்லை என்னைப் படைத்த கடவுளே. (எ-று.) (க)

சோற்றிலேவிருப்பஞ்சூழ்ந்திடிலொருவன்
றன்னூற்றவமெலாஞ்சுருங்கி
யாற்றிலேகரைத்தபுளியெனப்போமென்
றறிஞர்களுரைத்திடல்சிறிதும்
போற்றிலேனுன்னைப்போற்றிலேன்சுவையிற்
பொருந்தியகாரசாரஞ்சேர்
சாற்றிலேகலந்தசோற்றிலேயாசை
தங்கினேனென்செய்வேனெந்தாய்.

(இ-ள்.) எந்தாய்-என்னுடைய கடவுளே! சோற்றிலே விருப்பம் - எந்நேரமும் அதைப்பைக் காத்துக் கொண்டு, சோறே தின்கிறதில் இன்பம், சூழ்ந்திடி லொருவன்-எவனொ

Koviloor Digital Library

ருவனுக்கு அதிகமாக இருக்கிறதோ அவன், தன்னூற்றவ மெலாஞ் சுருங்கி-எப்படிப்பட்ட தவம் செய்தவனு யிருந்த போதிலும் அந்த நன்மையான தவங்களெல்லாஞ் சுருக்கமாய், ஆற்றிலே கரைத்த புளியென-ஒடும்படியாகிய நதியின் தண்ணீரில் புளியைக் கொண்டுபோய்க் கரைத்தால் எத்தன்மையாய்ப் போய்விடுமோ அப்படியே, போமென்று-இவன் தவங்களெல்லாம் விருதாவாய்ப்போய்விடுமென்று, அறிஞர்களுரைத்திடல் சிறிதும்-நல்ல அறிவாளிகள் சொல்லியதைச் சிறியேனாகிய நான் கொஞ்சமும் எண்ணாமல் படிக்கு கொஞ்சமாவது, போற்றிலேனுன்னை-அதைக்கேட்கவு மில்லை, தவிர உன்னை, போற்றிலேன்-துதிக்கவுமில்லை, சுவையில் பொருந்திய-நாவிற்கு ருசி தரும்படியாகிய சரியான, காரசாரஞ்சேர்-காரமும் உப்பும் புளிப்பும் சேர்ந்திருக்கும்படியாகிய், சாற்றிலே கலந்த சோற்றிலே-குழம்பில் கலந்து இருக்கும்படியான சாரத்தின்மேலே எந்நேரமும் தின்கிறதற்கு, ஆசை தங்கினேன்-ஆசையுடைய வனானேன் ஆதலால், என்செய்வேன்-என்ன செய்யட்டும் கடவுளே. (எ-று.) (உ)

விருப்பிலேன்போலக்காட்டினேனன்றி
 வினைவிலாதுணைலாமறுத்த
கருப்பிலேயெனினுங்கஞ்சியாதிகளைக்
 கருத்துவந்துண்ணுதற்கமையேன்
நெருப்பிலேயுருக்குநெய்யிலே சிறிதும்
 நீரிடாத்தயிரிலேநெகிழ்ந்த
பருப்பிலேசோற்றுப்பொருப்பிலேயாசைப்
 பற்றினேனென் செய்வேனெந்தாய்.

(இ-ள்) விருப்பிலேன்போல-நல்ல சாப்பாட்டை சாப்பிடும்படியாக என்முன் கொண்டுவந்து வைத்த சாப்பாட்டை எனக்கு விருப்ப மில்லாதவன்போல அதாவதுசனங்களுக்குத் தவநெறியுடையவனைப்போல, காட்டினேன்-இதுசாப்பிடத்த

காருயென்று காட்டினேன், அன்றிவிளைவிலாதூணெலாம் மறந்து-காட்டிலேனே அல்லாமல் நமக்கு வசப்படாதவுண வுகளெல்லாம் மறந்து விட்டவன், ஆனால் நான் எப்படிப்ப ட்டவன் எனின், சருப்பிலே என்னினும்-பஞ்சகாலத்திலும் கூட, கஞ்சியாதிகளை-வடிகஞ்சி முதலாகிய கறிநீர்சாப்பிடும் உணவையுங்கூட, கருத்தவர்தங் குறைகற் கமையேன்-என் மனமானது ஆசையடைந்து அதை சாப்பிடுதற்கு அமைய மாட்டேன், நெருப்பிலே யுருக்கு நெய்யிலே-நெருப்பின் மீது வைத்து வெண்ணெயைப் புதிதாய் உருக்கி அதனால் மணம் வீசும்புத்துருக்கு நெய்யின்மேலும், சிறிதும் நீரிடாததயிரிலே-கொஞ்சமாவது தண்ணீர் சேராததயிரின் மேலும், நெகிழ்ந்த பருப்பிலே-நன்றாக வெந்த பருப்பின் மேலும், இன்னும். சோற்றுப் பொருப்பிலே-வெள்ளிமலை போலும் வெண்மை யாய்க் குவிந்திருக்கும் சாதக்குவியலிலே, ஆசைபற்றினேன்-ஆசையுடையவனாயிருக்கிறேன், என்ன செய்வேன்-இப்ப டிப்பட்ட ஆசையை நீக்குவதற்கு என்னசெய்வேன், எந் தாய்-என்னுடைய கடவுளே. (எ-று.) (௩)

உறியிலேதயிரைத்திருடியுண்டனனென்
றொருவனையுரைப்பதோர்வியப்போ
குறியிலேபலமைத்தவணவெலாந்
திருடிக்கொண்டுபோயுண்டனன்பருப்புக்
கறியிலே பொறித்த கறியிலே கூட்டுக்
கறியிலேகலந்தபேராசை
வெறியிலேயுனையுமறந்தனன்வயிறு
வீக்கிடவுண்டனனெந்தாய்.

(இ-ள்.) உறியிலே தயிரை-இடையர்கள்உறியிலேவைத் திருக்கும்படியான தயிரை, திருடியுண்டனனென்று-திருடித் தின்றுவிட்டான் என்று, ஒருவனை-கிருஷ்ணனாகிய ஒருவனை, உரைப்பதோர் வியப்போ-குறிப்பாகச்சொல்லுவது ஆச்சரிய

Koviloor Digital Library

மாமோ, நான் எப்படிப்பட்டவன் ஆனால், குறியிலேயமைத்த அடையாளமாக மறைத்தே வைத்திருக்கும்படியாகிய, உணவு எலாம் திருடிக் கொண்டுபோய் சாதமுதலியவைகளையெல்லாம் களவுசெய்துகொண்டு ஓடிப்போய், உண்டன்-தின்றவன், பருப்புகறியிலே-பருப்புச்சேர்த்து சமைத்தபதார்த்தத்திலும். பொறித்த கறியிலே-கவுசையமுடைய பொறிக்கறியிலும், கூட்டுக் கறியிலே-பருப்போடு காய் முதலியவைகள் சேர்த்து சமைத்தபதார்த்தத்திலும் என்மனம், கலந்தபேராசை-கலந்திருக்கும் படியாகிய என் பேராசையான, வெறியிலே-மயக்கத்தினால், உனைமறந்தனன்-உன்னை மறந்துவிட்டு, வயிறுவீங்கிட-அழுந்திபொயிருக்கும்என் வயிறானது வீங்கும்படியாக, உண்டனனெந்தாய்-எனது தந்தையே சம்பிரமாய் சாப்பிட்டேன், உனை மறந்துவிட்டேன் என்ன செய்வேன் கடவுளே. (எ-று.) (ச)

கீரையோவிரும்பேன்பருப்பொடுகலந்த
  கீரையேவிரும்பினேன்வெருந்தண்
ணீரையேவிரும்பேன்தெங்கிளங்காயி
  னீரையேவிரும்பினேனுணவி
லாரையேயெனக்குநிகரெனப்புகல்வே
  னய்யகோவடிச்சிறுநாயேன்
பேரையேயுரைக்கிற்றவமெலாமோட்டம்
  பிடிக்குமேயென்செய்வேனெந்தாய்.

(-இ-ள்.) கீரையே விரும்பேன்-கடவுளே நான் தனியாய் சமைத்து வைத்திருக்கும் கீரைப் பதார்த்தத்தை விரும்புகிறது இல்லை, பருப்போடு கலந்த கீரையே விரும்பினேன்-ஆனால் பருப்போடு கீரையைக் கலந்து சமைத்து வைத்திருக்கும்படியாகிய கீரையை புசிக்கவிரும்பினவன், வெறுந்தண்ணீரையே விரும்பேன்-கலப்பற்ற குளிர்ந்த நீரை விரும்புகிறதுமில்லை, ஆனால், தெங்கிளங்காயின் - தென்னமரத்திலுண்டாயிருக்கும் இளங்காயினுடைய, நீரைய விரும்பினேன்-ஆதலால் அந்த நீரைக்குடிக்க இச்சித்தவன், உணவில்-நான் அருந்தும்

Koviloor Digital Library

சாப்பாட்டில், ஆரையே யெனக்கு-என்னைப்போல அதிகமாய்ச் சாப்பிடுவதில்லை யார் எனக்கு, நிகரெனப் புகல்வேன்-இன்னவர் நிகரானவர் என்று சொல்லுவேன், ஒருவரும் நிகரானவர் கிடையாது, அய்யகோ-ஓ எனைப்படைத்த அய்யனே வடிச்சிறு நாயேன்-உன்னுடைய அடியைக் காத்திருக்கும்படியாகிய இச்சிறு நாயேனுடைய, பேரை யுரைக்கில்-நாமதேயத்தைப் புகலுமிடத்து, தவமெலாம் ஓட்டம்-நான் செய்யவேண்டுமென்கிற தவங்களெல்லாம் ஒரே ஓட்டமாய் நில்லாமல், பிடிக்குமே-ஓடிப்போகுமே, என்செய்வே னெந்தாய்-என்னசெய்வேன் என்னுடைய கடவுளே. (எ-று.) (ரு)

பாலிலேகலந்தசோறெனில் விரைந்தே
  பத்தியாலொருபெருவயிற்றுச்
சாலிலேயடைக்கத்தடைபடேன்
  வாழைதருபலாமாமுதற்பழத்தின்
தோலிலேயெனினுங்கிள்ளியோர்சிறிதுஞ்
  சூழ்தவர்க்கீந்திடத்துணியேன்
காலிலேனிருக்கில்வனத்திலேயிருக்க
  வாய்ப்பிலேனென்செய்வேனெந்தாய்.

(இ-ள்.) பாலிலே கலந்த சோறெனில்-பாலோடு கலந்திருக்கும்படியாகிய சாதமாயிருக்குமாகில், விரைந்தே பத்தியால்-அந்த சோத்தின்பேலிருக்கும் ஆசையினால் சீக்கிறமாக ஓடிப்போய்,ஒருபெருவயிற்று-எனக்கு இருக்கும்படியானஒரு பெரிய வயிறென்று சொல்லும்படியாகிய, சாலிலேயடைக்கத்தடைபடேன்-வண்ணான் தாளிக்குச் சமானமாகியஎன்வயிற்றுசாலில்போட்டு அடைப்பதற்கு ஒருபோதும் தடைசெய்யமாட்டேன், வாழை தரு பலாமா முதற்பழத்தின்-இன்னும், வாழைப்பழம் பலாப்பழம் மாம்பழம் முதலாகிய பழவர்க்கங்களில், தோலிலே யெனினும்-பழமோ முந்தியே தரமாட்டேன் தோலோ என்று சொன்னால், கிள்ளியோர் சிறிதும்-

Koviloor Digital Library

அந்தத் தோலில் கொஞ்சம் இள்ளியாவது சூழ்ந்தவர்ச்சிந்திடத்துணியேன்-என்னைச் சுற்றியிராநின்றவர்களுக்குக் கொடுத்திடத் துணியாதவன், வாலிலேனிருக்கில்லவல்ல - கடவுளே! இத்தகை குணம் படைத்த எனக்கு வால் இடையாது இருந்தால், வனத்திலே இருக்க-காட்டிலே சஞ்சரிக்கிறதற்கு, வாய்ப்புளேன்-ஒரு மிருகமாய்இருப்பதற்கு ஒப்பானவன் என் செய்வேனெந்தாய்-என்னசெய்யட்டும் கடவுளே. (எ-று.)

உடம்பொருவயிறுய்ச்சருக்கரைகலந்த
வுண்டிரேயுண்டனன்பல்கால்
கடம்பெறுபுளிச்சோறுண்டுளேகளித்தேன்
கட்டிநற்றயிரிலேகலந்த
தடம்பெறுசோற்றிற்றருக்கினேனெனுமிச்
சம்பழச்சோற்றிலேதடித்தேன்
திடம்பெறுமற்றைச்சித்திரச்சோற்றிற்
செருக்கினேனென்செய்வேனெந்தாய்.

(இ-ள்.) கடவுளே நான், உடம்பொரு வயிறுய்-இந்த உடம்பெல்லாம் ஒரே வயிறுபோல, சருக்கரைகலந்த-சீனிகலந்திருக்கும்படியாகிய சருக்கரைப்பொங்கல் என்னும், உண்டிரே யுண்டனன் பல்கால்-அநேக நாட்களாக அந்த சாதத்தையே தின்றேன், கடம்பெறு புளிச்சோறு-உடல் பெருக்கும்படியாகிய புளிச்சாதத்தை, உண்டுளே களித்தேன்-சாப்பிட்டு உள்ளுக்குள்ளே களித்திருந்தேன், கட்டிநற்றயிரிலே கலந்த-கட்டியாயிராநின்ற நல்ல தயிரில்கலந்து, தடம்பெறு சோற்றின்-ருசி அதிகமாயுள்ள தத்தியோதன மென்னுஞ் சோற்றில், தருக்கினேன்-தருக்கம் செய்துதின்பவன் இன்னும், எனுமிச்சம்பழச் சோற்றிலே தடித்தேன்-சாதத்தில் எலுமிச்சரசம் பிழிந்து நெய்த்தேங்காய் பருப்புடன் சமைத்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டேன், திடம்பெறுமற்ற-இதுவும் தவிர உடலுக்கு பலம் வரும்படியாகிய மற்ற சித்திரச்சோற்

Koviloor Digital Library

றில்-பலவகையாகிய சித்திரான்னங்களால், செருக்கினேன்-தின்பதில் மமதையடைந்தவனாயிருக்கிறேன், என்செய்வேன் இப்படிப்பட்ட ருசிகளை நீக்கு முபாயந்திற்கு யென்னசெய்வேன், எந்தாய்-என்னுடைய கடவுளே. (எ-று.) (எ)

மிளகுமென்மேலுஞ்சேர்த்தபல்லுணவில்
விருப்பெலாம் வைத்தனனுதவாச்
சுளகினுங்கடையேன்பருப்பிலேயமைத்த
துவையலேசுவர்க்கமென் றுண்டே
ளிளகிலாமனத்தேனினியபச்சடிசி
லெவற்றினுமிச்சைவைத்திசைத்தேன்
குளகுறும்விலங்கினிலைக்கறிக்காசை
கொண்டனனெனன்செய்வேனெந்தாய்.

(இ-ள்.) மிளகு மென்மேலும்-ஆண்டவனே! நான் மிளகை அதிகம் அதிகமாக, சேர்த்த பல்லுணவில்-சேர்த்துச் சமைத்துவைத்த உண்டியில், விருப்பெலாம்-என் ஆசையெல்லாம், வைத்தனன்-வைத்து தின்றுக்கொண் டிருந்தவன், உதவாசுளகினும் கடையேன் - ஒன்றுக்கும் உதவாத பழமுறத்திற்கும்; கடையானவன், பருப்பிலேயமைத்த-பருப்பை வருத்து அரைத்துச் செய்யப்பட்ட, துவையலே-துவையலையே சுவர்க்கமென் றுண்டேன்-இதுதான் சுவர்கம்என்று அத்தனை அன்போடு தின்றவன், இளகிலா மனத்தேன்-கொஞ்சமாவது இரக்கமில்லாத மனதையுடையவன் இனியபச்சடிசில்-நாவிற்கு ருசித்த பச்சடி ஊன்காய் எவற்றினுமிச்சை-கண்ணுக்குத் தென்பட்ட எந்த வஸ்துவினு மின்பத்தை, வைத்திசைந்தேன்-வைத்து அந்தவஸ்துக்களை சேர்க்கிறதினும் இன்பதினும்வழிபட்டேன், குளகுறும்விலங்கின்-பச்சைப்புல்தழைமேயும்படியாகிய ஆடுமுதலிய மிருகமாமிசத்தின் பேரினும், இலைக் கறிக்காசை-கீரை முதலியவற்றின் ஆசை, கொண்டனன்-கொண்டவனா யிருக்கிறேன், என்செய்வேன்யெந்தாய் நான் என்னசெய்யட்டும் என்னுடையகடவுளே. (எ-று) (அ)

Koviloor Digital Library

தண்டுகாய்கிழங்கு பூமுதலொன்றுந்
தவற விட்டிடுவதற் கமையேன்
கொண்டுபோய் வயிற்றுக்குழியெலா நிரம்பக்
கொட்டினேன் குணமிலாக் கொடியோன்
வண்டுபோல் விரைந்து வயலெலா நிரம்ப
மலங்கொட்ட வோடியபுலையேன்
பண்டுபோற் பசித்தூண் வருவழிபார்த்த
பாவியே னென்செய்வேனெந்தாய்.

(இ-ள்.) தண்டுகாய் கிழங்கு-என்னை ஆண்ட கடவுளே யான் பூலோகத்தின்கண் உன்னால் உற்பத்தியாக்கப்பட்டு செழித்து வளர்ந்திரானின்ற கீரை முதலிய பற்பல நானாவிதமான செடிகளின் தண்டுகளும் அவற்றின் காய்களும், வேர் அல்லது கிழங்குகளையும், பூமுதலொன்றும்-புஷ்ப்பித்திரானின்ற வாழை, முருக்கு முதலிய புஷ்பங்கள் முதல் பலவாகிய வஸ்த்துக்களையும், தவறவிட்டிடுவதற் கமையேன்-பூமியின்கண் அவைகள் இருந்து ஜனங்களின் கண்களுக்கு அழகையும் மனதிற்கு ஆனந்தத்தையும் உண்டாக்கி உன்னால் படைக்கப்பட்ட தத்துவ காரணத்தை யறியும்படி விட்டுவைக்காமல்படிக்கு, கொண்டுபோய் - உனக்கு முந்தியது எனக்கு முந்தியதென்று தண்டுமுதல் யாவற்றையும் பறித்துக்கொண்டுபோய், வயிற்றுக்குழியெலாம் நிரம்ப-அவைகளை என்னுடைய நிரப்பமுடியாத வயிற்றுப்பள்ளங்கள் யாவும் நிரம்பும்படியாக, கொட்டினேன் - வாய்வழியாகவயிற்றுக்குள்கொட்டினேன். அதாவது தின்றவனாகிய, குணமில்லாக் கொடியேன்-உன்னுடைய அற்புதங்களைக்கண்டு ஆனந்தமடையும் புத்தியில்லாதவனாகிய பாவியானவன், வண்டுபோல் விரைந்து - மேல்கூறியவைகளைத்

Koviloor Digital Library

இன்றதினால் அவைகள் ஜீரணமாகி வெளிநோக்குங்காலத்தில் வயிற்றில் வலிகாணும்பொழுது அந்த உபாதியை நீக்குவதற்காக வண்டைப்போல சீக்கிரமாக, வயலெலாநிரம்ப - நகரின் சூழாலிருக்கும் நன்செய் புன்செய் முதலிய நிலங்களில் நிரம்பும்படியாக, மலங்கொட்ட வோடியபுலையேன் - வயிற்றிலிருக்கும் மலத்தைத் தள்ளுவதற்காக வேண்டி வெகு சீக்கிரமாக ஓடிய சண்டாளனாகிய புலையனானவன், பண்டுபோற்-இப்படியே காலமெல்லாம், பசித்து-வயிறு பசியெடுக்குந் தருவாயிலெல்லாம், ஊண்வருவழி-அப்பசிக்காக ஆகாரம் யெம்மாதிரியாக அகப்படுமோ என்று அந்த ஆகாரம் கிடைக்கும் வழியை, பார்த்த பாவியேன்-பார்த்துக்கொண்டிருந்திராநின்ற பாவியாகினேன். ஆதலால் இந்தகைய பாவியாகிய யான் இதுசமயமிட்டும் நீங்கி உன்னுடைய திருவிலாசத்தைப் பெறுவதற்காக வேண்டி, யென்செய்வேனெந்தாய்-என்ன செய்யட்டும் என்னுடைய கருணைக் கடவுளே. (எ-று.) (கூ.)

வறுத்தலே பொடித்து மலர்த்தலேபுரட்டி
வைத்தலேது வட்டலிற் சுவைகளூ
றுத்தலே முதலாவுற்றபல்லுணவை
யொருமல வயிற்றுப்பையுள்ளே
துறுத்தலே யெனக்குத் தொழிலெனத்துணிந்தேன்
றுணிந்தரைக் கணத்தும் வன்பசியைப்
பொறுத்திலே யறியேன் மலப்புலைக்கூட்டை
பொறுத்தன னென்செய்வே னெந்தாய்.

(இ-ள்) வறுத்தலே-செய்யில் பொறித்திருக்கும்படியான பொறியல்களும், பொடித்து மலர்த்தலே புரட்டி-சம்பாரவகைக்களை இடித்து தூள்செய்து கறிகாய்களில்

Koviloor Digital Library

சேர்த்து புரட்டி, வைத்தலே துவட்டலில் சுவைகள்-வைத்திருக்கும்படியாகிய துவட்டல் கறிகளும் இன்னம் நாவிற்கு ருசிதரும்படியாக, உறுத்தலே முதலாய்-உண்டாக்கிவைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் முதலாய், உற்ற பல்லுணவை-பலமாதிரியாகிய சிற்றுண்டிகள் யாவையும் ஒருமல வயிற்றுப்பையுள்ளே-மலங்களைக்கொண்டு நிரம்பியிருக்கும்படியான வயிற்றிலுள்ள குடலினுள்ளே, துறுத்தலே யெனக்குத் தொழிலெனத் துணிந்தேன்-வல்லமையுடைய கடவுளே வயிற்றுக்குள்ளுள்ள பை நிரம்பும்படியாக மேலுக்கு மேலும் விழுங்கிக்கொண்டிருப்பதே எனக்கு தொழிலென்று துணிந்துக்கொண்டு, துணிந்தரைக் கணத்தும்-அரைநிமிஷநேரமாவது கொடுமையாகிய வயிற்றுப் பசியை பெருந்துணிவுகொண்டு, பொறுத்தலே யறியேன்-பொறுத்திருக்க சக்தி பெறுவதை ஒருபொழுதும் அறியமாட்டேன். ஆனால், மலப்புலைக்கூட்டை-மலங்கள் யெல்லாம் சுரந்திரானின்ற புலாலென்னும் சதை பொதிந்திரானின்ற கூடாகிய இச்சரீரத்தை, பொறுத்தனன்-தாங்கிக்கொண்டிருந்தேன். ஆதலால், இத்தகைய நாட்டத்தைக்கொண்டுள்ள யான் கடைத்தேறுவதற்காக, எச்செய்வேனெந்தாய்-என்னசெய்யட்டும் என்னை யாட்கொண்ட வல்லமெய்க் கடவுளே. (எ-று) (ம)

பருப்பிடி யரிவாலிடிகளாதிகளால்
பண்ணிய பண்ணிகாரங்க
ளுருப்பிடி நிரம்ப வரவரவெல்லா
மொருபெரு வயிற்றிலே யடைத்தேன்
சருப்பிடி யுலகி னெருப்பிடியனைய
கடையரிற் கடையனேனுதவாத்

Koviloor Digital Library

துருப்பிடி யிருப்புத் துண்டுபோற் கிடந்து
தூங்கினே னென்செய் வேனெந்தாய்.

(இ-ள்.) பருப்பிடி-பற்பல பருப்பினங்களால் செய்திராநின்ற சிற்றுண்டிகளும், யரிவாலிடிகள்-அரிசியினங்களால் செய்திராநின்ற பற்பல உண்பனைகளும், ஆதிகளாற் பண்ணிய- முதலியவைகளாற் சமைக்கப்பட்ட, பண்ணிகாரங்கள் - அப்பவருக்கங்களை, உருப்பிடி நிரம்ப - என்னுடைய கைகள் நிரம்பும்படியாக, வரவர வெல்லாம்- கொண்டுவந்து வைக்கவைக்க எனது கை சலியாமல்படி வாரிவாரி யெடுத்து, ஒரு பெருவயிற்றிலே யடைத்தேன்- விழுங்கி என்னுடைய ஒரே யொரு பெரிய வயிற்றிலே நிரப்பிக்கொண்டேன். கருப்பிடியுலகில்-நல்ல புத்திவான்கள் தங்களின் யோசனையை மட்டுக்கட்டும்படியாகிய உலகில், கொருப்பிடியனைய - கருங்கோபியெனச் சொல்லும்படியாகிய, கடையரிற் கடையனேன்-கீழ்மக்கள்களிலும்கடையோனாகினேன். தவிரவும், உதவாத்துருப்பிடியிருப்பு-ஒன்றுக்கும் உதவாத துருவுபிடித்த அதாவது கறைபிடித்த யிரும்பு, துண்டுபோற் கிடந்து - துண்டுகளைப்போல தெருக்களில் விழுந்து கிடந்து, தூங்கினேன்-தூங்கி என்னுடைய காலத்தைப் போக்கினேன். ஆதலால், எந்தாய்-என்னை ஆண்ட கடவுளே, என்னசெய்வேன் - நான் நல்லவழி யொழுகி நின்னை யடையும்படியாக நான் என்ன செய்யட்டும், (எ-று.) (௪௧)

அடிக்கடி நன்மை விழைந்து போயவைக
ளடுக்கிய விடர்தொறு மலைந்தே,
தடிக்கடி நாய்போல் நுகர்ந்துவாய் சுவைத்துத்
தவம்புரிந்தானென நடித்தேன்,

Koviloor Digital Library

பொடிக்கடி நாசித் துளையிலே புகுத்திப்
பொங்கினேனையகோ வெனது,
முடிக்கடிபுனைய முயன்றிலேனறிவில்
மூடனே னென்செய்வே னெந்தாய்.

(இ-ள்.) சன்மார்க்கத்தை தரும்படியாகிய, எந்தாய்- என்னையாட்கொண்ட தந்தையே நான், அடிக்கடி நண்மை- யெந்தகாலத்திலும் எந்நேரமும் தகுதியான சாப்பாடுகள் எங்கு விருந்துகிடைக்குமென்று கூர்மையாய் விசாரித்து, விழைந்துபோயவைகள்-அவ்வீட்டை யுடையவர்களை இஷ்டம் செய்துகொண்டு அங்கு போய் அவ்விதமானவைகள், அடுக்கிய விடந்தோறுமலைந்தே - செய்யும்படியான விடங்களிலெல்லாம் அலைந்து திரிந்து, தடிக்கடி நாய்போல்- கடிக்கும்படியான நாய்க்கு தடியைக்காட்டினால் கடிக்காமல் நிற்பதுபோல யான், நுகர்ந்து வாய்ச்சுவைத்து-அப்படிப்பட்டவர்களுக்குதம்பேசி உணவுகளை வாய்க்கு இன்பமாக ருசியைப்பார்த்து தின்றுக்கொண்டு, தவம்புரிந்தானென நடித்தேன்-யாவருக்கும் உன்னுடைய அருளைபெரும் பொருட்டு தவஞ்செய்பவர்களில் யானுமொரு தபஞ்செய்பவனென்று தெரியும்படியாக நடந்துகொண்டேன். பொடிக்கடி நாசி - பொடியென்று சொல்லும்படியான புகையிலையால் செய்யப்பட்ட தூளை மூக்கின், துளையிலே புகுத்தி - துவாரத்தில் செல்லவைத்து அதாவது பொடியை போட்டுக்கொண்டு அதினால்வரும் ஆனந்தத்தினால், பொங்கினேன் - இதுதான் பரமசுகமென்று அந்த இன்பவாருதியில் முழுகினேன். ஆதலால், ஐயகோ - அந்தோ, எனது - என்னுடைய, முடிக்கடிபுனைய-முடியாகிய கபாலத்தில் உன்னுடைய அலங்காரமாகிய ஒளியை புனைவதற்கு அதாவது

Koviloor Digital Library

தெரிவிப்பதற்கு, அறிவில் மூடனேன்-அறிவில்லாத மூடனாகிய நான், மூபன்றிலேன் - மூபலவில்லை ஆதலால், யென்செய்வேன்-யென்னசெய்யட்டும். (எ-று.) (௬௨)

உண்டியே விழைந்தேனெனினு மென்றன்னை
யுடையவாவடிய னேனுனையே,
யண்டியேயிருந்தே னிருக்கின்றே னிருப்பே
னப்பநின்றனை நின்றனக்கே,
தொண்டுறுதவர்கைச் சோற்றினைவிரும்பேன்
றூயனே துணைநினையல்லாற்,
சண்டிலேனென்னை காப்பதுன் கடன்காண்
கைவிடேல் கைவிடேலெந்தாய்.

(இ-ள்.) உண்டியே விழைந்தேனெனினும்-கிருபைதங்கிய கருணாகரக் கடவுளே யான் உண்டியாகிய வயிற்றுக்காக வேண்டிய தின்பன உண்பன முதலியவைகளில் விருப்பமுடையோனாய் இருந்திட்டபோதிலும், என்றனையுடையவா-என்னை படைத்து எனை ஆட்கொண்ட கருணாகரக்கடவுளே, அடியேனுனையே-தொண்டனாகிய நான் உன்னையே, அண்டியே யிருந்தேன் - அடுத்து தொண்டுசெய்தவனாக இருந்தேன், இருக்கின்றேன்-இப்பொழுதும் உன்னையே அண்டியிருக்கின்றேன், இருப்பேன்-இன்னமும் எக்காலமும் உன்னையே அடுத்திருப்பேன், அப்பநின்றனை-என்னை பரிபாலித்து வளர்த்த கருணையுடைய பிதாவே உன்னுடைய ஆணையாக இனிமேல் யான், நின்றனக்கே-உனக்கு, தொண்டுறுதவர்-அடிமைபூண்டு உம்பணிசெய்யாதவர்களுடைய, கைச்சோற்றினை விரும்பேன்-கையால் செய்யும் அதாவது அவர்களிடப்படும் சோற்றைஆசைப்படமாட்டேன். அதாவது தின்னமாட்டேன். இதுவே எனது சபதம். ஆதலால்

Koviloor Digital Library

நாயனே துணைநினையல்லால்-பரிசுத்தமாகிய கருணாநிதியே எனக்கு எந்நேரத்திலும் துணையாக இருப்பவன் நீயேயல்லாமல் வேறே, கண்டிலேன்-மற்ற எவர்களையும் என்னுடைய எண்ணத்தில் கொள்ளவில்லை, என்னை காப்பதுன் கடன்காண்-ஆதலால் யாருமற்ற என்னை காத்துக்கொள்வது உன்னுடைய கடனாயிருக்கும் என்பதை அறிந்துகொள்வது தவிர, கைவிடேல் கைவிடேலெந்தாய்-எந்தையே என்னையெப்பொழுதும் கைவிடப்படாது கைவிடப்படாதென்பதே எனது கோறிக்கை. (எ-று.) (கக)

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது அவாவறுப்பு முற்றிற்று.

பாடல் விருத்தம். கக. ஆக விருத்தம் உரை அ௰ங.

எட்டாவது.

திருவருட் பெருமை.

——:o:o:o:——

எண்சீரடி யாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வெறுத்துரைத்தேன் பிழைகளெல்லாம் பொருத்தருளல் [வேண்டும்
விளக்கறிவுக்கறிவாகி மெய்ப்பொதுவி னடிப்போய்,
கறுத்துரைத்தார் தமக்குமருள் கனிந்துரைக்கும் பெரிய
கருணை நெடுங்கடலே முக்கண்ணோங்கு கரும்பே,

Koviloor Digital Library

மறுத்துரைப்ப தேவனருணீ வழங்குகினு மன்றி
மறந்திடினு முன்னையலான் மற்றொருசார்பறியேன்,
வெறுத்துரைத்த வுரைகளெலாந் திருவருளே யென்று
சிந்திப்ப தல்லாமற் செய்வகை யொன்றிலனே.

(இ-ள்) முக்கண்ணோங்கு கரும்பே-இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமாகிய திரிகாலங்களிலும் நடந்த, நடக்கிற, நடக்கப்போகிற காரியங்கள் யாவற்றையும் யாதொரு மறைவில்லாது பார்க்கும்படியாய் என்மனதின்கண் வளர்ந்து இனிக்கும்படியான கருணைக்கடவுளே, வெறுத் துரைத்தேன்-இப்பூவுலகின் இன்பமிகுதியால் உன்னை வெறுத்து சொல்லத்தகாத வார்த்தைகளை யெல்லாம் சொல்லினேன், பிழைகளெல்லாம் - அப்படி வெறுத்து சொல்லி யிராநின்றதவறுகளாகிய குற்றங்கள் யாவையும், பொருத்தருளல்வேண்டும்-க்ஷமித்து என்மேல் கிருபை செய்யவேண்டும், விளங்கறிவுக் கறிவாகி- விளங்கும்படியாகிய அறிவென்னும் புத்தியின்கண் அறிவாகிநின்று, மெய்ப்பொது வினடிப்போய்-சரீரத்தினுடைய பொதுவில் நடனஞ்செய்கின்ற அதாவது ஒளிவாயிருந்து பிரகாசித்து நர்த்தனஞ் செய்யாநின்ற, கறுத்துரைத்தார் தமக்கு- மனக்குறைவுபட்டு கோபத்தால் சொல்லியவர்களுக்கும், அருள் கனிந்துரைக்கும்- உன்னுடைய சாத்வீக குணக்கனி லொன்றாகிய கிருபை சுரந்து அபயம் சொல்லும்படியாகிய, பெரியகருணை நெடுங்கடலே- அதிகமாகிய கருணைகுடிகொண்ட நீண்ட சமுத்திரம் போன்றவா? மறுத்துரைப்ப தேவனருணீ வழங்குகினும் - என்போலொத்த அஞ்ஞானிகளுக்கு நீர் அருள்கொடுப்பதை கொடுக்கவேண்டாமென்று உம்மைதடுத்து சொல்பவனெவனிருக்கிறான். ஒருவருமில்லை, அன்றி மறந்திடினும்-அல்லது அப்படி மறந்திட்டாலும், உன்னையல்லான்-அதை

Koviloor Digital Library

மறுக்காது மீட்டுதருவதற்கு உன்னைத்தவிர, மற்றொரு சார்பறியேன்-மற்ற எந்த ஒரு உதவியும் அறியமாட்டேன் அல்லாமலும், செறுத்துரைத்த உரைகளெல்லாம்-யான் கோபத்தால் சொல்லிய சொற்களெல்லாம், திருவருளே யென்று-தெய்விகமாகிய உம்முடைய கிருபையே யென்று, சிந்திப்பதல்லால்-பொறுக்கப்பட்டதோ இல்லையோவென்று எண்ணமே கொள்வதல்லாதபடி, செய்வகை யொன்றிலனே-வேறு செய்யும்படியாகிய வழி வேறொன்று இல்லாததாயிருக்கின்றேன். (எ-று.) (க)

மிகுத்துரைத்தேன் பிழைகளெலாஞ் சகித்தருளல் வே
[ண்டும்
மெய்யறிவின்புருவாகி வியன்பொது வினடிப்போய்,
தொகுத்துரைத்த மறைகளும் பின் விரித்துரைத்துந்
துரியநடுவேயிருந்த பெரிய பரம்பொருளே, [காணுத்
பகுத்துரைத்த பயனுரைக்கோர்பொருளாகிவிளங்கும்
பரஞ்சுடரே பரம்பரனே பசுபதியே யடியேன்,
வகுத்துரைப்பதெவனருணீ வழங்குகினுமன்றி
மறுத்திடினுமுன்னை யல்லான் மற்றொருசார்பிலனே.

(இ-ள்.) மெய்யறிவின்புருவாகி-உண்மையாகிய அறிவினிடத்தே இன்பமாகிய பேரானந்தமென்னு மோருருவாகி, வியன்பொது வினடிப்போய்-பெருமைதங்கிய அம்பலத்தின்கண் நடனஞ்செய்கின்ற கிருபாநிதியே! மிகுத்துரைத்தேன்-சொல்லும்படியாகிய சொற்களுக்குமேல் அதிகமாக விதந்து சொல்லிய சொற்களினுடைய, பிழைகளெல்லாம்-குற்றங்கள்யாவையும், சகித்தருளல் வேண்டும்-மன்னித்துகொள்ள வேண்டும், தொகுத்துரைத்தமறைகளும் - அளவுபடுத்தி ஒழுங்காகச்சொல்லிய வேதங்களும், பின்விரித்துரைத்துங் காணு-பின்னால் நமக்கு பாரவான்கள் அவற்றின் விஷயம்

Koviloor Digital Library

தெள்ளெனஎடுத்துசொல்லியதைக்கொண்டுதேடிப்பார்த்துங் காணாத, துரிய நடுவேயிருந்த-சுத்தமில்லையாகிய நாபிக்கமலத் தின் நடுவில் வீற்றிருந்த, பெரியபரம்பொருளே-இவ்வளவு தான்யென்று மட்டிட்டு சொல்லக்கூடாத பெரிய பழமை யாகியபொருளே, பகுத்துரைத்தபயனுரைக்கோர் - உன் னால் தெளிவாக்கப்பட்ட மேலானவர்கள் இன்னவித மென்று விவரித்துச் சொல்லிய பிரயோசனத்தின் மொழிக் கொரு, பொருளாகிவிளங்கும்-ஒருவஸ்துவாய் தெளிந்திரா நின்ற, பரஞ்சுடரே - சுயம்பிரகாசக்கடவுளே, பரம்பரனே- பரம்பரையாகிய சுதந்திரமானவனே, பசுபதியே-கடவுளே, அடியேன் - உனக்குத் தொண்டுபுரிவோனாகிய யெனக்கு, அருள் நீ வழங்குகினும்-உன்னுடைய அருளைக்கொடுக்கும் பட்சத்தில், வகுத்துரைப்பதெவன்-உனக்கு இம்மாதிரி கொடு இப்படிக் கொடுக்கவேண்டாம் என்று பிரித்து சொலலுப வன் யாரிருக்கின்றான் ஒருவருமில்லையே, அன்றி-அல்லது, மறுத்திடினும்-அப்படி யாராவது இருந்து மறுத்திட்டபோ திலும், உன்னையல்லால்-அதற்கு பரிகாரஞ்செய்வதற்கு உன்னை யல்லாது, மற்றொரு சார்பிலனே-மற்ற எந்த ஒரு உதவியும் இல்லாதவனாயிருக்கின்றேன். (எ-று.) (உ)

முன்னவனே சிறியேனான் சிறிதுமறியாதே
முனிந்துரைத்த பிழைபொறுத்துக் கனிந்தருளல் வே
[ண்டு,
மென்னவனே யென்றனையே யென்னுறவே யென்னை
யீன்றவனே யென்றாயே யென்குருவேயெனது,
மன்னவனே யென்னுடைய வாழ்முதலே யென்கண்
மாமணியே மணிமிடற்றோர் மாணிக்கமலையே,
அன்னவனே யம்பலத்துளாடுகின்றவமுதே
யாறணிந்த சடையாய யான் வேறுதுணையிலனே.

Koviloor Digital Library

(இ-ள்.) முன்னவனே-இப்பூவுலகத்திற்கு முந்தியவனாகிய கடவுளே!, சிறியேனான்-உனது தொண்டர்களில் சிறியவனாகிய நான், சிறிதுமறியாதே-கொஞ்சமாவது முன் பின்னென்று மறியாமல்படிக்கு, முனிந்துரைத்த-கோபத்தால் சொல்லிய, பிழை-குற்றங்கள் யாவையும், பொறுத்து-க்ஷமித்துமன்னித்து, கனிந்தருளல் வேண்டும்-மனங்களிப்பு கொண்டு கிருபைசெய்தருளவேண்டும், என்னவனே-என்னை யாட்கொண்டவனே, யென்றுணையே-என்னுடைய உயிர்த்துணையே, என்னுறவே-என்னுடைய பந்துசனங்களின் பரமானவனே, என்னை யீன்றவனே-யென்னை பெற்றவனே, யென்றாயே-என்னுடைய மாதாவிலும்கருணையுடைய தாயே, யென் குருவே யெனது-எனக்கு வழிகாட்டி அருளிய சற்குருவே என்னுடைய, மன்னவனே-அரசனே, என்னுடைய வாழ்முதலே-நான் வாழுகிறதற்காகவேண்டி சுவாசத்தை தரும்படியான முதலுடையவனே, யென்கண்மாமணியே-என்னுடைய உயிருக்குயிரான நவமணியே, மணி மிடற்றோர் மாணிக்கமலையே-நவரத்தினங்கள் குவியலாகியிராநின்ற ஓர் மாணிக்கங்களால் நிறைந்த மலையே, அன்னவனே-கடல்சூழ்ந்த உலகத்திற்கு இராஜனாகிய கடவுளே, அம்பலத்துள்-சித்திரக்கூடமாகிய வெளியில், ஆடுகின்ற வமுதே-ஆடிவராநின்ற உயிர்தரு மருந்தாகிய அமுதமே, யாறணிந்தசடையா-ஆறாகிய கங்கையை சிரமகுடத்திலணிந்திராநின்ற சடையை யுடையவனே, யான்-நின் அருளுக்கு வழிபார்த்துக்கொண்டிருக்கும்படியாகிய யான், வேறு துணையிலனே-உன்னுடைய துணையின்றி மற்றொருவர்களுடைய துணையில்லாதவனாக இருக்கின்றேன் ஆதலால் பொறுத்தருளல் வேண்டும். (எ-று.) (ங)

முனிந்துரைத்தேன் பிழைகளெலாம் மனம் பொறுத்தல்
தினதயாநிதியே மெய்ஞ்ஞான சபாபதியே, [வேண்டு

Koviloor Digital Library

புனைந்துரைப்பாரகத்தொன்றும் புறத்தொன்று நினைத்தே
பொய்யுலகராங்கவர்போற் புனைந்துரைத்தேனலனேன்,
இனைந்திருந்தியெனை யாட்கொண்டென்னு ளமர்ந்தெனை
யெவ்வுலகுந் தொழநிலைமேலேற்றிய சற்குருவே, [த்தா
கனைந்தருளிற் சுகவமுதங் களித்தளித்த நிறைவே
கருணை நடத்தரசே யென்கண்ணிலங்குமணியே.

(இ-ள்) மெய்ஞ்ஞான சபாபதியே-உண்மையாகிய ஞானமென்னும் பீடத்தின் கண் சபாநாயகமாய் வீற்றிருக்கும்படியாகிய தலைவரே, சினந்துரைத்தேன்-என்னுடையமனம் பேதலித்த ஓர் கோபத்தினால் அடாத சொற்களை யெல்லாம் சொல்லிவிட்டேன், பிழைகளெல்லாம்-அப்படிச் சொல்லிய குற்றங்கள் யாவையும், மனம்பொறுத்தல் வேண்டும், அதைக் குற்றமாக கொள்ளாமல்படி க்ஷமிக்கவேண்டும். நிதயாநிதியே-என்று கேட்டுக்கொள்கிறேன் இரப்போர்களுக்கு கிருபையுடைய பொக்கிஷமே, புனைந்துரைப்பாரகத் தொன்றும்-சிறியதை பெரியதாக்கிச்சொல்லும்படியானவர்களுடைய மனதிலொன்றும், புறத்தொன்று நினைத்தே-வாக்கிலொன்றுமாக எண்ணங்கொண்ட பொய்யுலகராங்கவர்போல்-நிலையற்ற உலகத்தை மெய்யென்று நம்பினவர்கள்போல, புனைந்துரைத்தேனலனேன் - வாக்கிலொன்று மனதிலொன்றுமாக பொறுக்கி யான் சொல்லவில்லையே, இனைந்திருந்தி-அப்படி இருந்தபோதிலும் அந்த எண்ணங்கொண்ட என்னைசெம்மையாய்த்திருத்தி, எனையாட்கொண்டு-என்னையும்முடையதொண்-டனாப் பாவித்து, என்னுள்ளமர்ந்தெனைத்தான்- என்னுடைய ஞானாகாரத்தின்கண் அமர்ந்து என்னையே, யெவ்வுலகும்- எல்லாவுயிர்களும், தொழநிலைமேலேற்றியசற்குருவே-உன்னுடைய மெய்ஞ்ஞான அடியானென்று என்னைவணங்கும் படியானமேல்நிலைக்குயேற்றி

Koviloor Digital Library

வைத்த நன்மையானருளுவே, கனந்தரு - மேன்மைதரும்படியனவாகிய சிற்சுகவமுதம்-ஞானமாகிய சுகவமுதத்தை, களித்தளித்தநிறைவே- சந்தோஷமாககொடுத்தபூரணமே, கருணைநடத்தரசே- கிருபைதங்கும்படியாகிய கமலத்தின்கண்நடனஞ்செய்கின்றஇராஜனே, என்- என்னுடைய, கண்ணிலங்குமணியே - கண்ணில் இலங்காநின்ற-கண்ணின்மணியே (எ-று.) (௬)

ஊடுதற்கோரிடங்காணே னுவக்குமிடமுளதோ
 வுன்னிடமுமென்னிடமு மோரிடமாதலினால்,
வாடுதற்குநேர்ந்திடிலோ மாட்டாமையாலு
 மனம்பிடியாமையினாலுஞ் சினந்துரைப்பேன்சிலவே,
கூடுதற்குவல்லவனீ கூட்டியெனைக்கொண்டே
 குலம்பேசவேண்டாமென் குறிப்பறிந்தாய்,
நாடுதற்கிங்கென்னாலே முடியாதுநீயே
 நாடிவித்துக் கொண்டருள்வாய் ஞானசபாபதியே.

(இ-ள்.) ஊடுதற்கோரிடங்காணேன்-நடுவில்புகுந்து பார்ப்பதற்கு எந்தவிடமும்தெரியவில்லை, உவக்குமிடமுளதோ-ஆகலால்நீமனப்பிரியப்படும்படியானஇடம வேறுஏதேனுமிருக்கின்றதோ, உன்னிடமுமென்னிடமுமோரிடமாதலினால்-அதாவது நீரும்யானும் ஒன்றாகி ஒரேயிடமாயிருப்பதால் வேறொன்றுநடுவில்புகுந்துபார்க்க வேறுஇடம்இல்லை, வாடுதற்குநேர்ந்திடிலோ - ஏதாவதுகுற்றம் செய்யுங்காலம் நேர்ந்திட்டபொழுது, மாட்டாமையாலும் - செய்யாதிருப்பதினாலும் அதாவதுசெய்வதற்கு முடியாதினாலும், மனம்பிடியாமையினாலும்-மனமானது அதன்மேல் பற்றைவிட்டுபிடியாமலிருப்பதினாலும், சினந்துரைப்பேன் சிலவே-கோபங்கொண்டு சிலவற்றைசொல்லுவேன், கூடுதற்குவல்லவன்நீ - கூட்டிக்கொள்

Koviloor Digital Library

வதற்குவல்லவனாகியநீ, கூட்டியெனைக்கொண்டு - என்னை உ
ன்னுடைய தொண்டர்களில் கூட்டிக்கொண்டு, குலம்பேசவே
ண்டாம்-அர்த்தசெயல் இப்படி இந்தகாரியம் இப்படியென்று
குலம்கோத்திரம் பேசவேவேண்டாம், யென்குறிப்பனைத்தும்
அறிந்தாய்-யான் இன்னகுறிப்புடையவனென்பது யாவையும
றிந்துவிட்டாய்ஆதலால், நாடுதற்கிங்கென்னாலே - உன்னைநா
டுவதற்கு என்றால், முடியாது - முடியாமலிருக்கிறபடியால்,
நீயோநாடுவித்துக்கொண்டருள்வாய் - வல்லவனாகியநீயே என்
னைஉம்மைநாடும்படியாக செய்துவைத்துக்கொண்டு கிருபைத
ருவாய், ஞானசபாபதியே - ஞானமாகியகமலத்தின்கண்ஆச
னத்தில்சபாநாயகராய் வீற்றிருக்கும்பதியே. (எ-று.) (௫)

என்னுளநீகலந்து கொண்டாயுன்னுளநான்கலந்தே
னென்செயலுன் செயலுன்றனிருஞ்செயலென்செயலே,
பின்னுளநான்பிதற்றலெல்லாம் வேறுகுறித்தெனைநீ
பிழையேற்ற நினைத்திடலோபெருவழக்கிட்டிடுவேன்,
அன்னையினுந்தயவுடையா யப்பனெனக்காரு
யன்றியுமென்னாருயிருக் காருயிராய்நிறைந்தாய்,
மன்றுமலிப்போது நடஞ்செய்மன்னவனேகருணை
மாநிதியேயெனக்கருள்வாய்மனக்கலக்கந்தவிர்த்தே.

(இ-ள்) மன்றுமலிப்போது- ஆத்மாநிற்கும்படியான கமலத்தி
ன்போதுவில், நடஞ்செய்மன்னவனே - நடனஞ்செய்யாநி
ன்ற எனதுஇறைவனே, என்னுளநீகலந்து கொண்டாய்-என்
னுடைய உள்ளத்தில் நீசேர்ந்துகொண்டாய், உன்னுளநான்க
லந்தேன் - உன்னுடைய உள்ளமாகிய மனதில் நான் சேர்ந்து
கொண்டதால், னென்செயலுன்செயல்-நான் செய்யாநிற்
கும் செயல்களியாவையும் உன் செயல்களே, உன்றனிருஞ்
செயல்-நீசெய்யும்படியான செயல்களெல்லாம்,என்செயலே
-அவைகள் நான் செய்யும்படியான செயல்களே, பின்னுள

Koviloor Digital Library

நான் பிதற்றலெலாம்- அதற்கு பின்பு நான் சொல்லும்படி யானவைகளெல்லாம், வேறுகுறித்தெனை-நான் வேறுநீ வேறு என்று என்னை பிரித்துக்காட்டி, நீ பிழையேற்ற நினைத்திடி லோ-அது தப்பு இது குற்றம் என்று குற்றங்களை காட்ட நீர் நினைப்பீராகில், பெருவழக்கிட்டிடுவேன்-இதைப்பற்றிநியா யம பேசுவதற்காக பெரிய வியாச்சியம் செய்து விடுவேன், அன்னையினுந் தயவுடையாய்- தாயைக்காட்டிலும் அதிகமா கிய கிருபையுடையவனே, அப்பனெனக்கானாய்- எனக்குத் தகப்பனாகியும் நின்றாய், அன்றியும்-இதல்லாமலும், என்னு ருயிர்க்கு- என்னுடைய சொந்தமான உயிருக்கு ஆருயிராய், நிறைந்தாய்- அதிக சோழமை யான உயிராக நிறைந்தாய், மனக்கலக்கந் தவிர்த்தே - இப்படி இருந்திருக்கும் நீ என்னு டைய மனதின் கண்ணிராநின்ற கலக்கத்தை நீக்கி, யெனக் கருள்வாய் - உன்னுடைய கிருபையாகிய பரிபூரணத்தை யெனக்கு தந்து கிருபை செய்வாய், கருணைமாநிதியே-கிருபை பொருந்திய பெரிய பொக்கிஷமாகிய கடவுளே (எ-று.) (௬)

எணங்குறியே னியல்குறியேனெது நினையாதே
என்பாட்டுக் கிருந்தேனிங்கெனை வலிந்து நீயே,
மணங்குறித்துக்கொண்டாய் நீகொண்டது தொட்டெனது
மனம் வேறுபட்டதில்லை மாட்டாமையாலே,
சணங்குறித்துச் சிலபுகன்றேன்புகன்ற மொழியெனது
கருத்திலில்லையுன்னுடைய கருத்திலுண்டோ உன்மேல்,
குணங்குறிப்பான் குற்றமொன்றும் குறியானென்றற
கூறிடுமெவ்வார்த்தையின்று யாறிடுமோயமசே. [வோர்

(இ-ள்) என்னை மணந்து கொண்ட அரசாகிய கடவுளே! எணங்குறியேன் - உன்னை மணஞ்செய்ய வேண்டுமென்கிற எண்ணமில்லாமலும், இயல்குறியேன்-இன்னம் அதினுடைய

Koviloor Digital Library

சாயலும் நினைக்காமலும், எதும் நினையாது-ஒன்றும் நினையாமல்படி., என்பாட்டிருந்தேன் - என்னுடைய வேலையின்பேரில நான் இருக்க, இக்கெனைவிந்து நீயே-என்னிடத்திற்கு என்விருப்பமில்லாமல் நீர் வந்து சட்டாயம் செய்து, மணங்குறித்துக் கொண்டாய்-கல்லியாணஞ் செய்வதற்காக என்னை நிச்சியத்துக் கொண்டாய், அதாவது என்னுள் கலந்துகொண்டாய், நீ கொண்டது தொட்டெனது-அப்படிகலந்து கொண்டது முதலிதுவரைக்கும் என்னுடைய, மனம் வேறுபட்டதில்லை-மனமானது வேறொருவஸ்த்துவளவில் ஆசைபட்டதில்லை மாட்டாமையாலே - அப்படி நீர்வந்து கொள்ளாததாலே, கணங்குறித்து - காலம் அதிகமானதை எண்ணி, சிலபுகன்றேன்-சிலவாக்கியங்களைச் சொன்னேன், புகன்றமொழி-அப்படியான் சொன்னவார்த்தைகளானவைஇன்னவையென்று, எனதுகருத்திலில்லை-என்னுடையகவனத்தில்லாமல்படி மறந்துவிட்டேன், உன்னுடைய கருத்திலுண்டோ - அந்தவார்த்தைகளை யேதாவது மனதில் கவனமாக்கி வைத்துக் கொண்டு மணஞ்செய்யாமலிருக்கிறாயா, உண்டேல்-அப்படி இருக்குமாகில், குணக்குறிப்பான்-மேலாம்பரமான கடவுள் - நல்லவார்த்தைகளை மட்டும் குறிப்பான்,குற்றமொன்றும் குறியான்-அடியார்கள் செய்யும குற்றங்களைவிட்டுவிடுவான், என்றறவோர்கூறிடும்-என்று துறவோர் சொல்லும்படியான, வார்த்தையின்று-வார்த்தைகளானவை இன்று உமக்கும் எனக்கும் இடையில், மாறிடுமோ அரசே - மாறிப்போகுமோ எனையாட்கொண்டமேலாம் பரமான அரசரே.(எ-று.)(எ)

மனம்பிடியாமையினாலோ மாட்டாமையாலோ
மறதியினாலோ வெனது வருத்தமதனாலோ,
தினம்பிடியாமயக்காலோ திகைப்பாலோ பிறர்மேற்
சினத்தாலோ வெதனாலோ சிலபுகன்றேனிதனை,

Koviloor Digital Library

சினம்பிடியாத்தேவர் திருவுளம்பிடியாதெனவே
சிந்தைகளித்திருக்கின்றேன் திருவுளத்தையறியேன்,
இனம்பிடியாமையுமுண்டோ உண்டெனிலன்புடையா
ரேசல்புகழ்பேசலென வியம்புதலென்னுலகே.

(இ-ள்) மனம்பிடியாமையினாலோ - கடவுளே உன்னுடைய கிருபையானது சீக்கிரம் வரவில்லையென்று மனம் பிடியாதிருப்பதினாலோ, மாட்டாமையாலோ - செய்வதற்கு சோம்பேரித்தனம் பட்டதினாலோ, மறதியினாலோ-மறந்து விட்டதினாலோ, எனது வருத்தமதனாலோ-எனக்கிருக்கும் படியான பலவித வருத்தங்களாலோ, தினம்பிடியாமயக்காலோ-தினந்தோறும் உன்னுடைய காரியத்தின்மேல் நாட்டங் கொள்ளாத உன்மதத்தினாலோ, திகைப்பாலோ-மயக்கத்தாலோ, பிறர்மேல்-மற்றவர்கள் மேலுடைய, சினத்தாலோ கோபத்தினாலோ, எதனாலோ-மற்ற யெந்தகாரணத்தினாலோ, சில புகன்றேனிதனை-சில வார்த்தைகள் சொல்லிவிட்டேன் அவ்வார்த்தைகளை, சினம்பிடியாத்தேவர் - கோபங்கொள்ளாத தேவரீராகிய தங்களுடைய, திருவுளம் பிடியாதெனவே-திருவுளமானது அதை குற்றமாககொள்ளாதென்று, சிந்தைகளித்திருக்கின்றேன் - மனச்சந்தோஷமுற்றிருக்கின்றேன், திருவுளத்தையறியேன்-தங்களின் திருவுளம் யென்னமாயிருக்கின்றதோ யென்பதை அறியமாட்டேன், இனம் பிடியாமையுமுண்டோ-இன்னம் தங்களுடைய மனமானது என்னைப் பிடிக்காமலு மிருக்குமோ, உண்டெனில்-அப்படி இருக்குமாகில், அன்புடையாரேசல்-கடவுளுடைய அன்பர் சொல்லும்படியான வசை மொழிகளானவை, புகழ்பேசலென-புகழ்கின்ற வார்த்தைகளாக இருக்குமென்று, வியம்புதலென்னுலகே-நானிலாநின்ற இவ்வுலகத்தோர்கள் சொல்லுகின்றது பொய்யாகுமோ பொய்யாகாது. (எ-று.) (அ)

Koviloor Digital Library

நாயகரே யுமது வசநானிருக்கின்றதுபோல்
நாடிய தத்துவத்தோழி நங்கையரென்வசந்தே,
மேயவராகாமையி லவர்மேலங்கெழுந்த
வெகுளியினாற் சிலபுகன்றேன் வேறுநினைத்தறியேன்,
தாயவரே வெறுப்புவரில் விதிவெறுக்கவென்றார்
சூழவிதித்தாரை வெறுத்திடுதலவர்துணிவே,
நீயவராயினுங்குற்றங் குறியாது புகன்றாற்
றீமொழியன்றெனத்தேவர் செப்பியதுமுளதே.

(இ-ள்) நாயகரே-எனது தலைவரே, யுமதுவசம்-உம்முடைய கைவசமாக, நானிருக்கின்றது போல்-நான் அடங்கி உமது சொற்படி நடப்பதுபோல, நாடியதத்துவத்தோழி-நாடும்படியான தத்துவமென்னும் புத்தியாகிய தொழியென்னும், நங்கையரென்வசந்தே-பெண்ணை எனக்கடங்கும்படியாக என் வசமாய், மேயவராகாமையினால்-இல்லர்ததினால், அவர் மேலங்கெழுந்த வெகுளியினால்-அந்த ஒரு காரியத்தின் மேலெழுந்த கோபத்தினால், சிலபுகன்றேன்-சில வார்த்தைகளைச் சொன்னேன், வேறு நினைத்தறியேன்-இது தவிரவேறொன்றையும் நினைத்தறியமாட்டேன், தாயவரே-துப்புரவான மேலாம் பரமானவர்கள், வெறுப்புவரில்-உனக்கு வெறுப்பு வருங்காலத்தில், விதிவெறுக்க வென்றார்-உனக்கு கட்டளையிட்டகாரணமாகிய விதியைவெறுக்கும்படி யாகச்சொன்னார்கள், சூழவிதித்தாரை-அதுபோல் சூழும்படியாக விதித்தவரை வெறுத்திடு தலவர் துணிவே-வெறுக்கவேண்டுமென்பது அவர்களின் துணிவாயிருக்கிறது. இன்னம், நீயவராயினும்-கேடர்களாயிருந்த போதிலும், குற்றங்குறியாது-இது கெடுதியென்று தெரியாமல்படிக்கு, புகன்றால்-சொல்லுவார்களாகில், நீமொழியன்றென-அவ்வார்த்தை கடவுளிடம்

Koviloor Digital Library

கெட்டமொழியாக மட்டாதுயென்று, தேவர்-உயர்ந்தோர் கள்,செப்பியதுமுளதே-சொல்லிய வாக்கியமும் இருக்கின்ற படியால் குற்றத்தைகுணமாக்கல் நீதியோ. (எ-று) (கூ)

குற்றமொரு சிறிதெனினும் குறித்தறியேன் வேறோர்
குறையதனாற் சிலபுகன்றேன் குறித்தறியேன் மீட்டும்,
சற்றுமனம் வேறுபட்டதில்லை கண்டீரெனது
சாமியும் மேலாணை பொரு சதுருநினைந்தறியேன்,
பெற்றவளு முற்றவருஞ் சுற்றமு நீரென்றே
பிடித்திருக்கின்றேன் பிறிதோர் வெடிப்புமுறைத்தறி
இற்றை தொடுத்தென்னளவில் வேறு நினையாதி [யேன்,
ரென்னுடைய நாயகரே யென்னாசையிதுவே.

(இ-ள்) குற்றமொரு சிறிதெனினும்-கடவுளே குற்றங்களில் ஒரு சிறிய அளவாகிலும், குறித்தறியேன்-அடையாளுஞ் செய்து அறியமாட்டேன், வேறோர்குறையதனால்-வேறே ஒரு குறைவுண்டு அந்த குறைவினால், சில புகன்றேன்-சிலவார்த்தைகளை சொன்னேன் அப்படி சொல்லினும், குறித்தறியேன் அவ்வார்த்தை இன்னதுதான் யென்று அறியமாட்டேன், மீட்டும்-அப்படி இருந்தாலும், மற்று மனம் வேறுபட்டதில்லை-கொஞ்சமாவது என் மனம் வேறாகவில்லையென்று, காண்பீர்-பார்த்து அறிந்து கொண்டீர், எனதுசாமியும்மேல் - என்னுடைய கடவுளே உம்பேரில், ஆணை யொரு சதுரம்-சத்தியமாக வந்த ஒரு பேராசையும் நினைந்தறியேன்-நினைத்தறியமாட்டேன்,பெற்றவளுமுற்றவரும்-என்னைப்பெற்றதாயும் உற்றசிநேகிதர்களும், நீரென்றே-யெல்லாம் நீர்என்று, பிடித்திருக்கின்றேன்-நம்பியிருக்கின்றேன், பிறிதோர்-இதைத்தவிர வேறே ஒரு, வெடிப்புமுரைத்தறியேன்-வெறுப்பாய எந்தசங்கதியும் சொல்லி அறியமாட்டேன், இற்றை தொடுத்தென்ன

Koviloor Digital Library

ளயில்-இன்றுதொடுத்துயென்மேல், வேறுநினையாதீர்-வேறு எந்த ஒரு கவனங்கொள்ளாமல்படி என் குற்றத்தை மன்னிப்பீர், என்னுடையநாயகரே - என்னுடைய தலைமைத் தனம் பெற்றயெஜமானே, யென்றனாசையிதுவே-என்னுடைய ஆசையும் இதுதான். (எ-று) (ம)

திருச்சிற்றபலம்

எட்டாவது திருவருட்பெருமை முற்றிற்று.

பாடல் விருத்தம்-ம ஆக விருத்தம் உரை கூமஙஙு

ஒன்பதாவது.

பிரிவாற்றாமை.

——:o:o:o:——

எழுசீரடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

செய்வகையறியேன்மன்றுண்மாமணிநின்
  திருவுளக்குறிப்பையுந்தெரியேன்,
உய்வகையறியேனுணர்விலேனந்தோ
  வுறுகண்மேலுறக்கொலென்றுலைந்தேன்,
மெய்வகையுடையேன் வேறெவர்க்குரைப்பேன்
  வினையனேனென்செயவிரைகேன்,
பொய்வகையுடையனெனக்களம்புகுகேன்
  புலையனேன் புகலறியேனே.

Koviloor Digital Library

(இ-ள்) செய்வகையறியேன் - செய்யும்படியாகிய காரியம் இன்னதென்று தெரியமாட்டேன், மன்றமண்-தெய்வீகமாகிய, மாமணி-பெரிய மணியே, நின் திருவுளக்குறிப்பையும்-உன்னுடைய திருவுளத்தின் இஷ்டம் இன்னதுதான் என்கிற ஒரு அடையாளத்தையும், தெரியேன்-தெரிந்து கொள்ள முடியவில்லை, உய்வகையறியேன்-ஈடேற்றம் பெறும்படியான வழியின்னதென்றறியமாட்டேன், உணர்விலேன் - யாதொருஉணர்ச்சியும் இல்லாதவனாயினேன், அந்தோ - ஐயோ வறுகண்மேல்-பயம் தரித்திரம் துன்பம் முதலியவற்றின் மேல், உருக் கோலென்றுலைந்தேன் - மேல்சாட்டியவைகள் மறுபடியும் விழுமென்று மனத்தைக்கலக்கினவனாக ஆகிவிட்டேன், மெய்வகையுடையேன்-மெய்யாகிய உன்னுடைய காரியமாகிய வகைகள் அடையவில்லை, வேறெவர்க்குரைப்பேன்-வேறே யாவர்க்கு இக்காரியங்கள் இன்னதாய் விட்டதென்று சொல்லட்டும், வினையனேன்-தீவினைப் பட்டவனாகிய நான், என் செய்ய - என்ன செய்வதற்காக வேண்டி, விரைகேன்-அவசரப்படட்டும், பொய் வகை யுடையேன் - பொய்யாகிய காரியங்கள் யாவயும் சொந்தமாகக் கொண்டவனாகிய நான், யெங்கனம்புகுவேன்-யெவ்விடம் போய் சொலலட்டும், புலையனேன்-சண்டாளனாகிய நான், புகலறியேனே - வேறு வேறு இடம் தஞ்சம் புகுதல் அறியமாட்டேன் (எ-று) (௪)

அறிவிலே னறிந்தார்க் கடிப்பணிபுரியேன்
அச்சமுமவலமுமுடையேன்,
செறிவிலேன் பொதுவாந்தெய்வ நீநினது
திருவுளத் தெனைநினையாயேல்,
எறிவிலேன் சிறியேனெங்கனம் புகுவே
னென்செய்வேன் யார்துணை யென்பேன்,

Koviloor Digital Library

பிரிவிலேன் பிரிந்தா லுயிர்தரிக் கலெனென்
பிழைபொறுத் தருள்வதுன் கடனே.

(இ-ள்) அறிவிலேன்-எந்தவிதமாகிய ஒருபுத்தியுமில்லாதயான், அறிந்தார்கு - கடவுளே உன்னை யறிந்தவர்களுக்கு, அடிபணிபுரியேன்-ஏவல் முதலிய தொண்டு செய்து சற்றுக் கொள்ள கூடாதவன், அச்சமும்-இன்னம் பயமும், அவலமுமுடையேன்-விசனத்தையுடையவன், செறிவிலேன் குணமில்லாதவன், பொதுவாந்தெய்வநீ- எச்சமயத்திற்கும் எவ்வுலகத்திற்கும் பொதுவாகிய தெய்வமென்னும் கடவுளாகிய நீ, நினது-உன்னுடைய, திருவுளத்தெனை-திருவுளமாகிய சித்தத்தின்கண் என்னை, நீக்கியாயேல் - சிந்திக்காவிட்டால், எறிவிலேன் - குறிப்பில்லாதவனாகிவிடுவேன், சிறியேன்-சிறியேனாகிய நான், எங்ஙனம்புகுவேன்-எவ்விடம் போய்அடைக்கலம் புகுவேன், என் செய்வேன் - என்னத்தைசெய்வேன், யார் துணை யென்பேன் - எவர் துணை யென்று கூறுவேன், பிரிவிலேன்யான்-யான்உன்னைவிட்டு பிரியமாட்டேன், பிரிந்தால்-அப்படி உன்னை விட்டுபிரிப்பிராகில், உயிர்தரிக்கிலன்-உயிர் தரித்திருக்கமாட்டேன் ஆதலால், என் பிழை-என்னுடைய குற்றங்கள் யாவையும், பொறுத்தருள்வதுன்கடனே க்ஷமித்து கிருபைசெய்வது உன் மேல் பாரமாகும் (எ-று) (உ)

உன் கடனடியேற் கருள வென்றுணர்ந்தே
னுடல் பொருளாவியு முனக்கே,
பின் கடனின்றிக் கொடுத்தனன் கொடுத்த
பின்னு நான்றளருதலழகோ,
என் கடன்புரிவேன் யார்க்கெடுத்துரைப்பே
னென்செய்வேன் யார் துணை யென்பேன்,
முன் கடன்பட்டார் போன்மனக்கலக்க
முறுகிலோர் கணந்தரியேனே,

Koviloor Digital Library

(இ-ள்) உன்கடன்- கடவுளே எனக்கு உன்மேலிருக்கும் கடனானது, அடியேற்கு-அடியேனாகிய எனக்கு, அருளவென்றுணர்ந்தே-உன்னுடைய கிருபையைக் கொடுத்து அருளுவது தான் யென்று அறிந்தேன், உடல் பொருளாவியுமுனக்கே-என்னுடைய உடலும் இன்னம் உடலைச் சேர்ந்த உயிரும் என்னுடையபொருளும் உனக்கே சொந்தமாக, பின் கடனின்றி-அதை யெனக்கு தரும்படியாகிய கைமாற்றும் கடனில்லாமல், கொடுத்தனன்-அதைக் கொடுத்துவிட்டேன், கொடுத்த பின்னும்-அப்படி உனக்கே சொந்தமாக கொடுத்த பின்பு, நான் றளருதலழகோ-நீர் அதை ஆண்டனுபவிக்கும்படி யெடுத்துக் கொள்ள நான் தளர்ந்திருந்தலழகாக மாட்டாது ஆதலால், என்கடன் புரிவேன் - என்னுடைய கடனாகிய உனக்குக் கொடுத்ததை இப்போதும் கொடுக்க சித்தமாயிருப்பேன், யார்க் கெடுத்துரைப்பேன்-அப்படி கொடுத்ததை வாங்கிக் கொள்ளாமல் இருந்தால் இந்த சங்கதியை யார்க்கு சொல்லட்டும், யென்செய்வேன்-யென்ன செய்யட்டும், யார் துணை யென்பேன்-வேறே எவரை துணை கொள்ளுவேன் எவருமில்லையே அப்படி இருக்க, முன்கடன் பட்டார்போன்-முன்னடியாக கடன்பட்டவர்கள் பின்னும கடன் வாங்கவாவது கடன்கேட்பார்களென்றுவது மறைவதுபோல, மனங்கலங்கி-மனமானது கலங்கி, முறிதல்-முறித்துவிடும்படியான ஓர் செயலைக்கண்டு, ஓர் கணந்தரியேனே-ஒரு நிமிஷநேரமாவது தரித்திருக்க மாட்டேன்.(எ-று) (ரு)

தரித்திடேன் சிறிதுந்தரித்திடேனெனது
　தளர்ச்சியுந் துன்பமுந் தவிர்த்தே,
தெரித்திடலனைத்துந் தெரிந்திடல்வேண்டும்
　தெரிந்திடா யெனிலிடரனைத்தா,

Koviloor Digital Library

னெரிந்திடுமந்தோ வென்செய்வேனெங்கே
யெய்துகேன் யார்துணையென்பேன்,
திரிந்த நெஞ்சகத்தேன் சரித்திரமனைத்துந்
திருவுளந் தெரிந்ததுதானே.

(இ-ள்) எனை யாண்டுகொண்ட ஒப்பற்ற கடவுளே! எனை கைவிடுவாயாகில், தரித்திடேன் சிறிதும்-கொஞ்ச நேரமாவது பூமியின் கண் தரித்திருக்கமாட்டேன், தரித்திடேன் யெனது-கட்டாயம் இருக்கமாட்டேனாதலால் யென்னுடைய, தளர்ச்சியும்-சோர்வடைந்திருப்பதையும், துன்பமும்-விசனமடைந்திருப்பதையும், தவிர்த்து-நீக்கி, தெரித்திட லனைத்தும்-கொழிக்கும்படியாகிய கோதுகள் யாவற்றையும், தெரிந்திடல் வேண்டும்-யென்னைவிட்டு அப்புறப்படுத்தவேண்டும், தெரித்திடாயெனில்-அப்படி நீக்கிவிடாவிட்டால், இடர் யனைத்தான்-இடைஞ்சல்களாகிய துன்பங்கள் யாவும், எரிந்திடுமந்தோ-ஐயோ என்னை தகித்துவிடுமே, யென்செய்வேன்-ஆதலால் அதற்கென்னசெய்வேன், யெங்கே யெய்துகேன்-எவ்விடம் செல்லுவேன், யார்துணை யென்பேன்-அப்படி யெரிக்கப்பட்டகாலத்தில் யாரைத் துணைகொள்வேன், திரித்த நெஞ்சகத்தேன்-மாறுபட்டிராநின்ற நெஞ்சமாகிய வீட்டையுடையவனுடைய சரித்திரமனைத்தும் - பூர்வோத்திரமாகிய சமாச்சாரங்கள் யாவும், திருவுளந்தெரிந்ததுதானே-உம்முடைய சமுகம் யாவும் தெரிந்ததாயிருக்கிறது. (எ-று) (௪)

தானெனைப்புணருந் தருணமீதெனவே
சத்தியமுணர்ந்தனன் தனித்தே,
தேனுறக்கருதி யிருக்கின்றேனினிநின்
றிருவுளந்தெரிந்த தெந்தாயே,

Koviloor Digital Library

ஆனெனக்கூவி யணைந்திடல் வேண்டு
மரைக்கணமாயினுந் தாழ்க்கில்,
நானிருப்பறியேன் றிருச்சிற்றம்பலத்தே
நடம்புரி ஞானநாடகனே.

(இ-ள்) தானெனைப் புணரும்-தானாகிய கடவுளே! நீர் என்னிர் கலக்கவேண்டிய, தருணமீதெனவே-தருதியாகிய காலம் இதுதான் யென்று, சத்தியமுணர்ந்தனன்-சத்திய மாக யான் அறிந்திருக்கிறேன், தனித்தே-நான் சகல அக்கி யானங்கள் யாவற்றையும் விட்டுத் தனித்தவனாக, தேனுறக் கருதி - உன்னுடைய அருளைக்களவு செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டவனாக, இருக்கின்றேனிது நின் - இருக் கின்ற சங்கதியானது உன்னுடைய, திருவுளந் தெரிந்ததெந தாயே-திவ்விய சித்தமானது அறிந்தவிஷயமே ஆதலால் என்னுடைய அன்னையினும்கிருபையுடையதாயே,ஆனெனக் கூவி-என்னை வாவென்று அழைத்து, அணைந்திடல்வேண்டும் சேர்த்துக்கொள்ளவேண்டும், அரைக்கணமாயினுந் தாழ்க் கில்-அரைநிமிஷநேரமாவது தாமதஞ் செய்தால், நானிருப் பறியேன்-நானிருக்கும்படியான இடமானது இன்னதென் றறியமாட்டேன், திருச்சிற்றம்பலத்தே-திவ்வியமாகிய சிறு அம்பலமென்னும் கமலாசனத்தினிடத்தில், நடம்புரி-நட னஞ் செய்யாநின்ற, ஞான நாடகனே-ஞானவிலாசனே. (எ-று) (௫)

ஞானமுமதனு லடையனுபவமும்
நாயினேனுணர்ந்திட வுணர்த்தி,
யீனமுமிடறுந்தவிர்த்தனையந்நா
ளிந்த நாளடியனேனிங்கே,
யூனமொன்றில்லோய் நின்றனைக்கூவி
யுழைக்கின்றே னொரு சிறிதெனினும்,

Koviloor Digital Library

மேனன வினவாதிருத்தலுமழகோ
மிறையு நான் றரிக்கலனினியே.

(இ-ள்) காருண்யம் பொருந்தியிரானின்ற வல்லமெய்க் கடவுளே!, நாயினேன்-நாயினும் கடையானவனாகிய நான், உணர்ந்திட-அறியும்படியாக, ஞானமும்-ஞானமானது இத்தகையதென்றும், அநுபவமும்-அந்த ஞானத்தினால் பெற்றுக்கொள்ளும்படியான அநுபவ சாதனங்களும், உணர்த்தி-அடியேனுக்கு தெரியப்படுத்தி, ஈனமுமிடறுந்த விர்த்தனையக்நாள்-யான் அறியாத பருவமாயிருக்கும்நாளில் எனக்கு வந்துற்ற இழிவையும் ஆபத்தும் நீக்கினாய், இந்த நாளடியனேன்-இப்பொழுது அடியேனாகிய நான், இங்கே-இவ்விடத்தில், யூனமொன்றில் வோய்-யாதொரு பழுதுமில்லாதவனாகிய, நின்றனைக்கூவி-உன் னாமத்தை ஸ்மரணை செய்து கூப்பிட்டு, உழைக்கின்றேன்-கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றேன், ஒரு சிறிதெனினும்-கொஞ்சமாகிய எந்த ஒரு நேரத்திலாவது, ஏனென வினவா-யேனயென்று யென்னைகேட்காமல், இருத்தலுமழகோ-இருப்பதானது உமக்கழகாயிருக்கிறதா?, மிறையுநான்-இப்படிக் கேட்காமல் மௌனமாயிருப்பதல் கடவுளே நான், தரிக்கலனினியே-இனிமேல் தரித்திருக்கமாட்டேன். (எ-று) (கு)

இனிய நற்றுயிலினியவென்னரசே
என்னிருகண்ணினுண் மாமணியே,
கனியென வினிக்குங் கருணையாரமுதே
கனகவம்பலத்துறுங் களிப்பே,
தனியுறுமனமுஞ் சோம்புறு முணர்வுஞ்
சோர்வுறு முகமுங் கொண்டடியேன்,
தனியுளங்கலங்க லழகதோ வெனைத்தான்
றந்தாற் றந்தை நீயலவோ.

Koviloor Digital Library

(இ-ள்) இனிய நற்றாயில்-இனிமையாகிய நல்லதாயை வி—, இனியவென்ன ரசே-இனிமையாகிய என்னுடைய இராஜனே, என்னிரு-என்னுடைய இரண்டு, கண்ணினுள்-கண்ணிற்குள் பார்வையா யிராநின்ற, மாமணியே-அற்புதமாகிய பெரியமணியே, கனியென வினிக்கும்-உன்னருளைக் கண்டவர்களுக்கு தெவிட்டாத கனியைப்போல் ருசிக்கா நின்ற, கருணையா ரமுதே-கருணைபொருந்திய தேவாமிர்தமே, கனகவம்பலத்தறும்-சுயர்பிரகாசமா யிராநின்ற வெளியில் இருக்கும், களிப்பே-ஆனந்தமே, துனியுறும்மனமும்-தளர்வடைந்த மனதையும், சோம்புறு முணர்வும்-சோம்பலுடைய புத்தியும், சோர்வுறுமுகமும்-சோர்ந்திராநின்ற முகந்தையும், கொண்டடியேன்-இம்மாதிரியாகிய விசனங்கொண்ட அடியேனாகிய நான், தனியுளங்கலங்கல்-தனிமைமனம்கலங்கியிருப்பது, அழகதோ-உமக்கு அழகாயிருக்கிறதோ, பெனைத்தான்-என்னை, தந்த-பூமியில் பரிந்துகொடுத்த, நற்றந்தை-நல்ல தகப்பன், நீயலையோ-நீ யல்லவோ. (எ-று) (எ)

தந்தையுந் தாயுங் குருவும் யான்போற்றுஞ்
　சாமியும் பூமியும் பொருளுஞ்,
சொந்த நல்வாழ்வு நேயமுந் துணையுஞ்
　சுற்றமுமுற்று நீயென்றே,
சிந்தையுற்றிங்கே யிருக்கின்றேனிது நின்
　திருவுளந்தெரிந்ததே யெந்தாய்,
நிந்தை செய்யுலகில் யானுளங்கலங்கல்
　நீதியோ நின்னருட்கழகோ.

(இ-ள்) தந்தையுந்தாயும்-எனைப்பெற்றுவளர்த்த தகப்பனுந் தாயும், குருவும் யான்போற்றும்-எனக்கு கற்பித்த

Koviloor Digital Library

ஆசானும் இன்னம் யான் வணங்கும்படியாகிய, சாமியுந்-தெய்வமும், பூமியும் பொருளும்-என்னுடைய பூமிகளும் இன்னம் என்னுடைய ஆஸ்த்தியாகிய பொருளும், சொந்த நல்வாழ்வும்-எனக்கு சொந்தமாகிய நல்லவாழ்வும், நேயமுறுந் துணையும்-இஷ்டமும் இன்னம் எனக்குற்ற துணையும், சுற்றமும்-பந்து மித்திரர்கள் முதலிய, முற்றும், நீயென்றே-யாவும் நீயேயென்று, சிந்தையுற்றிங்கே-இவ்விடத்திலே நினைத்துக்கொண்டு இருக்கின்றேனிதுநின்-இருக்கின்ற சங்கதியானது உன்னுடைய, திருவுளம்-மனதிற்கு, தெரிந்ததே-அறிந்தது தான்-ஆதலால், எந்தாய்-என்னுடைய தந்தையே, நிந்தைசெய்யுலகில்-நிந்தைகள் செய்யும்படி இவ்வுலகத்தில், யானுளங்கலங்கல்-என்னுடைய மனமானது விசனத்தினால் கலங்கி நிற்பது, நீதியோ-உன் செங்கோலுடைய நியாயமோ, நின்னருட்கழகோ-அல்லது நீர் செய்யும்படியான அருளாகியபட்சத்திற் கழகோ தெரிந்திலேன். (எ-று) (அ)

அழகனே ஞானவமுதனே யென்ற
 னப்பனே யம்பலத்தரசே,
குழகனே இன்பக்கொடியுளங்களிக்குங்
 கொழுநனே சுத்தசன்மார்க்கக்,
கழகநேர் நின்றகருணைமாநிதியே
 கடவுளே கடவுளே யென நான்,
பழகநேர்ந்திட்டே னின்னுமிவ்வுலகிற்
 பழங்களுலமுந்துத லழகோ.

(இ-ள்) அழகனே-அழகுகள் யாவும் ஒன்றாய்த் திரண்ட ஒழுங்குடையவனே, ஞான வமுதனே-ஞானத்தின் கண் அமிர்தமாக நின்றவனே, யென்றனப்பனே-எனக்கு தயவு

Koviloor Digital Library

புரிந்தளிக்கும்படியான இன்ப நகப்பனே, அம்பலத்தரசே-சித்திரக்கூடமாகிய சபையின் இராஜனே, குழகனே-அழகுபொருந்திய கடவுளே, இன்பக்கொடி - அகமகிழ்ச்சிக்குகாரணமாகிய உச்சத்தில் கண்டவர்களின், உளங்களிக்கும்-மனங்கள் ஆனந்தமடையும்படியாகிய, கொழுனனே-சுதந்திரமான தலைவனே, கழகநேர்நின்ற-கொஞ்சமாவது குற்றமில்லாதபடி இருக்கும்படியான, சுத்தசன்மார்க்க-நற்பறவு பொருந்தியநீதியானமார்க்கதிற்கு, கருணைமாநிதியே-கிருபை பொருந்தியபெருஞ்செல்வமேயுன்னை, கடவுளே கடவுளே யெனநான்-விடாமல் இரவும்பகலும்கடவுளே கடவுளே யென்று பழகநேர்ந்திட்டேன்-பழகிக்கொண்டே வருகிறேன் ஆதலால் இன்னுமிவ்வுலகில்-அப்படியிருக்க இன்னும் இந்தஉலகத்தில் பழங்கணால்-நான் இன்னம் கைபடவில்லையே என்று விசனத்தினால், அழுங்குதலழகோ-ஆழ்ந்துகிடப்பது உமக்கு அழகுதானோ, தெரியலேன். (எ-று) (௬)

பழம்பிழி மதுரப்பாட்டல வெனினும்
  பத்தரும் பித்தரும் பிதற்றும்,
கிழம்பெறும் பாட்டுங் கேட்பதுன்னுள்ளக்
  கிளர்ச்சியென்றறிந்த நாண்முதலாய்,
வழங்குநின்புகழே பாடுறுகின்றேன்
  மற்றொரு பற்று மிக்கறியேன்,
சழங்குடையுலகிற்ற ளருதலழகோ
  தந்தையுந்தாயு நீயலையோ.

(இ-ள்) பழம்பிழிமதுரம்-இனியபழங்களை பிழிந்து ரசமெடுத்து சாப்பிடுவதில் இனிப்பைத்தருகின்ற களிப்பைப் போன்ற, பாட்டலவெனினும்-யான்பாடுவது அப்படிப்பட்ட இன்பந்தராநின்ற பாட்டல்லாது போனாலும், பத்தரும்

Koviloor Digital Library

-உன்னுடைய எல்லா அடியார்களாகியபக்தர்களும், பித்தரும் -உன்னுடைய ஒளியால் மயக்குற்றிராநின்ற பித்தர்களும், பிறரும்-தங்கள் தங்களின் அனந்தத்தால் மொழியாநிற்கும், இசைப்பெரும்பாட்டும்- ஒசையில்லாது வந்தபடி பாடாநின்ற எந்தபாடல்களும். கேட்பது-கேட்பதானது, உன்னுள்ளக்கி ளர்ச்சி-உன்மனம் சந்தோஷமடைகிறது, என்றறிந்தநாள்மு தலாய்-என்றுநான் தெரிந்துக்கொண்ட நாளிலிருந்து இன் றையவரைக்கும், வழுத்து நின்புகழே-உன்னுடைய புகழை யேவழுத்தமாக, பாடுகின்றேன்-பாடிக்கொண்டிருக்கின்றே னேயல்லாது, மற்றொருபற்று-மற்றஎந்த ஒரு ஆசையையும், இங்ஙனியேன்-எண்ணி அறியமாட்டேன், சழங்குடையுலகில்- மெலியுட்படியாகிய இந்த உலகத்தின்மேல், தளருதலழசோ- யான் இன்னம் என்மேல் கருணை கிடைக்கவில்லையேயென்று என்மனம் தளரவடைவது உமக்கழகோ; தந்தைதாயும்-எ ன்னை பெற்றுவளர்த்த தகப்பனும்தாயும், நீயலையோ-நீயல்ல வாலும் நீர்தான். (எ-று) (௰)

தாயுமென்றொருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம்புரியுச்,
தூயநின்பாதந்துணை யெனப் பிடித்தேன்
றூக்கமுஞ் சோம்பலுந் துயரும்,
மாயையும் வினையு மறைப்புமாணவமும்
வளைத்தெனைப் பிடித்திடல் வழக்கோ,
நாயினேனினியோர் கணந்தரிப்பறியே
னல்லருட் சோதிதந்தருளே.

(இ-ள்) ஞானசபையிலே - ஞானத்திற்கு பீடமாயிருக் கானின்ற பனமன்றும் சபையின் கண், தனி நடம்புரியும்- தனியாக இருந்து நடத்திவராநின்ற, தாயும் என்றொரு

Koviloor Digital Library

மைத் தந்தையும்-என்னைப் பெற்று வளர்த்தாதரிக்காநின்ற தாயும் ஒற்றுமையான என் தந்தையுமாகிய, தயா-டரிசுத்தம் பொருந்திய கடவுளே, நின்பாதம்-உன்னுடைய செம்பொன்னடியானது, துணையெனல் பிடித்தேன்-என்னை ஆதரிக்கும்படியானதென்று துணையாகப் பிடித்தேன், தூக்கமுஞ்சோம்பலுந் துயரும்-அப்படி யிருக்க உன்னடியானாகிய எனக்கு நித்திரையும், சோம்பேரித்தனம், துக்கங்களும், மாயையும் வினையும்-உலகத்திலுள்ள மாய்கைகளும், இன்னம் ஊழ்வினைகளும், மறைப்பு மாணவமும்-நல்விஷயங்கள் மறைதலும் ஆங்கார முதலியவைகள், வளைத்தெனைப் பிடித்திடல்-சூழ்ந்து என்னை பிடித்து உன் கவனத்தை மறக்கச்செய்தல்; வழக்கோ-கடவுளே இதை உம்மிடம் சொல்லிக்கொண்டிருத்தலும் நீ மௌனமாயிருத்தலும் ஆகிய இரண்டுபேரும் இப்படி வழக்கு செய்வதோ நலமாயிருக்கிறது, நாயினேன்-ஆதலால் நாய்க்குணத்தைக்காட்டிலும் குறைவானவனாகிய நான், இனியோர்கணம்-ஒருநிமிஷநேரமாவது, தரிப்பறியேன்-தரித்திருப்பதை அறியமாட்டேன் ஆதலால், நல்லருட்சோதி-உன்னுடைய கடாட்சமாகிய கிருபை பொருந்திய சோதியாகிய உம்மொளியை, தந்தருளே-கொடுத்து கிருபை செய்வாயாக. (எ-று) (கக)

சோதியேஎனை நீ சோதனைதொடங்கிற
சூழுயிர் விடத்தொடங்குவனான்,
நீதியே நிறைநின்றிருவ ருளறிய
நிசழ்த்தினே னிச்சயமிதுவே,
யோதியே யுணர்தற்கரும் பெரும்பொருளே
யுயிர்க்குயிராகிய வொளியே,
யாதியே நடுவே யந்தமேயாதி
நடுவந்தமில்ல தோரறிவே.

Koviloor Digital Library

(இ-ள்) சோதியே-ஒளிவாயிராநின்ற கடவுளே!, எனை நீ-என்னை நீ, சோதனைதொடங்கில் - இன்னம் சோதனை செய்ய துவக்குவீர்களாகில், ஆருயிர்விடத்தொடக்குவனுன்-என்றுடைய உயிரைவிட்டுவிட தொடங்குவேன் ஆதலால், நீதியே நிறை-அழிவில்லாத நீதியுடைய கடவுளே, நின்திருவருளறிய-உன்னுடைய திருவுளம் அறியும்படியாக, அதாவது உன்னுடைய சத்தியமாக, செழுந்திதனே விச்சயமிதுவே-யான் சொல்லிய இதுகள்யாவும் நிச்சயமாக உண்மையே, ஓதியே உணர்தற்கு-சொல்லால் சொல்லி இன்னதென்றறிதற்கு, அரும் பெரும்பொருளே-அருமையாகிய பெரிய பொருளே, உயிர்க்குயிராகிய ஒளியே- என்னுடைய உயிருக்கு ஜீவனாகி யிருக்கும்படியாகிய ஒளியே, ஆதியே நடுவே அந்தமே-துவக்க மந்திய முடிவே, அந்தமேயாதி-இன்னம் கடைசி முதலும், நடுவந்தம்-நடுவும் கடைசியும், இல்லதோரறிவே-இல்லாததாகிய ஓர் அறிவாய் விளங்கி நிற்கும்படியாகிய கடவுளே. (எ-று) (கஉ)

இல்லையுண்டெனு மிவ்விருமையுங் கடந்தோ
 ரியற்லகயினிறைந்த பேரின்பே,
அல்லையுண்டெழுந்த தனிப்பெருஞ் சுடரே
 யம்பலத்தாடல் செய்யமுதே,
வல்லையின்றடியேன் றுயரெலாந்தவிர்த்து
 வழக்குக நின்னருள் வழங்கல்,
நல்லையின்றலது நாளையென்திடலோ
 நானு யிர்தரிக்கிலனரசே.

(இ-ள்) இல்லை யுண்டெனும்-இல்லை உண்டென்று சொல்லும்படியாகிய, இருமையும் கடந்தோர்-இந்த இரண்டு வகையாகிய இம்மை மறுமையையுங் கடந்தவர்களின், இயற்

Koviloor Digital Library

கையினிறைந்த-சுபாவத்தில் நிறைந்திராநின்ற, பேரின்பே-ஆனந்தமே, அல்லையுண்டெழுந்த-இன்பங்கொள்ளப்பருகி யெழுந்து வளர்ந்த, தனிப்பெருஞ் சுடரே-தனிமையாகிய பெரிய ஒளியே, அம்பலத்தாடல் செய்யமுதே-அம்பலமாகிய வெளியில் ஆடிவராநின்ற ப்ரசாதமே, வல்லையின்றடியேன்-வாடியிருக்கும்படியான இந்த அடியேனுடைய, துயரெல்லாந் தவிர்த்து-இன்றையதினத்தில் துக்கங்களெல்லாம் நீக்கி, நின்னருள்-உன்னுடைய அருளை, வழங்குக-கொடுத்துவிடு, வழங்கல்-அப்படி கொடுப்பதானது, நலையின்றலது தவணை இன்றைக்கு அல்லது, நாளையென்றிடிலோ-நாளைக்கு என்று தவணை வைப்பீர்களாகிலோ, நானுயிர்-என்னுடைய உயிரை, தரிக்கிலன்-வைத்திருக்கமாட்டேன், அரசே-இராஜர்கள் யாவரும் புகழும்படியாகிய அரசே. (எ-று) (௧௩)

அரைசெலாம் வழக்குந் தனியரசது நின்
  னருளரசென வறிந்தனன் பின்,
உரைசெய்நின்னருண்மே லுற்றபேராசை
  யுளமெலாமிடங்கொண்ட தெந்தாய்,
வரைசெயா மேன்மேற் பொங்கி வாய்ததும்பி
  வழிகின்ற தென்வசங்கடந்தே,
இறைசெய்யென்னுயிர் தழைக்க வவ்வருளை
  யீந்தருளிறை யிப்போதே.

(இ-ள்) அரைசெலாம் வழக்கும்-இப்பூமண்டலங்களையெல்லாம் இராஜரீகம் செய்யும்படியான அரசுகளில், தனியரசது-தனிமையாகிய இராஜரீகமானது, நின்னருளரசென்-உன்னுடைய அருளாகிய இராஜரீகமானது தான் தனிமையானதென்று, அறிந்தனன்-நான் அறிந்தேன், பின் உரைசெய்-இதற்கு பின்பு உன்னுடைய அரசாட்சியானது

Koviloor Digital Library

இத்தகையதென்று சொல்லச்சொல்ல, நின்னருண்மேலுற்ற பேராசை - உன்னுடைய கிருபையாகிய அருளின்மேல் கொண்ட பெரிய ஆசையானது, உளமெல்லாம்-என்னுடைய உள்ளமெல்லாம், இடங்கொண்ட தெந்தாய-அந்த அருளை யெப்போது பெறலாம் என்கிற ஆசையையே தவிர வேறு ஆசை நிற்க இடமில்லை என்னுடைய நந்தையே ஆதலால், வரைசெயா-இவ்வளவென்று சொல்லமுடியாத எண்ணமானது, மென்மேற் பொங்கி-மேலும் மேலும் அந்த எண்ணமானது பொங்கி, வாய்ததும்பி-அந்த மனமென்னும் பாண்டத்திலிருந்து வழிந்து, வழிகின்றதென் வசங்கடந்தே-யென்னுடைய வசத்திலில்லாமல் வடிந்துகொண்டிருக்கின்றது ஆதலால், இரைசெய்யென்னுவி-அருளாகிய ஆகாரங்கேட்கும்படியான என்னுடைய உயிரானது, தழைக்க-வளரும்படியாக, அவ்வருளை-அது கேட்டபடியே அந்த அருளை, இன்றை-இன்றையில், இப்போதே-இந்த நேரத்திலே, ஈந்தருள்-கொடுத்து கிருபைசெய். (எ-று) (கசா)

போதெலாம் வீணிற் போக்கியேமாந்த
  புழுத்தலைப் புலையர்கள் புணர்க்குஞ்,
சூதெலாங் கேட்டுந் தொறமுளைப் பரவுந்
  தூயர்கள் மனமது தளங்கி,
தாதெலாங் கலக்கத் தளருதலழகோ
  தனியருட் சோதியாலந்த,
வாதெலாந் தவிர்த்துச் சுத்த சன்மார்க்கம்
  வழங்குவித்தருளுக விரைந்தே.

(இ-ள். போதெலாம் வீணில்-காலங்களாகிய வயதுகளெல்லாம் விருதாவிற் போக்கி, யேமாந்த-கழித்துவிட்டு ஏமாந்திருக்கும்படியான, புழுத்தலை புலையர்கள் - ஒன்றை

Koviloor Digital Library

இரண்டாக புகுந்திரியும்படியாகிய சண்டாளர்கள், புணர்க்குஞ்-சேர்க்கும்படியான சொற்களாகிய, சூதெலாம் கேட்குந்தோறும்-சூதாகிய வார்த்தைகள் யாவும் கேட்கும்பொழுதெல்லாம், உனை பரவுந் தூயர்கள்-உன்னுடைய பரிபூர்ணத்தை விரைக்கும்படியான மேலோர்கள், மனமது தளங்கி-அவர்கள் மனமெல்லாம் பயந்து, தாதெலாங் கலங்கி-சப்த தாதுக்கள் யெல்லாம் கலங்கி, தளருதலழகோ-தளர்ந்து போவது உமக்கழகாயிருக்கிறதோ, தனியருட்சோதியால்-கடவுளே உன்னுடைய தனிமையாக அரசு செய்யும்படியாகிய ஒளியினால், அந்த வாதெலாந் தவிர்த்து-அப்படிப்பட்ட குற்றங்களெல்லாம் நீக்கி, சுத்த சன்மார்க்கம்-சுத்தமாகிய நல்ல மார்க்கத்தை, விரைந்து-சீக்கிரமாக, வழங்குவித்தருளுக-கொடுத்து அருள்செய்வாயாக. (எ-று) (௰௫)

விரைந்து நின்னருளை யீந்திடல் வேண்டும்
விளம்புமித்தருண மென்னுளந்தான்,
கரைந்து காதல்பெருகி மேற்பொங்கிக்
கரையெலாங் கடந்தது கண்டாய்,
வரைந்தெனை மணந்த வள்ளலேயெல்லாம்
வல்ல வாவம்பலவாணா.
திரைந்த வென்னுடம்பைத்திருவுடம்பாக்கித்
திகழ்வித்த சித்தனே சிவனே.

(இ-ள்) விரைந்து நின்னருளை-சீக்கிரமாக உன்னுடைய அருளை, ஈந்திடல் வேண்டும்-கொடுத்திடவேண்டும், விளம்புமித்தருணம்-நான் சொல்லும்படியான இந்த சமயந்தான், என்னுளந்தான்-என்னுடைய மனமானது, கரைந்து அந்த அருளின்மேல் வெகு ஆவலாக உருகாநிற்கிறது, காதல்பெருகி-ஆசை வெள்ளமானது அதிகமாகி, மேல்

Koviloor Digital Library

பொங்கி-தன்னுடைய இடத்தைவிட்டும் எழும்பி, கரையெலாம்-இருபக்கங்களிலுள்ள கரைகளெல்லாம், கடந்தது கண்டாய் - பரப்பியதை நீ யறிந்திருக்கிறாய், வரைந்தெனை-சிறிய வயதில் என்னை, மணந்த வள்ளலே-என்னை உன்னுடைய வனுக்கிக்கொண்ட நாயகனே, செல்லாம் வல்லவா-நினைத்தவையெல்லாம் செய்யக்கூடிய சக்தியை யுடையவா, அம்பலவாணா-சபையின் நிர்மானத்தை யுடையவனே, நிரைந்தவென்னுடம்பை-உன்னுடைய ஆசையின்மேல் தளர்ந்து நரைதிரையாகி வயதுசென்றுபோன என்னுடையஉடம்பை, திருவுடம்பாக்கி-உயர்ந்த திரேகமாக்கி, நிகழ்வித்த-ஈடேற்றமாக்கிவைத்தவனே, சித்தனே சிவனே-மனதையுடையவனே கடவுளே. (எ-று) (சசு)

சிவந்திகழ் கருணைத்திரு நெறிசார்புந்
தெய்வமொன்றே யெனுந்திறமும்,
நவந்தருநிலைகள் சுதந்தரத்தியலும்
நன்மையுநரை திரைமுதலாந்,
துவந்துவந்த விர்த்துச் சுத்தமாகியமுச்
சுகவடிவம் பெறும்பேறுந்,
தவந்திகழெல்லாம் வல்லசித்தியும் நீ
தந்தருள் தருணமீதெனக்கே.

(இ-ள்) சச்சிதானந்த மெய்ஞ்ஞானக்கடவுளே! எனக்கு, சிவந்திகழ் கருணை-உன்னுடைய பிரகாசம் பொருந்திய கருணையென்னும் பட்சமும், திருநெறிசார்பும்-உயர்ந்த உன்னுடைய வழியின் சேர்க்கையும், தெய்வமொன்றே யெனுந்திறமும்-பற்பல தெய்வங்களில்லாமல் ஒரே தெய்வந்தான் யென்று சொல்லும்படியான வலுமையும், நவந்தருநிலைகள்-வெவ்வேறு சுவனங்களைத் தரும்படியான எண்ணங்களானது

Koviloor Digital Library

சுதந்திரத்தியலும்-என்னுடைய சுதந்திரத்தில் அடங்கும்படி யாகவும், நன்மையும்-நலமாகிய காரியங்களைச் செய்யவும், நரைதிரை முதலாய்-மாயை முதலிய பதினெண் குற்றங் களையும் விரிந்திராநின்ற குற்றங்களையும் துவர்துவந்த விர்த்து-வாது சூது முதலியவைகளையும் நீக்கி, சுத்தமாகிய முச்சுகவடிவம்-யாதொரு களங்கமில்லாது மூர்த்தி யிருக்கா நின்ற மூன்று சுகமாகிய வடிவத்தையும், பெறும்பேறும்- பெரிய வரத்தையும், தவர்திகழெலாம்-தவம்செய்து பலி யாநின்ற புண்ணியப்பேறாகிய ஒளிவுகளையும், வல்லசித்தி யும்-வல்லமைபொருந்திய சித்திய யோகத்தையும், நீ தந்த ருள் தருணமீதெனக்கே-கடவுளே நீர் எனக்கு இந்த தரு ணத்தில் கொடுத்து கிருபைசெய்வாய். (எ-று) (கஎ)

தருணமின்ஞான்றே சுத்தசன்மார்க்கத்
  தனிநெறியுலகெலாந் தழைப்பச்,
கருணையுஞ் சிவமே பொருளெனக்கருதும்
  கருத்து முற்றெம்மனோர்களிப்ப,
பொருணிறையோங்கத் தெருணிலை விளங்கு
  புண்ணியம் பொற்புறவயங்க,
வருணயந்தருள்வாய் திருச்சிற்றம்பலத்தே
  யருட்பெருஞ் சோதியென்னரசே.

(இ-ள்) கடவுளே உன்னுடைய சுத்த சன்மார்க்க-தப் புறவுடைய நன்மையான உன்னுடைய மார்க்கத்தினது, தனிநெறி-தனிமையாகிய ஒழுங்கானது, உலகெலாந்தழைப்ப- உலகமெல்லாம் பரந்திருக்க, கருணையுஞ் சிவமே-உன்னு டையகருணைபொருந்திய ஒளியையே, பொருளெனக் கருதும்- ஆஸ்தியாக யெண்ணும்படியான, கருத்து முற்று-என் ணத்தைக்கொண்டே, எம்மனோர்களிப்ப-என்போலொத்தவர்

Koviloor Digital Library

கள் சந்தோஷமாக இருக்க, தருணமின்ஞான்றே-இந்த தருணத்திலே எனக்கு உன்னுடைய, பொருணிலையோகம்-உன்னுடைய ஒளியென்னும் முதலானது வளர்ந்தேமெ, தெருளில் விளங்க-இன்னும் என்னுடைய மனத்தின் கண் உன்னுடைய நிலையானது விளங்கும்படியாகவும் இன்னம், புண்ணியங்களெல்லாம், பொற்புறவயங்க-அலங்காரமாக நடக்கவும், வருணையர்தருள்வாய்- இப்படிப்பட்டவைகளெல்லாம் காணும்படியாக இஷ்டமுடனே கிருபை செய்து கொடுப்பாய், திருச்சிற்றம்பலத்தே-ஒளிவு பொருந்திய சிறு அம்பலத்தில், யருட் பெருஞ்சோதி-யருள் செய்யும் படியாகியயென்னரசே-என்னையாண்டு கொண்ட இராஜனாகிய கடவுளே(எ-று)(கஅ)

என்றுள வரைமேலரு ளொளியோங்கிற்
  றிருளிர வொழிந்தது முழுதும்,
மன்றுறு மிதயமலர்மலர்ந்தது நன்
  மங்கல முழங்குகின்றன சீர்ப்,
பொன்னியல் விளக்கம் பொலிந்தது சித்திப்
  பூவையர் புணர்ந்திடப் போந்தார்,
சொன்ன நற்றருணம ருட் பெருஞ்சோதி
  துலக்க வந்தருளுக விரைந்தே.

இ-ள்) என்றுள வரைமேல்-என்னுடைய இருதயத்திலுண்டாகி யிருக்கும் ஒரு சிறிய அவரையின்மேல், அருளொளியோங்கி-உன்னுடைய கிருபையாலுண்டான ஒளியானது பரிபூரணமாகி வளர்ந்ததினாலே. திரளிர வொழிந்தது முழுதும்-வறுமைக் கூட்டங்கள் யாவும் வேரோடு நீங்கினது, மன்றுறுமிதயம்-பொறுமையை யுடைய இருதயமானது, மலர்மலர்ந்தது-புஷ்பித்து, நமங்கலம்- நன்மையான மங்கலச் சொல், முழங்குகின்றது-சப்திக்கின்றது, சீர்ப் பொ

Koviloor Digital Library

ன்னியல் விளக்கம்- செழுமை பொருந்திய ஒளி விளக்கமானது, பொலிந்தது-அழகா யிலங்கி நிற்கின்றது, சித்திப் பூவையர் - அஷ்டமா சித்திகளாகிய அரம்பையர்கள், புணர்ந்திட-சேருவதற்காக வேண்டி, போந்தார்-சொன்னார்கள், சொன்ன நற்றருணம்-ஆதலால் நான் சொல்லிய இப்படிபட்ட நல்ல தருணத்தில், அருட்பெருஞ்சோதி-உன்னுடைய அருளாகிய பெருஞ்சோதியை, துலக்கி வைப்பதற்காக வேண்டி, வந்தருளுக விரைந்தே-சீக்கிரமாக வந்து கிருபை செய்வாயாக. (எ-று) (கக)

வந்தருள் புரிக விரைந்திது தருண
மாமணிமன்றிலே ஞான,
சுந்தரவடிவச் சோதியாய் விளங்குஞ்
சுத்த சன்மார்க்க சற்குருவே,
தந்தருள் புரிக வரமெலாம் வல்ல
தனியருட் சோதியை யெனது,
சிந்தையில் புணர்ப்பித் தென்னொடுங்கலந்தே
செய்துவித் தருள்க செய்வகையே.

(இ-ள்) வந்தருள்புரிக-கிருபை பொருந்திய கருணாகரக் கடவுளே! வந்து கிருபை செய்ய, விரைந்து-சீக்கிரமாக வர வேண்டும், இது தருணம்-இது சமயமாதலால், மாமணி மன்றிலே-பெரிய நவரத்தின சிம்மாசனத்திலே, ஞானச்சுந்தரவடிவம்-ஞானத்திற்கு ஆதாரமாய் அழகு பொருந்திய வடிவமுள்ள சோதியாய்-பிரகாசமாய், விளங்கும்-வீற்றிருக்கும், சுத்தசன் மார்க்க-பரிசுத்தமாகிய மெய்ஞ்ஞானமார்க்கத்திற்கு சற்குருவே-குருவாய் விளங்கும் கடவுளே, தந்தருள் புரிக வரமெலாம்- நான் கேட்ட வரம் யாவும் கொடுத்து, வல்ல தனியருட் சோதியை யெனது-வல்லமை பொருந்திய

Koviloor Digital Library

தனிமை யாகிய கிருபை பொருந்திய ஒளியை யென்னு டைய சிந்தையிற் புணர்ப்பித்து என்மனதில் பதியும்படி யாகச் சேர்த்து, என்றேன்றுங் கலந்து இன்னம் பென்றேறுகே லந்திருக்கும்படியாகிய வரங்கள் யாவையும், செய்வகை இப்படிபட்ட வகைகள் யாவையும், செய்து விந்தரு ளுக செய்து வைத்திடுவாய் எனது கிருபாகடாட்சமே.

(எ-று) (௨0)

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது பிரார்த்தனை முற்றிற்று.

பாடல் விருத்தம் ௨0. ஆகவிருத்தம் ககூ.

முற்றிற்று.

சுபம்.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE : -436846

A. No. 4403

Koviloor Digital Library